கல்கி




KALK
6.6.1971
40

எந்தக் காரணத்தால் உங்களுக்குத் தலைவலி வந்தாலும், அதைப் போக்க ஒரே ஒரு ஸாரிடான் போதும்!

தலைவலி பலவிதம். எந்தக் காரணத்தால் உங்களுக்குத் தலைவலி வந்தாலும், அதை விரைவில் போக்க ஒரே ஒரு ஸாரிடான் சாப்பிட்டால் போதும். ஸாரிடானில் சேர்க்கப் பட்டுள்ள கலவைப் பொருள்கள் தலைவலி, உடல்வலி மற்றும் பல்வலியுடன் கூடவே அனுபவ மாகும் சோர்வையும் போக்கு கின்றன; மற்றும் இதமளித்து புத்துணர்ச்சியும் ஊட்டுகின்றன. அதுவே ஸாரிடானின் தனிச் சிறப்பு!

ஸாரிடான்

'ரோஷ்'



'ரோஷ்' தயாரிப்பு




நடுத்தர வகுப்பினர் குறைந்த
விலையில் சிறந்த பட்டுப்
புடவைகளை அடைந்து, அணிந்து,
ஆனந்தம் அடைய வேண்டும்
என்ற லட்சியத்துடன் பிறந்த
சாரதாஸ் தனது இரண்டாவது
வயதில் தளிர்நடை போட்டு
பிரவேசிக்கிறாள். உங்களுடைய
அன்பு, ஆதரவு, பரிவு, பாசம்
இவை அனைத்தும் முன்போலவே
தொடர வேண்டும் என்று
நமஸ்கரிக்கிறாள்.
சாரதா'ஸ்
(ஏர்கண்டிஷண்ட்)
தன் பில்டிங்,
மவுண்ட் ரோடு,
சென்னை-2. போன்: 87177
32, N.S.B. ரோடு,
திருச்சி-2. போன்: 7077

பொருளடக்கம்

விரோதிகிருது, வைகாசி 23 - ஜூன் 6, 1971

அட்டைப் படம்: ஹரிஹரன்

★

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கிக்கு வரும் கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் முதலானவற்றில் பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவை, போதிய தபால் தலைகளுடன் கூடிய முகவரியிட்ட உறையோடு வந்திருந்தால் அவ்வப்போது திருப்பி அனுப்பப்படுகின்றன. போதிய தபால் தலைகளுடன் வராத கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் பற்றி இக்காரியாலயம் பொறுப்பேற்பதற்கில்லை.

ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி தேவஸ்தானம்

திருச்செந்தூர்



ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, ஸ்ரீ ஷண்முகர் ஸ்ரீ வள்ளி அம்பாள், ஸ்ரீ தேவசேனு அம்பாள், பரிவாரமூர்த்திகளுக்கும் 24-6-71ந் தேதி காலை 4 மணி முதல் 5-30 மணிக்குள் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் (குட முழுக்கு) நடைபெறும்.

16-6-71ந் தேதி முதல் 24-6-71ந் தேதி முடிய யாக சாலை பூஜை நடைபெறும்.

அனைவரும் மஹா கும்பாபிஷேகத்தைக் கண்டு பேரானந்தமடைய வேண்டுகிறோம். பெரும் பொருள் நன்கொடையாக நிருவாக அதிகாரிக்கு அனுப்பிச் செந்திலாண்டவனின் கருணை பெற வேண்டுகிறோம்.

ஆலய நிர்வாகிகள்

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்



மலர் 30

இதழ் 45

பெரியவாள் என்ற பேரருள்

வைகாசி மாத அநுஷ நட்சத்திரம் என்பது நமக்கு ஒரு புண்ணிய தினமாகும். சத்தியத்துக்கும், சநாதன தர்மத்துக்கும், பரம ஞானத்துக்கும், பேரருளுக்கும் ஒரு விக்கிரகமாக நம்மிடை வாழ்ந்து வரும் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரியவாள் அவதரித்த புனித நாள் அதுவே. இந்த வைகாசி அநுஷத்தன்று (ஜூன் 8ந் தேதி) அவர்கள் தமது பவித்திரமான பெரு வாழ்வில் எழுபத்தெட்டாவது ஆண்டைத் தொடங்குகிறார்கள்.

சரித்திர காலத்துக்கு முன்பிருந்தே இந்தப் பாரத தேசத்தில் மகா ஞானிகள் பலர் இருந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரது அநுபூதியும் திரண்டு வந்தது போல் இன்று நம்மிடை வாழ்பவர் ஸ்ரீ பெரியவாள். மற்ற ஞானியர் வசித்த காலத்தைவிடத் தீமையும், துராசாரமும், நாஸ்திகமும், லௌகிகமும் மிக மிக மலிந்த காலம் இது. இப்படிப்பட்ட சமயத்தில் பரிபூர்ணமாக சநாதன தர்மத்தை வாழ்ந்து காட்ட ஒரு பெரியவாள் இருப்பதுதான் அதிசயத்திலும் அதிசயம். உலகச் சூழல் ஓரளவு சுத்தமாகவே இருக்கும் போது ஒரு மகான் புரிகிற பணியை ஸ்தூலமாக நன்கு காட்டி விடலாம் — புதிதாகக் கட்டிய ஓர் ஆலயத்தைக் காட்டுவது போல். ஆனால் இடிந்து கொண்டிருக்கும் ஒரு புராதன ஆலயத்தைப் புதுப்பித்து வரும் திருப்பணியை இவ்வளவு தெற்றென வெளிக் காட்ட முடியாது. எனினும் இந்தத் திருப்பணி நடக்கா விட்டாலோ, அத்தனை கோபுரங்களும், விமானங்களும் நொறுங்கி விழுவதைப் பயங்கரமான முறையில் கண்டு விடுவோம். புராதன தர்மம் இவ்வாறு நொறுங்கி விழுகிற சமயத்தில், பெரியவாள் என்ற திவ்விய மூர்த்தி அவதரித்து, இந்தப் பெரும் கோபுரத்தைத் தூக்கி நிறுத்திவருகிறது.

காமகோடி பீடாதிபதி என்கிற முறையில், மடத் தலைவர் என்கிற ரீதியில் அவர்கள் தர்ம ஸம்ஸ்தாபனத்துக்காக ஒரு வைர விழாக் காலத்துக்கும் அதிகமாக அரும் பணி செய்தார்கள். கடந்த இரண்டாண்டுகளாக — அவர்களது எழுபத்தாறுவது ஜயந்தி தினத்திலிருந்து— அவரது திருப்பணிகளுக்கெல்லாம் பட்டாபிஷேகம் போல் ஷண்மத மகாநாடு தொடங்கிய அன்றிலிருந்து — அவர்கள் மடத்திலிருந்தும் விலகியிருக்கிறார்கள். பெரியவாளின் சம்பூரணமான வைராக்கியத்துக்கு இது ஓர் அற்புத சான்று. மகா திரிபுரசுந்தரி சமேத சந்திர மௌளீசுவரரை மணிக்கணக்கில் ஆராதித்துக் கோலாகல பூஜை புரிந்து வந்த பெரியவாள் அதையும் விட்டுவிட்டார்கள்.

அறுபதாண்டுகள் ஓயாத செயலுக்கிடையிலும் செயலின்மையாக, பேச்சுக்கிடையிலும் மௌன நிலையாக இருந்தவர் இரண்டாண்டுகளாகச் செயலின்மைக்குள் செயல்திறனுக, மௌனத்தினுள் மகாவாக்கியமாக வாழ்ந்து வருகிறார். மடத்தையும், பூஜையையும் விட்ட போதிலும் பெரியவாள் விடவே முடியாத ஒன்று உண்டு. அதுதான் அருள் என்பது. சங்கற்பமில்லாமலேயே சூரியன் ஜீவசக்தியைப் பொழிவது போல், சங்கற்பமில்லாமலே சந்திரன் நிலவைப் பொழிவது போல், சங்கற்பமில்லாமலே மலர்கள் நறுமணம் வீசுவது போல், சங்கற்பமில்லாமலே அருளைப் பெருக்கி வருபவர் ஸ்ரீ பெரியவாள். வெளிக் காரியமில்லாவிடினும் அந்த அருள் சக்தி எத்தனை எத்தனையோ ஆன்மாக்களை சத்காரியங்களில் ஊக்கிக் கொண்டுதான் இருக்கும் ; வெளிப்படைப் பூஜை இல்லாவிடினும், பெரியவாளின் மௌனமே எண்ணற்ற ஜீவர்களைப் பூஜை புரஸ்காரங்களில் செலுத்திக்கொண்டுதான் இருக்கும்.

இருள்வலையில் வீழ்ந்துள்ள நம்மிடை இந்த அருள் நிலையம் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து, நம்மையும் வாழ்விப்பதற்கு ஸ்ரீ காமாட்சி அன்னை இன்னருள் புரிவாளாக !

ராஜாஜியின் கருத்துக்கள்


அறிகுறிகள் யாவும் ஒளியிழந்தே காண்கின்றன. பாகிஸ்தானுக்குப் பகுத்தறிவு உதயமாகும் என்று தோன்றவே இல்லை. அடக்குமுறையின் இடத்தில் சமாதான நடவடிக்கை இடம் பெறும் என்ற நம்பிக்கை ஏற்படவில்லை. அடக்குமுறையால் பெறுகிற வெற்றியினால் உள்நாட்டுத் துவேஷங்கள் ஒங்குவது தவிர நன்மை ஏதும் விளையாது என்று பாகிஸ்தான் உணரக் காணோம். மேல் நாட்டு வல்லரசுகள் தங்கள் சக்தியில் நம்பிக்கை இழந்து, கம்யூனிஸ்ட் சீனத்தின் தயவுக்கே தெற்கு ஆசியாவை விட்டுவிட முடிவு செய்து விட்டதாகத் தெரிகிறது. பாகிஸ்தான் சச்சரவில் தலையிடுவது தங்கள் காரியமல்ல என்று அவை தீர்மானமாக முடிவு கட்டிவிட்டதாகத் தோன்றுகிறது.

கிழக்கு மேற்கு இரண்டையும் சேராத ருஷியாவுக்குச் செல்வாக்கு உள்ளது என்பது இன்னமும் என் நம்பிக்கை. ருஷியா இன்னும் தன்னம்பிக்கை இழக்கவில்லை என்பதும் என் நம்பிக்கை. எனவே, அது பாகிஸ்தானை நல்ல முறையில் வலியுறுத்த முடியும். போரை விட்டுப் பேச்சு வார்த்தையில் இறங்குமாறு கிழக்கு வங்க மக்களை ஒடுக்குவதற்கு அதிக நிர்ப்பந்தம் செய்ய வேண்டியதில்லை. இவ்விதம் செய்து ஒரு மகத்தான மாறுதலை விளைவித்து, தெற்கு ஆசியாவைப் பொருளாதாரத்திலும் அரசியலிலும் காப்பாற்றுவதற்கு ருஷியாவின் தலையீடு உதவும். இதற்கு மேற்கத்திய வல்லரசுகளும் மனம் வைத்தால் ஒத்துழைப்பு நல்கலாம். ஒத்துழைப்பை ருஷியா வரவேற்கவே செய்யும். கிழக்கு — மேற்குப் பாகிஸ்தான் மக்களும் இதனை வரவேற்பர். மேல்நாடுகள் விஷயம் எப்படியானாலும் சரி, ருஷியா தீவிரமாகச் செயலில் இறங்குவதற்குப் போதிய காரணம் உண்டு. அதற்குரிய சக்தியும் ருஷ்யாவுக்கு உள்ளது என்பதே என் நம்பிக்கை.

★

சத்திய சாட்சாத்காரத்துக்கு ஹிந்து மதம் ஒன்றே வழி என்று நமது சமயம் தனி உரிமை பாராட்டாததே அதன் தனிப் பெருமை. எந்த ஒரு மதமும் இவ்விதம் தனி உரிமை பாராட்டக் கூடாது. எல்லா மதங்களும் சத்தியத்துக்கு அழைத்துச் செல்லும் வெவ்வேறு மார்க்கங்களெனப்பதுநமதுமதம்.

மதம் என்பது சாஸ்திரங்களை நன்கு கற்பதே என்று பண்டிதர்கள் எண்ணத் தலைப்படுவது இயற்கை. ஆனால் மதம் என்பது பாண்டித்தியம் அல்ல. அது வாழ்ந்து காட்ட வேண்டிய விஷயம். ஹிந்து மதம் சகல மார்க்கங்களையும் ஏற்கிறது என்ற உண்மையை அநுபவத்தில் வாழ்ந்து காட்டி அதன் தனிப் பெருமையை வெளிப்படுத்தினார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர். இந்த சர்வமத சமரச உணர்வு இன்று உலகம் இருக்கும் ஆபத்து நிலையில் மிகவும் பயனுள்ளதாகும். ஆனால் இந்த மகத்தான உலகியல் பயனும் கூட இரண்டாம் பட்சமே. 'எல்லா சமய மார்க்கங்களும் சத்தியத்துக்கு இட்டுச் செல்பவையே; இதுவே பூரணமான சத்தியக் கொள்கை' என்ற காரணத்துக்காகவே அதை ஏற்க வேண்டும். ஆன்மிக உண்மையை இவ்விதம் உள்ளபடி கண்டதாலேயே ராமகிருஷ்ணரும், காந்திஜியும், அசோகரும்சமரசத்தை ஓதினார்கள். சிரமப்பட்டுச் சாஸ்திரங்களையும்





தமிழகத்தின் புது கவர்னராகப் பதவி ஏற்றுள்ள ஸ்ரீ கே. கே. ஷா அவர்கள் மே 27-ந் தேதி தமது மனைவியாருடன் பூஜ்ய ராஜாஜியின் இல்லத்துக்கு வந்து ஆசி பெற்றுச் சென்றார். ஸ்ரீ ஷா அவர்களுக்கு நல்வரவு கூறி நல்வாழ்த்துக்களை அளிக்கிறோம்.

பாஷ்யங்களையும் படித்தால் மத சித்தாந்தங்களைப்பற்றி நிறைய விஷயஞானம் பெறலாம். ஆனால் இந்த விஷய ஞானத்தை ஆன்மாவுக்குள் ஆழப் புதைத்து அதை இயல்பான உணர்வாகவும் செயலாகவும் பரிணமிக்கச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அத்தனை சித்தாந்த ஞானமும் வெறும் சாணக் குவியலேயாகும். சாணக் குவியலைப் பூமியில் ஆழப் புதைத்தாலே அது ஜீவசாரம் ஊட்டும் அற்புதமான உரமாகும்.

★

மொழி என்பது முக்கியமாகப் பேச்சின் மூலமே உருவாகி வளர்வது, எழுத்தின் மூலம் அல்ல. முதலில் மக்களால் பேசப்படுவதே மொழி. பிறகுதான் அது எழுதப்படுகிறது. எழுதப் பெறுகையில் மொழிக்குப் பொது விதிகள் உண்டாக்கப்படுகின்றன. இவ்வாறு இலக்கணம் இயற்றப்படுகிறது. பேசும் மொழியில் உள்ள உயிரும் சக்தியும் எழுத்து மொழிக்கு இல்லை. பேசும் மொழியில் கட்டுப்பாடுகள் அதிகம் இல்லை. சௌகரியத்தை உத்தேசித்துச் சில வார்த்தைகளை ஊகத்துக்கு விட்டு விட்டுப் பதங்கள் சேர்க்கப்படுகின்றன. இது காரணமாகச் சில மொழிகள் அற்புதமாக வளர்ந்துள்ளன.

ஹிந்தியின் பலவீனம் இந்த அம்சத்தைக் குறித்ததே என்று அந்த மொழி உற்சாகிகளுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ஆங்கிலத்தில் Foreign Minister என்று சொன்னாலே அந்நிய விவகாரங்களைக் கவனிக்கும் மந்திரி என்று பொருள் கொடுக்கும். ஆனால் ஹிந்தியில் 'விதேச மந்திரி' அல்லது 'பாஹர் அமாத்ய' என்றால் அந்நிய மந்திரி என்று மட்டுமே பொருளாகும். இதை, 'அந்நிய நாட்டைச் சேர்ந்த மந்திரி' என்று தப்பாகவும் பொருள் கொள்ள இடமுண்டு. ஏனெனில், ஆங்கிலம் பேச்சு வழக்கில் இயல்பாக உருவானது. ஹிந்தியோ புத்தகத்தாலும், பத்திரிகையாலும் உருவாக்கப்பட்டு வருகிறது. அது மக்கள் பேசிப் பேசி உருவாகவில்லை. மொழி விஷயத்தில் இயற்கை விதிகளை அநுசரிப்பதற்கு ஒரு பெரிய இயக்கமே நடத்த வேண்டியிருக்கிறது!

உள் விவகார மந்திரி, வெளி விவகார மந்திரி என்பனவற்றுக்கு 'அந்தர் (விவகார்) அமாத்ய', 'பாஹர் (விவகார்) அமாத்ய' என்று ஆரம்ப காலத்தில் பெயர் கொடுத்து, நாளாவட்டத்தில் நக வளைவுக்குள் உள்ள 'விவகார்' என்ற பதத்தை விட்டுவிடப் பயில வேண்டும்.

நன்கு பழகிவிட்ட ஆங்கிலப் பெயர்களை மாற்றலாகாது என்ற கருத்தை ஏற்காவிடினும் இதுபோல ஏதேனும் செய்ய வேண்டும். ஏதேனும் காரணம் காட்டி நூதன ஹிந்தி நாமகரணத்தைப் பிரதமர் கிடப்பில் போடுவார் என்று நம்புகிறேன்.

எதிர்பார்த்தது போலவே ஹிந்தி மாற்றத்துக்கு ஆட்சேபணை தெரிவித்திருக்கிறது தமிழக அரசாங்கம். ஏதோ ஒரு மிக முக்கியமான விஷயம் குறித்து மத்திய சர்க்காரிடம்

திரு கருணாநிதி மகத்தான போராட்டம் நடத்துவது போல் ஒரு தோற்றத்தை எழுப்ப வசதி ஏற்பட்டிருக்கிறது! டில்லி செய்த ஒரு தவறு இவ்விதம் திரு கருணாநிதிக்கு அதிருஷ்டப் பரிசாக அமைந்திருக்கிறது.

இந்த ஆட்சேபணையுடனேயே திருகருணாநிதி தமிழ் நாட்டில் உல்லாசப் பயண விடுதிகள் கட்டுவதற்கு நிதிக் கோரிக்கையும் டில்லிக்கு அனுப்பக்கூடும்! உல்லாச ஸ்தலங்களில் எல்லாம் வசதி நிறைந்த ஹோட்டல்கள் நிறைய எழும்பி வருகின்றன. பிரயாணிகளின் தேவைகளுக்கு இவையே போதும். மற்றபடி முக்கியஸ்தர்களான விருந்தாளிகளை கவர்னர் உபசரிக்கலாம்.

*

ஸ்ரீ சஞ்சீவ ரெட்டி அவர்கள் ஸ்தாபன காங்கிரஸின் காரியக் கமிட்டியுடன் தமது தொடர்பை முடித்துக் கொண்டிருப்பதின் பொருள் எனக்குப் புரியவில்லை. அவர் கட்சியிலிருந்தே ராஜிநாமா செய்து விட்டார் என்று அர்த்தமா? ஸ்தாபன காங்கிரஸை மெல்ல மெல்லக் கொலை செய்கிற போக்கில் சிலர் முனைந்து வருவதாகத் தோன்றுகிறது.

கொள்கை ரீதியில் 'வழவழ குழகுழ' என்று 'மிதந்து' கொண்டேயிருந்தால், என்றாவது ஒரு நாள் அந்தக் கட்சிக்கு அதிசய வளர்ச்சி ஏற்பட்டு விடும் என்று அந்தக் கட்சியில் சிலர் நம்புகிறார்கள் போலும்!

இந்திரா காங்கிரஸின் சர்க்கார் சர்வாதிபத்தியக் கொள்கைக்கு 'சோஷலிஸம்' என்று மாய வேஷம் தந்திருப்பது அபாயகரமானது எனில், ஸ்தாபன காங்கிரஸார் 'நாங்களும் சோஷலிஸ்டுகளே' என்று உடன் பாடுவதோ தற்கொலைக்கு ஒப்பேயாகும்.

என்ன சேதி?

இது நடுநிலைமை இல்லை

சில நாத்திகர்கள் தமிழ்நாடு முதலமைச்சரிடம் ராமாயணத்துக்குத் தடை விதிக்க வேண்டினார்களாம். 'இதுகாறும் தடுக்கப்பட்டிருந்த ராவண காவியத்தின் மீதுள்ள தடையைக்கூட நீக்கிவிட்டேன். ராமாயணத்துக்கு எவ்விதம் தடை போட முடியும்' என்று அவர் பதில் கூறினாராம். இதனால் நாத்திகத்துக்கும் ஆஸ்திகத்துக்கும் நடுநிலைமை வகித்து வருவதாகத் திரு கருணாநிதி எண்ணுகிறார் போலும். இது உண்மை நடுநிலைமையல்ல. கோடிக்கணக்கான மக்கள் அவதார புருஷராக வணங்கி வரும் ஸ்ரீ ராமனை அவமதித்து நூல் எழுதுவதற்கு உரிமை இருக்குமானால், புத்தர், ஏசுகிறிஸ்து, மகம்மது நபி போன்ற மதப் பெரியார்களின் வரலாறுகளைத் திரித்து அவதூறு செய்வது சட்டசம்மதமான செயலாகும். சில வருஷங்களுக்கு முன் வட இந்தியாவில் ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர் ரங்கீல ரசூல் என்ற நூலில் மகம்மது நபியைப் பற்றித் தாறுமாறாக எழுதியிருந்தார். தாம் எழுதியது சரித்திர பூர்வமானது என்று வாதித்தார். ஆனால், முஸ்லிம்களும், இந்துக்களும் ஒரே குரலில் அதனைக் கண்டித்து அந்நூல் தடுக்கப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்டது. அதோடு முஸ்லிம்கள் திருப்தியடையவில்லை. ஆசிரியரையும், பிரசுரித்தவரையும், அச்சகத்தையும் தண்டிக்கும்வரையில் பெரும் கிளர்ச்சி செய்தனர்.

மதங்களின் தெய்வங்களையும், பெரியோர்களையும் அவமதித்து அவர்களின் பக்தர்களைப் புண்படுத்துவதற்கும் எவருக்கும் உரிமையோ சுதந்தரமோ இருக்க முடியாது. ஏன்? சிலப்பதிகாரத்தின் கதாநாயகியான கண்ணகியின் கற்பைப் பழித்தோ, தமிழ்நாட்டின் ஞானப் பெரியாரான திருவள்ளுவரை அவமதித்தோ ஒருவன் எழுதினால் அதைத் திரு கருணாநிதி ஒருபோதும் அனுமதிக்கமாட்டார் என்றே நம்புகிறோம். அனுமதிக்கவும் கூடாது. நாஸ்திகர்கள் தங்கள் கொள்கைகளை சுதந்திரத்துடன் பிரசாரம் செய்யட்டும். அவர்களின் எழுத்தாளர்கள் ஆதர்ச நாஸ்திக நாயகர்களையும், நாயகிகளையும் சிருஷ்டிக்கட்டும். ஆனால் ஆஸ்திகர்களின் மனத்தைப் புண்படுத்தும்படி அவர்களை விட்டுவிட்டால் அது அக்கிரமமாகும். அனர்த்தத்திற்கும் வழிவகுக்கும். அதிர்ஷ்டவசமாக இந்துக்கள் சகிப்புத்தன்மையுள்ளவர்கள். தங்கள் தெய்வங்களைப் பழிப்பவர்களை மூடர்களென்று அலட்சியம் செய்துவிடுவார்கள். ஆனால் அவர்களில் சிலர் தீவிர உணர்ச்சியுள்ளவர்களாகவுமிருப்பார்கள் என்பதை அரசாளுவோர் மறக்கலாகாது. எவ்வித மதப் பூசலுக்கும் இடம் கொடுக்கலாகாது.

நர்மதைக் கரையில் நற்றமிழர் ஆலயம்

மத்தியப் பிரதேசத் தலைநகரான போபாலில் உள்ள ஹெவி எலெக்ட்ரிகல்ஸைச் சேர்ந்த தென்னிந்தியர்கள் ஓர் அரிய தெய்வப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். 'கோவிந்தபூர் பஜன் சமாஜ்' என்ற ஸ்தாபனத்தை அமைத்துக் கொண்டு, ஸ்ரீ காஞ்சி ஆசாரியாளின் பூரண அநுக்கிரகத்துடனும், ஸ்ரீ காஞ்சி மடத்தின் பூரண ஒத்துழைப்புடனும் போபாலில் தமிழக பாணி ஆலயம் ஒன்றினை எழுப்பியிருக்கிறார்கள். 1970 ஜூன் மாதத்தில் ஸ்ரீ விஜய கணபதிக்கும், பாலமுருகனுக்கும் சந்நிதிகள் பூர்த்தியாகிக் கும்பாபிஷேகம் நடந்தேறியது. இப்போது, பார்வதி, பரமேசுவரன், கோதண்டராமன், அநுமன், நவக்ரஹங்கள் ஆகியோருக்கும் சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஜூன் ஆறாந் தேதியன்று அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடக்கிறது. இக்கோயிலில் ஒரு லட்சம் ரூபாய் செலவில் மகா மண்டபம் நிர்மாணிக்கத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். கீழ்க்கண்ட முகவரிக்குப் பொருள் அனுப்பித் திட்டம் விரைவில் நிறைவேற அன்பர்கள் உதவுவராக! Treasurer, Govindpur Bhajan Samaj, B - Sector, Piplani Colony, Bhopal.

உள்ளும் புறமும்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

(ஸ்ரீ காமகோடி பெரியவாள் அநுபூதிச் சிகரம் மட்டுமல்ல; எளிமையின் எல்லையும் ஆவார். சின்னஞ் சிறியோரான நம்மைத் தம்மிலும் உயர்த்தி வைத்து அவர் அருளிய உன்னத மொழிகளைப் பாருங்கள்!)

"எல்லோரும் அவரவருக்கு உரிய கர்ம அநுஷ்டானங்களைச் செய்ய வேண்டும்; ஆசாரங்களை அநுசரிக்க வேண்டும்; விபூதி, திருமண், ருத்ராட்சம் போன்ற சின்னங்களைத் தரிக்க வேண்டும்" என்றெல்லாம் நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன். சிலர் இதெல்லாம் எதற்கு என்று நினைக்கிறார்கள். "நல்ல சீலங்களுடன் இருக்க வேண்டியதே முக்கியம். சீலம் மனசைப் பொறுத்த விஷயம். சமய ஆசாரங்களெல்லாம் வெளி விஷயம். இவை இல்லாமலே சீலத்துடன் இருந்தால் போதாதா?" என்று எண்ணுகிறார்கள்.

உடம்பை வளர்க்கும் பாலைப் போல உள்ளத்தை வளர்ப்பது சீலம். ஆனால் பால் வேண்டும் என்றால் அது தனியாகக் கிடைக்காது. பசுவை வைத்துப் பராமரித்தாலே பால் கிடைக்கும். அதோடு வைக்கோல், சாணம் எல்லாமும் வந்து சேரத்தான் செய்யும். "பால்தானே வேண்டும்? வைக்கோலும் சாணமும் எதற்கு?" என்று கேட்டுப் புண்ணியமில்லை. புறச் சடங்குகள் சிலருக்கு வேண்டாத வைக்கோலாகவும், சாணமாகவும் தோன்றலாம். ஆனால் சீலம் என்ற க்ஷீரம் வேண்டுமானால் இவையும் வேண்டும்.

தமக்குள்ளே பரமாத்ம ஸ்வரூபத்தின் பிரகாசத்தை உணர்வதே நிலையான ஆனந்தம். கலங்கிய மனம் தெளிந்தால்தான் உள்ளேயிருக்கும் பரமாத்ம வஸ்து புலனாகும். 'நான்' 'எனது' என்ற அகங்கார உணர்வுடன் காரியங்களைச் செய்யும் வரையில் கலக்கம் தெளியாது. பொதுவான சமூக க்ஷேமம் ஒன்றையே லட்சியமாகக் கொண்டு அவரவருக்கும் விதித்துள்ள கர்மங்களைச் செய்தால் சுயநல எண்ணம் போகிறது; சித்தமலம் நீங்குகிறது; சீலம் பிறக்கிறது; சமூக க்ஷேமத்தோடுகூட பரமாத்ம அநுபவமும் கிடைக்கிறது.

வெளியில் செய்கிற காரியமும், வெளியில் அணிகிற சின்னங்களும் கூட உள்ளுக்கு நன்மை செய்கின்றன. உடலின் காரியமும் உள்ளத்தின் பாவமும் பரஸ்பரம் சம்பந்தமுடையவை. ஒரு திருஷ்டாந்தம் சொல்கிறேன்: லாட்டரியில் தமக்கு லட்ச ரூபாய் விழுந்திருக்கிறது என்று ஒருவர் சற்றும் எதிர்பாராமல் கேள்விப்படுகிறார். உடனே எல்லையில்லாத சந்தோஷம் உண்டாகிறது. இது ஒரு மனோபாவம்தான். ஆனால் இந்த மனோபாவம் காரணமாக அவரது உடம்பில் ஒரே படபடப்பு உண்டாகிறது. மூச்சு அப்படியே சிறிது காலத்துக்கு அடங்கி மூர்ச்சையாகி விடுகிறார். 'குறிப்பிட்ட உணர்வு உண்டானால் இன்னவிதமாக சுவாசம் மாறுகிறது' என்ற நடைமுறை உண்மையைத் திருப்பி வைத்துக் குறிப்பிட்டபடி சுவாசப் பயிற்சி - பிராணாயாமாதிகள் - செய்தால், இன்ன ஆத்ம க்ஷேமங்களை அடையலாம் என்று யோக சாஸ்திரம் விவரிக்கிறது. வெளித் தோற்றமே உள் உணர்வைச் சொல்கிறது. கோபம் வந்தால் கண் சிவக்கிறது. உதடு துடிக்கிறது. துக்கம் வந்தால் எதற்காகவோ கண்ணிலிருந்து ஜலம் ஜலமாகக் கொட்டுகிறது. சந்தோஷம் வந்தால் பல்லெல்லாம் தெரிகிறது. உடம்புக்கும் உணர்வுக்கும் சம்பந்தம் இருப்பதால் இன்னபடி ஆசனம் போட்டால் இந்தந்த ஆத்ம குணங்களுக்கு அநுகூலமாகும் என்று மகான்கள் வழி கண்டிருக்கிறார்கள்.

மிலிடரிக்காரன் யூனிபாரம் போடாவிட்டால் அவனுக்கு வீரம் வராதா என்று கேட்பவர்கள் கேட்கலாம். ஆனால் மிலிடரிக்காரன் என்றால் லோகம் முழுக்க அவனுக்கென்று யூனிபாரம் இருக்கத்தான் இருக்கிறது. அதுவே வீரத்தைத் தூண்டுகிறது என்றும் சொல்கிறார்கள்.

வெளியில் தரிக்கும் சின்னம், வெளியில் செய்கிற ஸம்ஸ்காரம் இவை உள்ளுக்கும் நன்மை தருவன. வெறும் வேஷம் என்று நினைத்தால் வேஷமாகவே போகும். 'ஆத்மார்த்தமாக, ஜீவனைப் பரிசுத்தம் செய்து கொள்வதற்காக இந்த ஸம்ஸ்காரத்தைச் செய்கிறேன்; சின்னத்தை அணிகிறேன்' என்று உணர்ந்தால் சத்தியமாகவே உள்ளே சுத்தி செய்கிறது. புறத்தில் செய்வது உள்ளுக்கு உதவுகிறது.

நான் ஸம்ஸ்காரங்களை முக்கியமாகச் சொல்வதோ, ஆசாரங்களை விடாமலிருப்பதோ, விபூதி, ருத்திராட்சம் முதலிய சின்னங்களைத் தரிப்பதோ பெரிதில்லை. நான் மடாதிபதி. ஆதலால் இதெல்லாம் என்னிடம் இருந்தால்தான் என்னிடம் வருவீர்கள்; என் மடம் நடக்கப் பணம் கொடுப்பீர்கள். எனவே இவையெல்லாம் எனக்குக் காரியார்த்தமாகவும் வேண்டியிருக்கின்றன. ஆனால் உங்கள் விஷயம் அப்படியில்லை. உங்களுக்கு ஜீவனோபாயம் வேறு விதத்தில் கிடைத்துவிடுகிறது. ஆதலால் என்னைவிட சிரேஷ்டமாக, முழுக்க முழுக்க ஆத்மார்த்தமாகவே நீங்கள் ஸம்ஸ்காரங்களைச் செய்து, சின்னங்களைத் தரித்துக் கொண்டு பரிசுத்தம் பெற முடியும்.

பரம சத்தியத்தை நினைவூட்டும் சின்னங்களைத் தரித்துக் கொள்வோம்; கெட்ட வழியில் போகாமல் தடுக்கும் நல்ல கர்மங்களை அநுஷ்டிப்போம்; அதனால் சீலம் பெறுவோம்; சித்த சுத்தி பெறுவோம்; இந்தத் தெளிவின் பயனாக அனைத்துமான ஏக பரம்பொருளை உணர்வோம்; ஆனந்தமாக இருப்போம்!

நம: பார்வதி பதயே! ஹர ஹர மகாதேவ!

காஞ்சி ஜகத்குரு: தெய்விகத்தின் திருஉருவம்

டெஹரான் சர்வகலாசாலையின் துணைவேந்தர் ஸய்யீத் ஹுஸைன் நாஸர்

[ஆழ்கடல் நதியை அழைத்துத் தன்னில் ஒடுக்கிக் கொள்வதுபோல், ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரியவாளின் திருவுள்ளம் சில பரிபக்குவம் வாய்ந்த ஆன்மாக்களைக் கண்ட மாத்திரத்தில் தன்னிடம் லயிக்கச் செய்து விடும். இந்தப் பேரருள் பிரவாகத்துக்குப் பாத்திரமாகும் பாக்கியத்தைப் பெற்ற ஒருவர் பெர்ஷியாவிலுள்ள டெஹரான் சர்வகலாசாலைத் துணைவேந்தரான தத்துவப் பேரறிஞர் 'டாக்டர்' ஸய்யீத் ஹுஸைன் நாஸர் அவர்கள். சென்ற ஆண்டு டிசம்பர் 11ந் தேதியன்று அவர் உண்மையான ஆத்ம தாகத்துடன், ஞானப் பசியுடன் காஞ்சிபுரத்தில் ஒரு பனந்தோப்பில் ஸ்ரீ காமகோடி பெரியவாளை அணுகினார். ஆத்மிக காமதேனுவான பெரியவாள் அப்போதைக்கப்போதே அவரது தாகத்தைத் தீர்த்தார்; ஞானத்தில் அக்ஷய பாத்திரமான பெரியவாள் அவருக்கு உளம் புடைக்க அமுது படைத்தார். அந்தக் கனமான அநுபவத்தில் அழுந்திப் போனார் இஸ்லாம் மதத்தவரான ஸய்யீத் ஹுஸைன் நாஸர். பெரியவாளை விட்டுப் பிரியாவிடை கொண்டு காஞ்சியிலிருந்து புறப்பட்ட பின்பும் தாயை நினைக்கும் குழந்தையாகவே இருந்தார். கார் வெகுதூரம் வளைந்து வளைந்து வருகின்றபோது காரினுள்ளேயே பெரியவாள் இருக்கும் திசை நோக்கித் திரும்பித் திரும்பி அமர்ந்து வணங்கினார். பெரியவாளிடம் இவ்விதம் பக்தியில் நனைந்த அந்தப் பேராசிரியரிடமிருந்து, சென்னை சர்வகலா சாலை தத்துவத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் வீழிநாதன் அவர்கள் வரவழைத்துள்ள 'சிறப்புக்' கட்டுரையை, நமது பரமாசாரியர்கள் எழுபத்தெட்டாம் பிராயத்தில் பிரவேசிக்கும் இந்தப் புண்ணிய சமயத்தில் அஞ்சலி பூர்வமாக இங்கு வெளியிடுகிறோம்.

— ஆசிரியர்]

சர்வ சுதந்திரம் வாய்ந்த தெய்வ சக்தி மட்டும் விருப்பம் கொண்டுவிட்டால் போதும், தன்னையே ஓர் உருவில் வெளிப்படுத்திக் கொள்கிறது. இதை சுய அநுபவத்தில் காண வேணுமென்றால், புனிதர்களான ஸ்ரீ ஜகத்குருவின் திரு வடிவைக் கண்டாலே போதும். அவரிடமிருந்து நமக்குப் புத்துயிரூட்டும் ஒரு தென்றல் வீசிக் கொண்டேயிருக்கிறது. அந்தத் தென்றலின் குளிர்ச்சி மனிதனைத் தெய்வத்திடமிருந்து பிரித்து வைக்கும் உலகியல் வாழ்வு என்ற தீயை அடியோடு அணைத்து விடுகிறது. இந்தத் தென்றலை அநுபவிக்கும் கௌரவத்தை, அநுக்கிரகத்தைப் பெற்றாலே போதும், சர்வ சக்தி வாய்ந்த தெய்வ சுதந்திரம் தன் இச்சைப்படி ஓர் உருவை எடுத்துக் கொண்டு வெளிப்படுகிறது என்பதை உணர்ந்துவிடலாம்.

முஸ்லீமாகிய நான் இஸ்லாம் மதத்தின் பரம புனிதமான திருக்கோயில்களிலும், முஸ்லீம் மத மகா ஞானிகளின் சந்நிதியிலும் எந்தத் தேஜோமயத்தின் நெருக்கத்தை நன்கு உணர்ந்திருக்கிறேனோ, அதே ஒளியின் அண்மையைக் காஞ்சிபுரத்துப் பனந்தோப்பில் புனித

"புத்துயிரூட்டும் தென்றல்"



ஜகத்குருவிடம் அநுபவித்தேன். பாரத தேசத்தின் அமரத்துவத்துக்கே உரியதொரு பேசாமொழி உண்டு. அந்த அமிருத மௌனம் இமாலயக் கொடுமுடிகளைப் போலவே நிரந்தரமாக, ஆழமாக வேரூன்றி நிலைத்த ஒன்று. இந்த அமுத மௌனநிலை ஜகத்குருவின் கண்களில் பிரகாசிக்கிறது. அந்தக் கண்களின் ஒளிக்கிரணம் நமது இதயத்தின் மத்திக்கே துளைத்துச் செல்கிறது; அங்கு சர்வேசுவரனின் சிம்மாதனம் போடப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. ஜகத்குருவின் கடாக்ஷம் பட்ட மாத்திரத்தில், பித்தளை பொன்னாவதுபோல் இதயத்தில் உடனுக்குடனே ஒரு ரஸவாதம் நிகழ்கிறது; மாமிச பிண்டம் மாணிக்கமாகிறது; அந்த மாணிக்கத்தில் அந்தராத்ம ஒளி பிரதிபலிக்கிறது; உள்ளுக்குள்ளிருந்தே ஜீவனின் உண்மை நிலை முழுதும் வெளிப்பட்டு ஒளிமயமாகிறது. "பகவன் நாமத்தில் நம்மை இட்டு நிரப்பிக் கொள்ள வேண்டும், நம் இதயத்தில் பகவன் நாமத்தை இட்டு நிரப்பிக் கொள்ள வேண்டும் — இந்த ஒரு வாக்கியத்தில் ஆத்மிக வாழ்வு முழுவதும் அடக்கம்" என்ற உண்மையை அவரது சந்நிதானத்தில் உணர்கிறோம்.



"தேஜோமயத்தின் நெருக்கம்"

இந்த உலகம் உயிர் வாழ்வது ஜகத்குருவின் சாந்நித்தியத்தாலும், அவரைப் போன்ற ஆத்ம ஞானிகளின் சாந்நித்தியத்தாலுமேயாகும். இவர்கள் மூலம் பகவானே, தான் இருப்பதை மனித குலத்திடமும், பிரபஞ்சம் முழுவதிலும் வெளிப்படக் காட்டுகிறான். மனித இனம் என்று ஒன்று இந்த உலகில் எதற்காக உயிர் வாழ்கிறதோ, அதன் நோக்கம் முழுவதையும் பூர்த்தி செய்பவர்கள் இந்த ஞானியரே.

இன்று ஹிந்து மதத்துக்குத் தேவைப்படுகிறவர்கள், அந்த மதத்தில் ஏதோ குறைகள் இருப்பது போல் கருதி மன்னிப்புக் கோரும் மனப்பான்மை கொண்டவர்கள் அல்ல; அல்லது, அதன் சித்தாந்தங்களைப் பெரிதாக ஆராய்பவர்கள் அல்ல; அல்லது, அதன் கடவுட் கொள்கையை விளக்கி விஸ்தரிப்பவர்களும் அல்ல. ஹிந்து மதத்தின் தேவை, அதன் உபதேசங்களின் பரிசுத்தத்தை உறுதியாகப் பாதுகாக்கக்கூடிய சக்தி பெற்ற முனிவர்களேயாவர். இப்படிப்பட்டவர்கள் இன்று எல்லா மதங்களுக்கும் தேவைப்படுகிறார்கள். ஹிந்து மதத்துக்கும் இந்தத் தேவை உள்ளது. இச்சமயத்தில் ஹிந்துமத உபதேசத்தின் தூய்மையைக் காத்து உறுதிப்படுத்தி வரும் ஜகத்குருவின் சாந்நித்தியம் இன்னும் பல காலத்துக்குத் தொடர்ந்து இம்மதத்தை வாழ்வித்து அருளுமாக!

உங்கள் குழந்தை பள்ளி செல்கின்றதா? வெற்றிகரமான வாழ்வைத் தெம்புடன் தொடங்க ஃபெர்ராடால் கொடுங்கள்

உங்கள் செல்வன் பிள்ளைப்
பிராயத்தில், படிப்பிலும்
விளையாட்டிலும் சிறந்து விளங்க
அதிக சக்தி மற்றும் அதிக ஆற்றல்
பெற்றிருக்கவேண்டும்.

அந்த அனைத்தையும் அளிப்பது
ஃபெர்ராடால் ஒன்றுதான். இதனால்,
சரியான விகிதத்தில் இரும்புச் சத்து,
விடமின்கள் மற்றும் தாதுச் சத்துக்கள்
உங்கள் செல்வனுக்குக்
கிடைக்கின்றன.

ஃபெர்ராடாலில் உள்ள சத்துக்கள்
உங்கள் செல்வனின் உடல் உறுப்புகள்
ஆக்கம் பெற்று ஆரோக்கியமுடன்
வளர மிகமிக அவசியமானவை.

உங்கள் குழந்தைக்குக் காலையிலும்,
இரவிலும், நேரடியாக
பாட்டிலிலிருந்தோ அல்லது பாலுடன்
கலந்தோ, ஃபெர்ராடால் கொடுங்கள்.

நினைவிருக்கட்டும், குடும்பம்
முழுமைக்கும் குறையாத
ஆரோக்கியம் தருவது ஃபெர்ராடால்.





ஃபெர்ராடால்®

சுவையில் சிறந்தது— குடும்பம் முழுமைக்கும் குறையாத ஆரோக்கியத்திற்கு

பார்க்-டேவிஸ் தயாரிப்பு

® ரெஜிஸ்டர்டு ட்ரேட்மார்க்,
ரெஜிஸ்டர்டு யூஸர்: பார்க்-டேவிஸ்(இந்தியா)
லிமிடெட், பம்பாய்-72 ஏ.எஸ்.

JAISONS – 419

மகுடபதி

அமரர் கல்கி

அத்தியாயம் 9

ஏமாற்றம்



கார்க்கோடக் கவுண்டர் டார்ச்சு லைட்டுடன் போன பிறகு, சற்று நேரம் வரையில் மகுடபதி சிந்தனைசக்தியையே இழந்திருந்தான். சிறிது சிறிதாக, அவனுடைய மனம் யோசிக்கும் சக்தியைப் பெற்றது. இன்று காலையில் அவன் கிராமத்திலிருந்து கிளம்பிய போது, அன்று இரவுக்குள் தனக்கு இத்தகைய சம்பவங்கள் நேருமென்று யாராவது சொல்லியிருந்தால், இடிஇடியென்று சிரித்திருப்பான். அவ்விதம் சொன்னவனைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போகும்படி கூறியிருப்பான்.

அவனுடைய மனோ நிலைமையில் இப்போது பயங்கரம் அதிகமாயிருந்ததா, அதிசயம் அதிகமாயிருந்ததா, அல்லது கவலைதான் அதிகமா என்று சொல்வதற்கு இயலாமலிருந்தது. செந்திருவைப் பற்றி எண்ணிய போது உள்ளத்தில் கவலை மீறியது. ஐயோ! பாவிகள் அவளை எங்கே கொண்டுபோனார்களோ? என்ன செய்யப் போகிறார்களோ? பலவந்தமாகக் கல்யாணம் நடந்து விடுமோ? அந்தத் திரப் பெண் அதற்குச் சம்மதிப்பாளா? சம்மதியாமல் அவள் பிடிவாதம் பிடித்தால் என்னென்ன விபரீதங்கள் நேரிடுமோ? சமயத்தில் போய்க் கல்யாணத்தைத் தடுத்து அவளை மீட்டுக் கொண்டு வரும் சக்தியைக் கடவுள் தனக்கு அளிப்பாரா?

தான் இன்னும் உயிரோடிருப்பதே கடவுளுடைய செயல்தான்! தன் மேல் பாய வேண்டிய கத்தியல்லவா பெரியண்ணன் மேல் பாய்ந்தது? — ஆஹா! சத்தியாக்கிரகம், அஹிம்சை என்றெல்லாம் பேசுகிறோமே? உண்மையான அஹிம்சா தர்மி — சத்தியாக்கிரகி — பெரியண்ணன் அல்லவா? தன்னுடைய உயிரை இன்னொருவனுக்காகக் கொடுக்கத் துணிந்தானே!

ஆனால், பெரியண்ணன் நிஜமாகவே இறந்து போய் விட்டானா? தன் பக்கத்திலேயிருக்கும் பெரியண்ணனுடைய உடல் உயிரற்ற சவமா? ஒரு கத்திக் குத்தில் பிராணன் போயிருக்குமோ? உடனே வைத்தியரை அழைத்து வந்து சிகிச்சை செய்தால், ஒரு வேளை அவன் பிழைத்தாலும் பிழைக்கலாம் அல்லவா? — அடாடா! பாவிகள் தன்னை இப்படிக் கட்டிப் போட்டுவிட்டுப் போய்விட்டார்களே....!

மகுடபதி, கட்டை அவிழ்த்துக் கொள்ளும் பொருட்டு இப்படியும் அப்படியுமாகத் திமிறினான். சோபாவும் அவன்கூட வந்ததே தவிரக் கட்டு அவிழவில்லை. அப்புறம், கைகளினால் முடிச்சு எங்கே இருக்கிறதென்று தேடத் தொடங்கினான். அப்போது, அவனுடைய மனத்தில், ''ஆகா! கிழவனுடைய உயிர் மட்டும் போயிருக்கட்டும்; எப்படியாவது பழிக்குப் பழி வாங்கியேயாக வேண்டும். அஹிம்சையாவது மண்ணாங்கட்டியாவது! இப்பேர்ப்பட்ட பாதகர்களை இப்பூவுலகில் இல்லாதபடி செய்வதே பெரிய புண்ணியம்'' என்று எண்ணினான். கயிற்றின் முடிச்சு எங்கே இருக்கிறதென்று அவன் தேடிய போது, பெரியண்ணனுடைய உடல் மேல் கை பட்டது. அவனுடைய உடம்பு ஒரு குலுக்குக் குலுக்கிப் போட்டது. அது பிரேதமா, உயிருள்ள உடலா! — இதைத் தெரிந்து கொள்ளும் ஆவலினால் நடுங்கிக் கொண்டே மறுபடியும் அதே இடத்தில்

கையை நீட்டினான். மறுபடியும் உடம்பு தட்டுப்பட்டது. பிரேதமானால் ஜில்லிட்டிருக்குமென்று அவன் கேள்விப்பட்டிருக்கிறான். இந்த உடம்பு ஜில்லென்று இல்லை; சிறிது சூடு இருப்பதுபோல் தோன்றியது. கவனமாகக் காது கொடுத்துக் கேட்டான். மிக மிக இலேசாக மூச்சுவிடும் சத்தம் கேட்பது போலிருந்தது.

உடனே, மருடபதியின் பரபரப்பு பன்மடங்கு அதிகமாயிற்று. எப்படியாவது ஓடிப் போய் டாக்டரை அழைத்து வந்து பெரியண்ணனைக் காப்பாற்ற வேண்டும். இல்லாவிட்டால்... கார்க்கோடக் கவுண்டர் போகும் போது சொன்ன வார்த்தைகள் இப்போது நினைவுக்கு வந்தன. ''ஜெயிலுக்கும் போகலாம்! அங்கிருந்து தூக்கு மேடைக்கும் போகலாம்!'' இந்த வார்த்தைகளின் அர்த்தம் பளிச்சென்று இப்போது அவனுக்குப் புலனாயிற்று. கார்க்கோடக் கவுண்டர் போலீஸாரை அழைத்து வருவார். தன்னைக் கைது செய்வார்கள். பெரியண்ணனைக் கொலை செய்ததாகத் தன் பேரில் கேஸ் நடக்கும்! கவுண்டர்களே சாட்சி சொல்லுவார்கள்! குற்றம் ருசுவாகி விடும்! தன்னைத் தூக்குமேடையில் ஏற்றுவார்கள்! — தன்னுடைய பேச்சை யாரும் நம்ப மாட்டார்கள். அவர்கள் பேச்சுத்தான் எடுபடும்!... பெரியண்ணனுடைய உயிரைக் காப்பாற்றினாலொழிய, தான் தூக்குமேடை ஏற வேண்டியதுதான்! அப்போது செந்திருவின் கதி என்ன ஆகும்?....

மருடபதி, வெறி பிடித்தவனைப் போல் அப்படியும் இப்படியுமாகத் திமிறினான். 'பட்' என்று சத்தம் கேட்டது. சற்று நிதானித்துப் பார்த்த போது அந்தப் பழைய சோபாவின் கால் இவன் இழுத்த இழுப்பில் முறிந்து விட்டது என்று தெரிந்தது. உடனே துள்ளிக் குதித்து எழுந்தான். கயிற்றைக் கீழே தளர்த்திக் கொண்டு வந்து, கடைசியில் கட்டிலிருந்து விடுபட்டான்.

கிழவனை மறுபடியும் தொட்டுப் பார்த்தான்: சூடு இருந்தது. தட்டுத் தடுமாறிக் கொண்டு மச்சுப் படியை அடைந்து கீழே இறங்கினான். கீழே நடையில், புகையடைந்த அரிக்கன் லாந்தர் முன் போலவே எரிந்துகொண்டிருந்தது. வாசல் கதவை இழுத்துப் பார்த்தான். திறக்கவில்லை. வாசற்புறம் கதவைப் பூட்டிக் கொண்டுதான் அவர்கள் போயிருக்க வேண்டும். ஆகையால், அந்தக் கதவைத் திறக்க முயல்வதில் உபயோகமில்லை. கையில் லாந்தரை எடுத்துக் கொண்டு கொல்லைப்



புறத்தை நோக்கி விரைந்து நடந்தான். நாலு கதவுகளைத் திறந்து கொண்டு போய்க் கடைசியாகப் புறக்கடைக் கதவின் தாழ்ப்பாளையும் திறந்து கொண்டு வெளியே வந்தான். அது சிறு சந்து என்று தெரிந்தது. லாந்தரை உட்புறம் வைத்து விட்டுக் கதவைச் சாத்தி வெளிப்புறம் நாதாங்கி போட்டுக் கொண்டு, தனக்குத் தெரிந்தவரான



டாக்டர் புஜங்கராவின் வீட்டை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றான்.

சுமார் ஒரு மைல் தூரம் நடந்து அவன் டாக்டர் புஜங்கராவின் வீட்டை அடைந்த போது நள்ளிரவு இருக்கும். படபடவென்று கதவைத் தட்டினான். புஜங்கராவ் தேசியப் பற்றுள்ள டாக்டர்: காங்கிரஸ் அபிமானி. அன்று சாயங்காலம் போலீஸ் தடியடியினால் காயமடைந்த தொண்டர்களுக்கெல்லாம் சிகிச்சை செய்து விட்டு, அரை மணி நேரத்துக்கு முன்புதான் அவர் வீட்டுக்கு வந்து படுத்தார். அதற்



பாடப் புத்தகம்தான்; பாடாவதிப் புத்தகம் அல்ல!

"பள்ளிக்கூடம் திறக்கப் போகிறதே. பாடப் புத்தகங்களை வாங்குவது எப்போது, எப்படி? கிடைத்தாலும் அந்த அச்சைப் படிப்பது எப்படி?" என்றெல்லாம் வழக்கமாகக் கவலைப்படும் பெற்றோரின் வயிற்றெரிச்சலை அதிகமாக்குகிறார் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா.

பாரிசில் யுனெஸ்கோ செக்ரடரி ஜெனரலாக இருந்து வந்துள்ள இவர் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் 21-ஆவது ஆண்டு விழாவில் தெரிவித்த செய்தியைக் கேளுங்கள். பிரான்சில் பாடப் புத்தகங்கள் அமைப்பிலும் விஷயத்திலும் அற்புதமாக இருக்கின்றனவாம். அவற்றில் பெரும்பான்மைப் புத்தகங்களைக் குழந்தைப் புத்தகங்களாகப் பயன்படுத்துகிறார்களாம்! இங்கு நாம் குழந்தைகளுக்கான புத்தகங்கள் வேறு; குழந்தைகளுக்கான பாடப் புத்தகங்கள் வேறு என்றல்லவா கருதுகிறோம்! அங்கேயோ பாடப் புத்தகங்களே குழந்தைப் புத்தகங்களாகக் கருதப்படுமளவுக்குப் பார்க்க அழகாகவும் படிக்க சுவாரஸ்யமாகவும் இருக்கின்றன!

குழந்தைப் புத்தகங்களுக்கு ஏராளமான நல்ல நூல் கிடைக்க யுனெஸ்கோவில் வழியுண்டு என்றும் குறிப்பிட்டார் ஆதிசேஷையா. நாம் எவ்வளவு பயன்படுத்திக்கொள்ளப்போகிறோமோ, பார்க்கலாம். - டி.எஸ்.வி.

படம்: குழந்தை எழுத்தாளர் சங்க ஆண்டு விழாவில் வள்ளியப்பா, அ. ச. ஞானசம்பந்தம், ஆதிசேஷையா.

குள் யாரோ வந்து கதவை இடிக்கவே, தொண்டர் யாருக்காவதுதான் அபாய நிலை ஏற்பட்டிருக்கிறதோ என்று எண்ணிக் கொண்டு, அவர் வந்து கதவைத் திறந்தார்.

மருடபதியைப் பார்த்ததும், "ஓகோ! யார், மருடபதியா? நீ எப்போது வந்தே? சாயங்காலமெல்லாம் உன்னைக் காணவில்லையே!" என்றார்.

மருடபதி பதறிய குரலில், "டாக்டர்! டாக்டர்! உடனே வரணும். ஓர் உயிரைக் காப்பாற்ற வேணும். அதோடு என்னையும் தூக்குமேடைக்குப் போகாமல் காப்பாற்ற வேணும்" என்றான். அவனுடைய பதற்றத்தையும், முகத்தில் தோன்றிய பீதியையும் பார்த்து, குழறிய வார்த்தைகளையும் கேட்ட டாக்டருக்கு, அவனுடைய மண்டையில் போலீஸ் அடிபட்டதனால் மூளை குழம்பி விட்டதோ என்ற சந்தேகம் உண்டாயிற்று.

"மருடபதி! இப்படி உள்ளே வா! என்ன விஷயம்? யாருக்கு என்ன உடம்பு? நிதானமாய்ச் சொல்லு!"

"நிதானமாய்ச் சொல்வதற்கு இது சமயமில்லை. ஸார்! நீங்கள் கிளம்புங்கள், போகும்போதே சொல்கிறேன்" என்றான் மருடபதி.

"என்ன கேஸ் என்று தெரியாமல் எப்படியப்பா கிளம்புகிறது? தெரிந்தால்தானே அதற்குத் தகுந்த ஆயுதங்களுடன் கிளம்பலாம்?"

"கத்திக் குத்து, டாக்டர்! பெரியண்ணன் தெரியுமோ, இல்லையோ, பெரியண்ணன்? அவன் மார்பிலே கத்திக் குத்து. இன்னும் உயிர் இருக்கிறது. டாக்டர்! சீக்கிரம் கிளம்புங்கள்."

கத்திக்குத்து என்றதும் டாக்டருடைய தயக்கம் இன்னும் அதிகமாகி விட்டது. விவரமாய்ச் சொன்னால்தான் கிளம்ப முடியும் என்றார். அதன் மேல் மருடபதி அவசர அவசரமாக அன்று சாயங்காலம் முதல் தனக்கு நேர்ந்தவைகளை ஒரு மாதிரி சொல்லி முடித்தான்.

எல்லாவற்றையும் கேட்டு, விஷயத்தை ஒருவாறு தெரிந்து கொண்ட புஜங்கராவ், "அப்பா! மருடபதி! இது டாக்டர் கேஸ் மட்டுமல்ல; இது போலீஸ் கேஸ். ஏற்கனவே நம் பேரில் போலீஸாருக்குக் 'காட்டம்' இருக்கிறது. இந்த மாதிரி விஷயத்தில் அவர்கள் இல்லாமல் தலையிட்டோமானால், ஆபத்தாய் முடியலாம். முதலில் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவோம். அங்கிருந்து போலீஸ் அதிகாரிகளையும் அழைத்துக் கொண்டு நீ சொல்லும் வீட்டுக்குப் போவோம்" என்றார். வேறு வழியில்லாமல் மருடபதி ஒத்துக் கொண்டான்.

டாக்டர் புஜங்கராவ், மோட்டார் டிரைவர் போய் விட்டபடியால், காரைத் தாமே எடுத்து மருடபதியையும் ஏற்றிக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். மருடபதி மட்டும் போய் மேற்படி கதையைச் சொல்லியிருந்தானானால், என்ன நடந்திருக்குமோ, எப்படியாகியிருக்குமோ, தெரியாது. டாக்டரும் கூடப் போயிருந்தபடியால், ஒரு போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டரும் இரண்டு போலீஸ் கான்ஸ்டபிள்களும் டாக்டரின் வண்டியிலேயே கிளம்பினார்கள்.

அனுமந்தராயன் சந்தில், குறிப்பிட்ட வீட்டு வாசலில் போய் வண்டி நின்றது. எல்லாரும் அவசரமாய் இறங்கினார்கள். வாசற் கதவு பூட்டியிருந்தது.

"இந்த வீட்டு மச்சிலேதான் கிழவன் குத்துண்டு கிடக்கிறான். சீக்கிரம், சீக்கிரம்!" என்றான் மருடபதி.

"கதவு பூட்டியிருக்கிறதே!" என்றார் இன்ஸ்பெக்டர்.

''பூட்டை உடைத்தால் போகிறது!''

''பூட்டை உடைப்பதற்கு ரூல் இல்லையே தம்பி!''

''அப்படியானால் வாருங்கள்; கொல்லைப்புறமாகப் போகலாம்.''

கார் மறுபடியும் கிளம்பிற்று. கொல்லைப்புறச் சந்து ரொம்பக் குறுகலாயிருந்தபடியால், வண்டியைச் சற்றுத் தூரத்திலேயே நிறுத்தி விட்டு இறங்கி நடந்தார்கள். மருடபதி எல்லாருக்கும் முன்னால் விரைவாக ஓடினான். மற்றவர்கள் வருவதற்குள் வெளி நாதாங்கியைக் கழற்றிக் கதவைத் திறந்து உள்ளே போய், அவன் வைத்த இடத்திலேயே இருந்த அரிக்கன் லாந்தரைத் தூண்டிவிட்டு எடுத்துக் கொண்டான். எல்லாரும் வீட்டினுள் பிரவேசித்து வாசல் நடைக்கு வந்து மச்சு மேலும் ஏறினார்கள்.

மருடபதி, பெரியண்ணனுக்கு உயிர் இருக்கிறதோ இல்லையோ என்ற அசாத்தியக் கவலையுடன், மச்சு ஏறியதும், லாந்தரைத் தூக்கிப் பிடித்தான்.

அவனுடைய இருதயம் ஒரு நிமிஷம் நின்றே போயிற்று. ஏனெனில், சோபாவுக்குப் பக்கத்தில் அவன் எதிர்பார்த்த இடத்தில் பெரியண்ணனுடைய உடலைக் காணவில்லை!


ஹாலில் சுற்றுமுற்றும் பார்த்தான். எங்கும் காணவில்லை. ஓடிப் போய்த் தான் ஒளிந்திருந்த அறைக்குள் பார்த்தான். அங்கும் இல்லை.

சோபாவுக்குப் பக்கத்தில் சென்று தரையில் இரத்தக் கறை இருக்கிறதா என்று குனிந்து தேடினான். அதுவும் இல்லை. சட்டென்று பெரியண்ணன் சமுக்காளத்தில் விழுந்து கிடந்தான் என்பது நினைவு வந்தது. சமுக்காளத்தையே காணோம். அவர்கள் டிபன் சாப்பிட்ட பொட்டணக் காகிதம், ஜலம் இருந்த கூஜா ஒன்றும் இல்லை. ஒரு நிமிஷம் அந்த வீடுதானா என்பதே மருடபதிக்குச் சந்தேகமாகி விட்டது. மேஜை நாற்காலிகளும், கால் ஒடிந்த சோபாவும், அந்த வீடுதான் என்ற உறுதியை அவனுக்கு உண்டாக்கின.

இன்னோர் அடையாளமும் இருந்தது. அரிக்கன் லாந்தர் கவிழ்ந்தபோது மண்ணெண்ணெய் கொட்டிற்றல்லவா? அந்தக் கறையும், நாற்றமும் இருந்தன.

ஆனால், பெரியண்ணன் என்ன வானான்? அல்லது அவனுடைய உடல் என்னவாயிற்று? மாயமாய் அல்லவா மறைந்து போயிருக்கிறது?

''என்ன தம்பி! 'ஜோக்' பண்ணினையா?'' என்று ஸப்—இன்ஸ்பெக்டர் ஏளனமும் கோபமும் கலந்த குரலில் கேட்டார். (தொடரும்)



ஐ. ஆர். 8 பழங்கதையாகி விடக் கூடிய காலம் நெருங்கி விட்டது. பிலிப்பைன்ஸில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையம் ஐ. ஆர். 24 என்ற ரகத்தை அறிமுகப்படுத்தி யிருக்கிறது.

பிலிப்பைன்ஸ் அரசு இதை அங்கீகரித்து விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்து வருகிறது. மற்ற நாடுகள் பரீட்சார்த்தமான முறையில் இதைப் பயிரிட்டுப் பார்த்த பின்னர் விவசாயிகளுக்கு வழங்கலாம் என மேற்படி ஆராய்ச்சி நிலையம் கூறுகிறது.

ஐ. ஆர். எட்டை விட ஐ. ஆர். 24 எந்த வகையில் சிறந்தது?

இந்த அரிசி சமைத்ததும் மிருதுவாகவும் இலேசான சுரப் பசையுடனும் இருக்கிறது.

விளைச்சல் ஐ. ஆர். எட்டை விட அதிகமாக இருக்குமே தவிர குறையாது. குறிப்பாக ஆசியாவில் மழைக்காலங்களில் நெல் பயிரிடப் படுவதால் ஐ. ஆர். 24 விசேஷத் தகுதி பெறுகிறது. இக்காலங்களில் சராசரியில் ஒரு ஹெக்டேரில் ஐ. ஆர். 8, 4.8 டன் மகசூல் தரும் என்றால் ஐ. ஆர். 24, 5.6 டன் தரும்.

அறுவடைக்குச் சில காலம் முன்பு பயிர் சாய்ந்து போவதால் விளையும் சேதம் ஐ. ஆர். 24ல் குறைவு, மற்ற ரகங்களைக் காட்டிலும்.

ஐ. ஆர். 24 நெல்மணி நீளமாகவும் மெல்லியதாகவும் ஒளி ஊடுருவக் கூடியதாகவும் இருக்கிறது. பார்க்க நன்றாக இருப்பதால் நல்ல விலைக்கும் போகும்.

நோய் வராமல் தடுத்துக் கொள்ளும் சக்தி ஐ. ஆர். 24க்கு மற்ற ரகங்களைக் காட்டிலும் அதிகம்.

- சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலைய அறிக்கை.

கொடுத்து வைத்தவர்கள் !



ஈன்று புறம்போந்தல்
எம்மவர் கடனே ;
பால்பவுடர் வழங்குதல்
அமெரிக்கா கடனே ;
பட்டதாரி ஆக்குதல்
கல்லூரியின் கடனே ;
வேலைபோட்டுக் கொடுத்தல்
திட்டக்கமிஷன் கடனே ;
ஊதிய உயர்வு நல்கல்
சம்பளக்கமிஷன் கடனே;
உளறுவாய் அருஞ்சமம் பேசி
ஸ்டிரைக் செய்து பெயர்தல்
விளைக்குநர் கடனே !

- புறநானூற்றுப் பொன்முடியார் கொள்ளுப் பேரன் -
என். வி. ராஜாமணி பாடியது.

தேடி வரும் திருவருள்

சிவ. சந்திரசேகரன்

[பரமனையும், மகான்களையும் நாடி பக்தர்கள் நீண்ட யாத்திரை செய்வது சகஜம். அந்தப் பரமனும் மகான்களுமே பக்தர்களைத் தேடி, அவர்களது இருப்பிடத்துக்குச் சென்று அருள் வண்ணம் காட்டுவதும் உண்டு. இதைத்தான் மாணிக்கவாசகப் பெருந்தகை 'தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளி' என்றும், 'இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி' என்றும் மனம் மணக்கப் பாடுகிறார். ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசாரியர்கள் இவ்விதம் பக்தர்கள் இருப்பிடத்தைத் தேடிச் சென்று அநுக்கிரகம் புரிந்த ஐந்து நிகழ்ச்சிகளை இவ்விதழிலிருந்து தொடர்ந்து விவரிக்கிறார் அவரிடம் முப்பதாண்டுகளாகக் கைங்கரியம் புரிந்துவரும் விஷ்ணுபுரம் ஸ்ரீ சிவ. சந்திரசேகரன் அவர்கள். ஆசிரியர்]

1. ஆல நிழல் யோகி

1942ம் ஆண்டு இறுதியில் நான் காசி யாத்திரையை முடித்துத் திரும்பினேன். அப்போது தஞ்சை மாவட்டத்தில் பூவனூர் கிராமத்தில் ஸ்ரீ காமகோடி பெரியவாள் முகாமிட்டிருந்தார்கள். அவர்களைத் தரிசிக்கச் சென்றிருந்த என்னிடம் காலை எட்டு மணி முதல் பிற்பகல் இரண்டு மணி வரையில் எனது காசியாத்திரை விவரங்களை எல்லாம் கேட்டறிந்தார்கள். நான் வட இந்திய நகரங்கள் பலவற்றுக்குச் சென்று, பெற்ற பலவிதமான அநுபவங்களைக் கூறினேன்.

கடைசியில், தமக்கே உரிய முறையில் நான் பெறத் தவறிய ஓர் அநுபவத்தை ஸ்ரீ பெரியவாள் குறிப்பாகக் கேட்டார்கள்: "காசிக்குப் போயிருந்தாயே! அங்கே ஆலமரத்தடி யோகியைப் பார்த்தாயோ?" என்று கேட்டார்கள்.

பெரியவாள் குறிப்பிட்ட யோகியை நான் பார்க்கவில்லை. இதைத் தெரிவித்தேன்.

உடனே பெரியவாள் தாம் காசியாத்திரை செய்தபோது அந்த யோகியைச் சந்தித்ததை நினைவுகூர்ந்து ஆனந்தமாகப் பேசலானார்கள்.

1934ம் ஆண்டில் ஸ்ரீ காமகோடி பெரியவாள் காசிக்கு எழுந்தருளினார்கள். அவ்வருடம் நவராத்திரி பூஜையும் அங்குதான் நடந்தது. காசி மகாராஜா, மதன்மோகன் மாளவியா முதலிய பெரியார்களும், காசி மக்களும் ஸ்ரீ பெரியவாளுக்குச் செய்த மரியாதையின் சிறப்பு சொல்லத்தரமன்று. ஏராளமான பண்டிதர்களும் வித்வான்களும் பெரியவாளைச் சூழ்ந்தபடி இருந்தனர்.

ஒரு நாள் மாலை இரண்டு வித்வான்கள் பெரியவாளிடம் வந்தனர். அவர்கள் மடத்தின் முகாமுக்கு மேற்கே ஒரு மைலில் உள்ள ஆலமரத்தடி யோகியைப்பற்றிப் பெரியவாளிடம் பிரஸ்தாவித்தனர்.

அந்த மைதானத்தில் ஓர் ஆலவிருட்சம். அதன் நிழலிலேயே பல்லாண்டுகளாக வாழ்ந்து வருகிறாராம் அந்த யோகி. மரத்தின் நிழல் எல்லைக்கு அப்பால் அவர் செல்வதே கிடையாது. அவரிடம் இன்னோர் அதிசயம் அவர் உணவே உட்கொள்வதில்லை. பால், பழம்கூடச் சாப்பிடுவதில்லை. எப்போதேனும் பசுவின் சிறுநீரை அருந்துவார். மற்றபடி பரந்தவெளியில் தூயகாற்றே அவரது உணவு. பசுக்களும் கன்றுகளும் அவரைச் சூழ்ந்துகொண்டிருக்கும். அவர்மீது அவை அன்புடன் உராய்ந்து தினவு தீர்த்துக் கொள்ளும். அவற்றின் குளம்பு எழுப்பும் புழுதியில் திளைத்து மகிழ்வார் அவர். யோகியைத் தரிசிக்கப் பெரிய பிரபுக்களும் பண்டிதர்களும் மாலை நேரங்களில் மரத்தடிக்கு வருவார்கள். அவர்கள் பசுக்களுக்காகப் புல் முதலிய தீவனத்தை யோகியிடம் சமர்ப்பிப்பார்கள். அவர் அவற்றைப் பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் ஊட்டுவார். பல்லாண்டுகளாக இப்படி வாழ்ந்து வரும் அந்த யோகி நமது பெரிய



வாள் காசிக்கு வந்திருப்பதை அறிந்து, மடத்தின் முகாமுக்கு வந்து அவர்களைத் தரிசிக்க விரும்பினார். அந்த அவாவை இவ்விரு வித்வான்களின்மூலம் அறிவித்து,ஸ்ரீபெரியவாளின் சௌகரியத்தை விசாரித்தார்.

அந்த வித்வான்களிடம் ஸ்ரீபெரியவாள், "யோகியை இங்கு என்னிடம் அழைத்து வர வேண்டாம். இன்றிரவு பூஜை முடிந்ததும் நானே அங்கு வருகிறேன். ஆனால் நான் வருவதாக அவரிடம் சொல்ல வேண்டாம். நான் அங்கு வரும்வரையில் நீங்கள் இங்கு வந்த விவரத்தை அவரிடம்பேசிக்கொண்டிருங்கள்" என்று கூறி அவ்விருவரையும் முன்னதாக அனுப்பி வைத்து விட்டார்.

இரவு பூஜை முடிந்தது. ஸ்ரீ பெரியவாள் வாக்குத்!தந்தவண்ணமே ஆலவிருட்சத்தடிக்கு எழுந்தருளினார்கள்.

பெரியவாளைக் கண்டதும் யோகி எழுந்திருந்து அவர்களை வரவேற்று அப்படியே ஆனந்த பரவசமாகி விட்டார். உடனே ஏதோ செய்யத் தகாத தவறு செய்து விட்டது போல் வருந்தவும் தொடங்கி விட்டார்.

"ஜகத்குருஜி, நான் பெரிய அபசாரம் செய்து விட்டேன். தங்களை இங்கு கால்தோய வருமாறு செய்து விட்டேனே! மடத்துக்கு வந்து தங்களைத் தரிசிக்கவே விரும்பினேன். அவ்வாறே இந்த வித்வான்களிடம் சொல்லி அனுப்பினேன். அவர்கள் தங்களிடம் என்ன சொன்னார்களோ, தெரியவில்லை. தாங்களே இங்கு வரும்படியாகி விட்டது. இது என் குற்றமேயாகும். யாரிடமும் சொல்லியனுப்பாமல் நானே மடத்து வாயிலில் வந்து காத்திருந்து, தருணம் கிடைத்த போது தங்களைத் தரிசித்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாது போனேன். என் பிழைபொறுத்து மன்னித்து என்னைக் காத்தருள வேண்டும்" என்றெல்லாம் யோகி புலம்பலானார்.

இது நடக்கும்போது ஸ்ரீ பெரியவாளுக்குப் பிராயம் சுமார் நாற்பதுதான். காசி மாநகர் போற்றிய நவயோகி பெரியவாளின் உள் மகிமையை அறிந்திருந்ததாலேயே இப்படிப் பணிவுடன் பேசியிருக்கிறார்!

கருணாமூர்த்தியான பெரியவாள் அவரைக் கையமர்த்தித் தம்மருகில் உட்கார வைத்துக் கொண்டார். "உங்கள் பேரிலோ, இந்த வித்வான்கள் பேரிலோ எவ்விதக் குற்றமும் இல்லை. என்னைக் காண வரவேண்டும் என்று நீங்கள் விரும்பியதாகத்தான் அவர்கள் சொன்னார்கள். என்னை இவ்விடம் வரும்படியாக அவர்கள் சொல்லவே யில்லை. ஆனால் நீங்கள் இந்த மர நிழலிலேயே வசிக்கிறீர்கள் என்பதால் உங்கள் ஜன்ம விரதத்துக்குப் பங்கம் வரக் கூடாது, என்னைப் பார்ப்பதற்காக நீங்கள் வெளியே வரலாகாது என நான்தான் எண்ணினேன். அதனால்தான் நானே இங்கு வந்தேன். இனிமேலும் இந்த ஜன்மா முழுக்க நீங்கள் இந்த மர நிழலிலேயே வசித்து வாருங்கள். பதினாலு உலகங்களும் சகல தேவதைகளும் பசுவுக்குள் வசிப்பதாக சாஸ்திரம். அப்படிப்பட்ட பசுவின் புழுதியை நீங்கள் திருநீராக அணிந்திருக்கிறீர்கள். இந்தக் காசியில் கங்கை ஓடினாலும், நீங்கள் கங்கைக்குக்கூடப் போவதில்லை. கங்கையிலும் புனிதமான கோதூளி உங்கள் மேனியில் எப்போதும் காண்கிறது. உங்கள் பாக்கியமே பாக்கியம்" என்று பெரியவாள் யோகியிடம் மனம் குளிரக் கூறினார்கள்.


பிறகு யோகி ஆத்ம தத்துவங்கள் பற்றிப் பெரியவாளிடம் பல விஷயங்களைக் கேட்டார். அவற்றுக்கு விளக்கம் அளித்துத் தெளிவு தந்தார் ஜகதாசாரியர்கள்.

யோகி உள்ளம் நெகிழ்ந்து, தம் விரதம் பங்கப்படக் கூடாது என்பதால் தம்மைத் தேடி வந்து இருவருள் புரிந்த குரு பிரானுக்கு நன்றி கூறினார்.

இரவு வெகு நேரத்துக்குப் பின் ஸ்ரீ பெரியவர்கள் ஸ்ரீமடத்து முகாமுக்குத் திரும்பினார்கள்.

* * *

அந்த யோகியைத்தான் "நீ பார்த்தாயோ?" என்று பெரியவாள் என்னைக் கேட்டார்கள். நான் காசி யாத்திரையில் அவரைப் பார்க்கத் தவறிவிட்டேன். மறுமுறை காசி போயிருந்தபோது மேற்படி யோகியைப் பற்றி விசாரித்தேன். சிறிதுகாலமாக அவரை ஆலமரத்தடியில் காணவில்லை என்று தெரிந்தது. என்ன ஆனாரோ, யாரே அறிவார்?



இரவைப் பகலாக்கும் தாவள்யமான நிலவு. மனத்தைக் கொள்ளை கொள்ளும் மல்லிகையின் மணம் வீசிக் கொண்டேயிருக்கிறது. இந்தக் குளிர் சூழ்நிலையில், நாதசுரத்தில் மோகன ராக இசை. வானுலகின் ஐராவதம் பூவுலகுக்கு வந்து, வீதியில் கம்பீரமாகப் பவனி வருகிறது!... அதன் மீது தமிழ்க் கடவுள் குமரன் அழகுக் கோலமுடன் வள்ளி தேவானை சகிதம் நிற்கிறான்!... காணும் விழிகளில் பரவசம் மேலிடக் கையெடுத்துக் கும்பிட்டு, முகம் மலர்ந்து வீதியெங்கும் காணப்படும் மக்கள் கூட்டம்...

சிறுகதையின் வர்ணனையா? இல்லை, இல்லை; நிச்சயமாக இல்லை.

சென்ற சித்திரா பௌர்ணமி யன்று, சென்னை தேனாம்பேட்டை பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலிலிருந்து புறப்பட்ட புஷ்பப் பல்லக்கு இப்படித்தான் காட்சி தந்தது! புஷ்பப் பல்லக்கு — வெள்ளை மலர்களால், யானை முகப்புடன் — உடலும் அப்படியே — கட்டப்பட்டு நான்கு சக்கர வண்டியில் நகர்ந்து வந்தது!

பெரிய நகரம் முதல் சிறிய கிராமம் வரையில் திருவிழா நாட்களில் அதிகம் இடம் பெறுவது புஷ்பப் பல்லக்குத்தான்.

''நீங்கள் முதன் முதல் உங்கள் கைவேலைத் திறனைக் காட்டி, கட்டி முடித்த புஷ்பப் பல்லக்கு எது?''

''தஞ்சை மாவட்டம், கண்டரமாணிக்கம் ராமர் கோயிலுக்குத்தான் முதன் முதலில் நானே கட்டினேன்.''

''நீங்கள் எத்தனை வருஷங்களாக இந்தப் பல்லக்குகளைக் கட்டி வருகிறீர்கள்?''


''இருபது வருஷங்களாகக் கட்டி வருகிறேன். ஆயிரக்கணக்கான முத்துப்பல்லக்குகள் புஷ்பப் பல்லக்குகள் கட்டியிருக்கிறேன்.''

''ஒரு பல்லக்கு கட்ட எத்தனை நாள் ஆகும்?''

''பெரிய பல்லக்குக் கட்ட வேண்டுமானால் குறைந்தபட்சம் மூன்று நாள் ஆகும். சிறிய அளவில் என்றால் நாள் கணக்கில் ஆகாது!''

''நாகராஜன்! ஒரு பல்லக்குக் கட்ட என்ன செலவாகும் என்பதையும், நீங்கள் கட்டிய பல்லக்குகளில் பெரிய புஷ்பப் பல்லக்கு எது என்ற விவரங்களையும் சொல்ல வேண்டும்.''

ஆயிரந்தைக் கண்டவர்



புஷ்பப் பல்லக்கு பெற்றுத் தரும் புகழ்



புஷ்பப் பல்லக்குத் தவிர, வெள்ளிப் பல்லக்கு, தந்தப் பல்லக்கு, கண்ணாடிப் பல்லக்கு, முத்துப் பல்லக்கு எனப் பல வகை உண்டு.

கோயில்களுக்கு மட்டுமல்ல — கார் நாகரிகம் அதிகம் பரவாமல் இருந்த காலங்களில் கல்யாண ஊர்வலங்களுக்கும் இதர சுப நிகழ்ச்சிகளுக்கும் புஷ்பப் பல்லக்கு கட்டப்பட்டு வந்திருக்கிறது.

கும்பகோணம் என்றவுடன் வயலின் ராஜமாணிக்கம் பிள்ளை நினைவு வரத்தான் செய்யும். அந்தக் கலைஞர் வாழ்ந்த இல்லத்துக்கு எதிரே ஒரு வீட்டில் வசிக்கிறார் புஷ்பப் பல்லக்கு, முத்துப் பல்லக்கு கட்டுவதில் தேர்ந்த கலைஞராக விளங்கும் திரு நாகராஜன். மூன்று தலைமுறைகளாக இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கிறது இவரது குடும்பம்!

வீடுகளிலும் வியாபார நிறுவனங்களிலும் வாடிக்கையாளர்கள் இருப்பது போலக் கோயில்களுக்கும் வாடிக்கையாளர்கள் உண்டு. பல்லக்கு கட்ட வேண்டும் என்றவுடன் கோயில் நிர்வாகத்தினர் மடத்தை கப்பராயப் பிள்ளையைத்தான் அழைப்பார்கள். அவருடைய கலை வேலைப்பாட்டைக் கண்டு ரசித்தவர்கள் ஏராளம். அந்த மடத்தை கப்பராயப்பிள்ளையின் மகன்தான் இந்த நாகராஜன்.

புஷ்பப் பல்லக்கு, முத்துப் பல்லக்கு இரண்டையும் கட்டுவதற்குரிய பயிற்சியை நாகராஜன் தந்தையிடமிருந்துதான் கற்றார்.

''ஒரு பல்லக்குக் கட்ட இந்தக் காலத்தில் சராசரி முந்நூறு ரூபாய் ஆகும். திருப்பனந்தாள் கோயிலுக்குத்தான் பெரிய புஷ்பப் பல்லக்கைக் கட்டினேன். முத்துப் பல்லக்கில் பெரியது வருடா வருடம் நடைபெறும் பட்டீஸ்வரம் முத்துப்பந்தல் விழாவுக்குத்தான்!''

''நீங்கள் ஈடுபட்டிருக்கும் இந்தத் தொழிலில் ஏதேனும் பிரச்னைகள் உண்டா?''

''இருக்கிறது. முத்துக்கள் (கண்ணாடிதான்), கண்ணாடி சரங்கள், மணிகள் வெளி நாட்டிலிருந்து வந்து கொண்டிருந்தன. அவை பல வருடங்களானாலும் பளபளப்புக் குறையாது. இப்போது பம்பாய், கல்கத்தா முதலிய ஊர்களிலிருந்துதான் வருகின்றன... தரம் குறைந்தவைதாம்... சீக்கிரம் உடைந்துவிடுகின்றன. எத்தனையோ குடும்பங்கள் இந்தத் தொழிலை நம்பியிருக்கின்றன. தமிழக அரசு எங்கள் பிரச்னைகளைக் கவனிக்க வேண்டும்'' என்கிறார் நாகராஜன்.

இவருடைய திறமைக்குச் சான்று பகர்பவை: திருவாவடுதுறை ஆதீனகர்த்தரான அம்பலவாண தேசிகர் அளித்த தங்கத் தோடா; உடையார்பாளையம், வேட்டவரம் ஜமீன்தார்களாயிருந்தவர்களின் சிறப்புப் பரிசுகள்; மற்றும் பல பிரமுகர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் அளித்த பாராட்டுரைகள், சான்றிதழ்கள் முதலியன.

பேட்டி: **ஏ. சுவாமிநாதன்**

ராமாயணம்

ராஜாஜி

90. இந்திரஜித்து மாண்டான்

"நான் உயிருடன் இருக்கத் தாங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?" என்றான் இந்திரஜித்து.

இப்படித் தகப்பனுக்குத் தைரியம் சொல்லிவிட்டு, சேனையைத் திரட்டிக் கொண்டு யுத்தகளம் சென்றான்.

வானர சேனையைத் தாக்கி முறியடித்து லக்ஷக்கணக்கான உயிர்ச் சேதமும் படுகாயங்களும் உண்டாக்கினான். வானர சேனை தோல்வியுற்று ஒன்றும் செய்ய முடியாமல் தத்தளித்தது.

ராம லக்ஷ்மணர்களும் இந்திரஜித்தின் பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்டு பிரக்ஞையற்றுக் கிடந்தார்கள். அரக்க வீரன் கவலை கொண்டிருந்த தந்தையிடம் இந்தப் பெரிய வெற்றியைச் சொல்லிச் சந்தோஷப் படுத்தலாம் என்று சென்றான்.

* * *

விபீஷணன் வானரத் தலைவர்களைத் தேடித் தேடிக் கண்டுபிடித்துத் தேற்றிக் கொண்டு வந்தான்.

ஜாம்பவான், அரை ஜீவனாகக் கிடந்தவன் மெதுவாகச் சென்று வானரர்களை விசாரித்தான். 'மாருதி உயிரோடிருக்கிறானா?' என்று கேட்டான். மாருதி, 'இதோ இருக்கிறேன்' என்று வந்து ஜாம்பவானின் பாதத்தில் பணிந்து நமஸ்கரித்தான்.

"அப்பனே! உடனே வடக்கே செல்வாய். கடலைத் தாண்டி இமயமலைத் தொடருக்குப் போய் ரிஷப பர்வதத்துக்கும் கயிலாய பர்வதத்துக்குமிடையில் இருக்கும் ஔஷதி பர்வதத்தின் உச்சியில் நான்கு மருந்துச் செடிகள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு வந்தாயானால் ராம லக்ஷ்மணர்களும் வானர சேனையும் நினைவு அடைந்து, ரணங்கள் தீர்ந்து ஆரோக்கிய மடைவார்கள். இதைக் கால தாமதமின்றி உடனே செய்வாய். இதைச் செய்யக் கூடியவன் நீ ஒருவன்தான்" என்றான்.

* * *

அவ்வாறே ஹனுமான் குதித்துக் கிளம்பினான். ஆகாய மார்க்கமாகச் சென்று குறிப்பிட்ட பர்வதத்தை அடைந்தான். ஆனால் ஔஷதிகளைக் கண்டெடுக்க அவனால் முடியவில்லை. அப்படியே பர்வதத்தையே தூக்கி எடுத்துக் கொண்டு இலங்கைக்குத் திரும்பினான்.

* * *

ஹனுமான் தூக்கிவந்த சஞ்சீவி மலை ஆகாயத்தில் லங்கையை நெருங்கிய உடனேயே ராம லக்ஷ்மணர்களும், வானர சேனையும் உடலில் ஏறிய சரங்கள் நழுவி, காயங்கள் ஆறி, பூரண சுக நிலையில் எழுந்து நின்றார்கள்.

* * *

சுக்ரீவன் ராமனிடம் கலந்து யோசித்துச் சில வானரர்களைப் பொறுக்கியெடுத்து, லங்கைக்குள் பிரவேசித்து, நகரத்துக்கு நெருப்பு வைக்கும்படி உத்தரவிட்டான்.

அப்படியே வீரர்கள் ராத்திரி முன் ஜாமத்தில்







மாதமொரு நாவல் அளிக்கிறது கல்கி

ஜெகசிற்பியன் எழுதும்

அஜநயனம்

ஜீன் 27

தீவட்டிகளுடன் பிரவேசித்தார்கள். காவலாளிகளை அடித்துத் தள்ளி லங்கையில் உள்ள கோபுரங்கள், மாளிகைகள் இவற்றுக்கு நெருப்பு வைத்தார்கள். ஆயிரக்கணக்கான வீடுகள் எரிந்து சாம்பலாயின. செல்வமும் நாகரிகமும் நிறைந்த லங்கா நகரம் கோரமான நாசம் அடைந்தது.

இந்தச் சமபவத்தை வால்மீகி முனிவர் மிக விவரமாகச் சித்திரித்திருக்கிறார். அதைப் படித்தால் இந்த யுகத்தில் நடத்தப்படும் யுத்தங்களில் நடைபெறும் நகர நாசக் கதையாகவே காணப்படுகிறது.

வானரர்களால் லங்கா நகரம் எரிக்கப்படுவதைக் கண்ட ராவணன் பெருங்கோபம் கொண்டு கும்பகர்ணனுடைய புத்திரர்களான கும்பன், நிகும்பன் இவர்களை யூபாக்ஷன் முதலிய அரக்க வீரர்களுடன் யுத்த களத்துக்கு அனுப்பினான். ராக்ஷசர்களுக்கும் வானரர்களுக்கும் கோர யுத்தம் நடந்தது.

கும்பன் சுக்ரீவனாலும், நிகும்பன் மாருதியாலும் வதம் செய்யப் பட்டார்கள்.

கரனுடைய மகன் மகராக்ஷன் என்ற அரக்கன் ராமனையே எதிர்த்து ராமனுடைய ஆக்னேய அஸ்திரத்துக்கு இரையானான்.

இன்னும் பல பெரிய அரக்கர்கள் மாண்டார்கள். அதன் பேரில் இராவணன் சொல்லியபடி இந்திரஜித்து மறுபடியும் புறப்பட்டான். இந்திரஜித்து அசுர வேள்வி ஒன்று செய்து, அதன் பயனாக ஆகாயம் ஏறிப் பார்வைக்கு மறைந்து யுத்தம் செய்தான்.

* * *

இந்திரஜித்து தன்னுடைய மாய வித்தையினால் ஒரு பொய் சீதையை உண்டாக்கி அவளைத் தேரில் ஏற்றிச் சென்று வானர சேனைக்கு எதிரில் நிறுத்தி அவளை அவர்கள் முன்னிலையில் கொன்றான். இதைக் கண்டு வானர வீரர்களும் மற்றவர்களும் ஏமாந்து போய் இனி யுத்தம் செய்து என்ன பயன் என்று யுத்தத்தை நிறுத்திவிட்டு ராமனிடம் போய் யோசிக்கச் சென்றார்கள். இவ்வாறு ஜாலம் நடத்திவிட்டு இந்திரஜித்து வேறொரு பெரிய அசுர யாகம் செய்யச் சமயம் செய்து கொண்டான். இது வானர வீரர்களுக்காகவது ராம லக்ஷ்மணர்களுக்காவது தெரியாது. அவர்கள் சீதை உயிரிழந்ததைப் பற்றி ஆறாத துக்கம் அடைந்து இன்னது செய்வது என்று தோன்றாமல் அறிவு இழந்து கிடந்தார்கள். அப்போது விபீஷணன் வந்து என்ன விஷயம் என்று விசாரித்தான். நடந்ததையெல்லாம் அவனுக்குத் தெரிவித்தார்கள். ''ஐயோ! இப்படி நீங்கள் மோசம் போனீர்களே! ஒரு நாளும் ராவணன் சீதையைக் கொல்ல விட மாட்டான். இது ஒரு யுக்தி. பொய்யும் மாயையும் செய்து இந்திரஜித்து தன்னுடைய சூழ்ச்சியை நிறைவேற்றப் பார்க்கிறான். மற்ற எவ்விதத்திலும் காரியம் நிறைவேறாது என்று அவன் இப்போது அசுர யாகம் செய்யப் போகிறான். அது முடிந்து விட்டால் பிறகு நம்மால் அவனை ஜெயிக்க முடியாது. ஆனபடியால், உடனே அந்த யாகத்தை நாம் தடுத்து விடவேண்டும். சீதை இறந்தாள் என்று எண்ணி ஏமாந்து போகாதீர்கள். லக்ஷ்மணன் உடனே சென்று இந்திரஜித்தினுடைய வேள்வியைக் கலைத்து விட வேண்டும்'' என்று யோசனை சொன்னான்.

இந்த யோசனையே சரி என்று ஒப்புக் கொண்ட ராமசந்திரன் தம்பியை அனுப்பினான். அவனுடன் ஆஞ்சநேயனும் பல வானரர்களும் விபீஷணனும் சென்றார்கள்.

இந்திரஜித்து பூத கணங்களுக்குச் செய்யவிருந்த யாக பூமிக்குச் சென்றார்கள். வேள்வி தடைப்பட்டு அவ்விடம் வெகு நேரம் பெரும் யுத்தம் நடந்தது. தேரின் மேல் நின்று ராவண குமாரன் பாணங்கள் செலுத்தினான். லக்ஷ்மணன் ஆஞ்சநேயன் மேல் நின்று பாணங்கள் செலுத்தினான். இருவரும் விற்போரில் நிபுணர்கள். ஒருவருக்கு ஒருவர் குறைந்தவர்கள் இல்லை. நிகரற்ற திறமையுடன் வெகு நேரம் யுத்தம் நடத்தினார்கள். விபீஷணன் லக்ஷ்மணனுக்கு உற்சாகம் ஊட்டிக் கொண்டு நின்றான். இந்திரஜித்தின் தேர் அழிந்தது. பிறகு தரையில் நின்று இருவரும் போர் செய்தார்கள். முடிவில் லக்ஷ்மணன் இந்திராஸ்திர மந்திரம் சொல்லி, ராமன் மேல் ஆணையிட்டுப் பாணத்தைச் செலுத்தினான். இந்திரஜித்தின் தலை அறுபட்டு ஜொலித்துக் கொண்டு தரையில் விழுந்தது. தேவ தான கந்தர்வர்கள் ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தார்கள். (தொடரும்)

தி
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்

உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்

லக்ஷ்மியின்

கோட்டா

வாயில் புடவைகள்

இறக்குமதி செய்த 90^s & 60^s உயர்தர பருத்தியினால் செய்யப்பட்டவை.
கண்கவர் வண்ணங்களில் உங்கள் மனதுக்குகந்த டிசைன் களில் கிடைக்கிறது.
மங்கையரின் மனம்குளிர்விக்கும் வசீகர துணி



பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 37

இரும்பு நெஞ்சு இளகியது!

அமரர் கல்கி



வேட்டை மண்டபத்துக்குள் வந்தியத்தேவனையும் மணிமேகலையையும் பார்த்து விட்டு நந்தினியும் சிறிது திகைத்துப் போனாள்.

''ஓஹோ! நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''தேவி! தங்கள் கட்டளை என்று தங்கள் தோழி கூறியபடியால் வந்தேன். பெண் புத்தியைக் கேட்டிருக்கக் கூடாது என்று இங்கு வந்த பிறகு தெரிந்து கொண்டேன்'' என்றான் வந்தியத் தேவன்.

''அக்கா! நான் இவருக்குப் புத்தி கூறவில்லை; என்னுடன் தங்களைப் பார்க்க வரும்படி வேண்டிக் கொண்டேன்!'' என்றாள் மணிமேகலை.

நந்தினி தனக்கு முதலில் உண்டான திகைப்பைச் சமாளித்துக் கொண்டு புன்னகை புரிந்தாள்.

''என் அருமைத் தோழி! பெண்களாகிய நாம் புருஷர்களை வேண்டிக் கொண்டால், அது புத்தி கூறுவது போலத்தான்!'' என்றாள்.

''புத்தி கூறுவதுபோல மட்டுமா? கட்டளையிடுவது போல என்று சொல்லுங்கள், தேவி! தாங்கள் என்னை அழைப்பதாகச் சொல்லி இளவரசி என்னைக் கைப் பிடியாகப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தாள். அதன் பலன் நான் இந்தக் கொலைகாரர்களிடம் சிக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று!'' என்றான் வந்தியத்தேவன்.

''ஐயா! இங்கே நடந்திருப்பதைப் பார்த்தால், இவர்கள் கொலைகாரர்கள் என்று தோன்றவில்லையே? நான் இப்போது இங்கு வந்திராவிட்டால் தாங்கள் அல்லவோ இவர்களை யெல்லாம் கொன்று தீர்த்திருப்பீர்கள் போலிருக்கிறது!''

''அக்கா! இவர்கள் கொலைகாரர்கள் தாம்! சற்று முன் இவர்கள் இவரை வாலில்லாக் குரங்குடனே சேர்த்துக் கட்டி விட்டார்கள்!....''

நந்தினி இலேசாகச் சிரித்தவண்ணம், ''மணிமேகலை! முன்னொரு சமயம் இவர் இந்த வாலில்லாக் குரங்கின் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தார் என்று சொன்

ஞய் அல்லவா? அது இவர்களுக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது!'' என்றாள்.

''எப்படியோ இல்லை, அக்கா! நீங்கள் வருவதற்கு முதல் நாள் இந்த வேட்டை மண்டபத்தில் நான் பார்த்ததாகச் சொன்னேனே, அந்த மனிதர்கள்தாம் இவர்கள்! அன்றைக்கே இவரைத் துரத்திக் கொண்டு வந்தார்கள். நல்லவேளையாக இவர் அவர்களிடமிருந்து தப்பித்து ஓடி விட்டார்!....''

''மறுபடியும் இன்றைக்கு இவரை நீயே இவர்களிடம் கொண்டு வந்து சேர்த்தது ஏன், மணிமேகலை? இந்த வழியில் எதற்காக இவரை அழைத்துக் கொண்டு வந்தாய்?''

''அக்கா! சற்று முன் என் தமையன் கந்தமாறன் தங்களைப் பார்க்கப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தான். அவன் கண்ணில் படவேண்டாம் என்பதற்காக இந்த வழியில் அழைத்து வந்தேன். அதுவே நல்லதாய்ப் போயிற்று. இல்லாவிட்டால், இந்தக் கொலைகாரர்கள்....''

''தங்காய்! இவர்கள் கொலைகாரர்கள் அல்ல. இவர்கள் இவரைக் கொல்லவும் வரவில்லை. இரண்டு மூன்று தடவை இவர் இவர்களிடம் தனியாக அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆனாலும் உயிரோடு விட்டிருக்கிறார்கள். இதன் உண்மையை நீ இவரைக் கேட்டே தெரிந்து கொள்ளலாம்.''



"அப்படியானால், இவர்கள் யார், அக்கா? சற்று முன்னால் இவர்கள் கூறியதுதான் உண்மையா? இவர்கள் தங்களுக்குத் தெரிந்தவர்களா? தங்களை அழைத்துக் கொண்டு போவதற்காக வந்தவர்களா?" என்று மணிமேகலை வியப்புடன் கேட்டாள்.

"ஆம், தோழி! என்னைக் காப்பாற்றி அழைத்துப் போக வந்தவர்கள். எல்லாம் விவரமாகச் சொல்கிறேன். நீங்கள் இருவரும் என்னுடன் அடுத்த அறைக்கு வாருங்கள்! இவர்கள் இங்கேயே இருக்கட்டும்!" என்றாள் நந்தினி.

பிறகு ரவிதாஸனைப் பார்த்து, "மந்திரவாதி! இந்த இருவரில் ஒருவருக்கு நீங்கள் ஏதேனும் தீங்கு செய்தால், அதை எனக்குச் செய்த தீங்காகவே கருதுவேன். இவர்களை நீங்கள் இனி எந்த நிலைமையில் எங்கு சந்திக்க நேர்ந்தாலும் மிக்க மரியாதையாக நடத்த வேண்டும்!" என்றாள்.

ரவிதாஸன், "தேவி! மன்னிக்க வேண்டும். இந்த வாலிபனுக்கு நம்முடைய சங்கேதக் குரல் தெரிந்திருக்கிறது. சற்று முன் ஆந்தைக் குரல் கொடுத்தது இவனேதான்!" என்றான்.

"அதிலிருந்தே இந்த வீரன் நம்மைச் சேர்ந்தவன் என்று தெரியவில்லையா? மந்திரவாதி! உன்னுடைய புத்திக் கூர்மை எங்கே போயிற்று? போனது போகட்டும். இனி, நான் மறுபடியும் தெரியப்படுத்தும் வரையில் இங்கே சத்தம் எதுவும் கேட்கக்கூடாது! ஜாக்கிரதை!" என்றாள் நந்தினி.

பிறகு, நந்தினியும் மணிமேகலையும் வந்தியத் தேவனும் யானைமுக வாசல் வழியாக நந்தினியின் அறைக்குள்ளே பிரவேசித்தார்கள். கதவும் உடனே அடைத்துக் கொண்டது.

* * *

"தங்காய்! நீ மிக்க புத்திசாலி! இவரை வேட்டை மண்டப வழியாக அழைத்து வந்தது நல்லதாய்ப் போயிற்று. உன் தமையன் இப்போதுதான் இங்கிருந்து போகிறான். ஆதித்த கரிகாலரை அழைத்து வருவதாகச் சொல்லிப் போயிருக்கிறான். அதற்குள் உங்களை நான் அனுப்பிவிட வேண்டும். உங்களிடம் விடைபெற்றுக் கொள்ளவும் வேண்டும்!" என்றாள் நந்தினி.

"அக்கா! இது என்ன? தங்கள் கணவரைப் பற்றி உண்மையை அறிந்து வர இவரை அனுப்பப் போவதாக அல்லவோ சொன்னீர்கள்? தாங்கள் விடைபெற்றுக் கொள்வதாகச் சொல்கிறீர்களே?" என்றாள் மணிமேகலை.

"உன் தமையனிடம் பேசிய பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு விட்டேன், தங்காய்! பழுவேட்டரையர் உயிரோடு இருந்தாலும், இல்லாவிட்டாலும் நான் இனி இங்கே தங்க முடியாது. இந்த வீரரும் இனி இங்கே இருப்பது அபாயந்தான். ஐயா! தாங்கள் உடனே இங்கிருந்து கிளம்பிச் செல்லுங்கள். தங்கள் உயிரின் மேல் தங்களுக்கு ஆசை இல்லாவிட்டாலும், இந்தப் பெண்ணை உத்தேசித்தாவது உடனே போய் விடுங்கள்!" என்றாள் நந்தினி.

"அக்கா! இவர் போகிறதாயிருந்தால், என்னையும்கூட அழைத்துப் போகச் சொல்லுங்கள். நீங்களும் இவரும் போன பிறகு இந்த அரண்மனைச் சிறையில் அடைந்து கிடக்க என்னால் முடியாது!" என்றாள் மணிமேகலை.

"இளவரசி! பழுவூர் ராணியின் கருத்தைத் தாங்கள் அறிந்து கொள்ளவில்லை. நான் இங்கிருந்து போய் விட்டால், தாங்கள் ஆதித்த கரிகாலரை மணந்து தஞ்சை சாம்ராஜ்யத்தின் பட்டமகிஷியாக விளங்கலாம் என்று சொல்கிறார்கள்!" என்றான் வல்லவரையன்.

"இல்லை, நான் அவ்விதம் சொல்லவில்லை. ஆதித்த கரிகாலரை மணக்கும் துர்ப்பாக்கியம் எந்தப் பெண்ணுக்கும் ஏற்படுவதை நான் விரும்ப மாட்டேன். அதிலும், என் உயிர்க்குயிராகி விட்ட மணிமேகலைக்கு அந்தக் கதி நேர வேண்டுமா? ஐயா! தாங்கள் வேண்டுமென்று என் கருத்தைத் திரித்துக் கூறுகிறீர்கள். தாங்கள் இப்போது தப்பித்துச் சென்றால், பிறிதொரு காலத்தில் இந்தப் பெண்ணைக் கைப்பிடித்து மணந்து கொள்ளும் பாக்கியத்தைப் பெறக் கூடும்! மணிமேகலை! உனக்கு இவர் மீதுள்ள அன்பு உண்மையான அன்பு என்றால், உடனே இவரை இங்கிருந்து போகச் சொல்லு!" என்றாள் நந்தினி.

"ராணி! நான் போகச் சித்தமாயிருக்கிறேன். தங்களிடம் உள்ள ஒரு பொருளை யாசிக்கிறேன். அதைக் கொடுத்தால், உடனே போய் விடுகிறேன்!" என்றான் வந்தியத்தேவன்.

"ஐயா! என்னிடம் தாங்கள் கோரிப் பெறக் கூடிய அத்தகைய பொருள் என்ன இருக்கிறது? சொல்லுங்கள்!"

"மீன் அடையாளம் பொறித்த வாள் ஒன்று தங்களிடம் இருக்கிறது. அதைக் கொடுத்தால் போய் விடுகிறேன். என்னுடைய வாளைக் கொள்ளிடத்து வெள்ளத்தில் விட்டு விட்டேன் என்பதுதான் தங்களுக்குத் தெரியுமே?" என்றான் வந்தியத்தேவன்.

"ஐயா! வேட்டை மண்டபத்தில் எத்தனையோ வாள்களும் வேல்களும்

இருக்கின்றன. வேண்டியவற்றை எடுத்துக் கொண்டு தாங்கள் இந்தக் கணமே புறப்படலாமே? பெண்பாலாகிய நான் என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வைத்திருக்கும் அந்த ஒரே ஆயுதத்தை ஏன் கேட்க வேண்டும்?''

''தேவி! தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ள மட்டுந்தானா அந்த வாளை வைத்துப் பூஜை செய்து வருகிறீர்கள் ? உண்மையைச் சொல்லுங்கள் !''

''என் உயிருக்கும் மேலான கற்பைக் காப்பாற்றிக் கொள்ளவுந்தான் அந்தக் கத்தியை வைத்திருக்கிறேன்.''

'' தேவி ! வேறு நோக்கம் ஒன்றுமில்லையா ?''

'' வேறு நோக்கம் எனக்கு என்ன இருக்கக் கூடும்?''

'' வீரபாண்டியருடைய மரணத்துக்குப் பழிக்குப் பழி வாங்குவதற்காகவும் இருக்கலாம் அல்லவா ?''

'' மணிமேகலை இருக்கும்போது நீர் அந்தப் பேச்சை எடுக்கமாட்டீர் என்று நினைத்தேன். நானும் இனி மறைக்க வேண்டிய அவசியம் இல்லை. தங்காய் ! நீயும் தெரிந்து கொள். நான் இந்தக் கடம்பூர் அரண்மனைக்கு வந்ததின் நோக்கம் என்னவென்று தெரிந்துகொள் !''

இவ்வாறு சொல்லிய வண்ணம் நந்தினி தேவி பக்கத்தில் கட்டிலின் மீது வைத்திருந்த மீன் அடையாளமிட்ட வாளைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

''சோழ சாம்ராஜ்யத்தின் உட்கலகத்தைத் தீர்த்து வைப்பதற்காக நான் இங்கு வரவில்லை. மதுராந்தகத் தேவருக்கும் ஆதித்த கரிகாலருக்கும் இராஜ்யப் பிரிவினை செய்து வைப்பதற்காகவும் நான் இங்கே வரவில்லை. கடம்பூர் அரண்மனையில் விருந்துண்டு களிப்பதற்காகவும் வரவில்லை! தங்காய்! உனக்குத் திருமணம் முடித்து வைப்பதற்காகவும் வரவில்லை. வீர பாண்டியரின் தலையைக் கொய்த பாதகனைப் பழிக்குப் பழி வாங்கவே வந்தேன். இது பாண்டிய குலத்து வாள்! இதன் மேல் ஆணையிட்டு நான் சபதம் செய்திருக்கிறேன். அந்தச் சபதத்தை முடிக்கவே வந்தேன். இன்றிரவு ஒன்று என் சபதத்தை முடிப்பேன் ; அல்லது என் உயிரை முடிப்பேன் !'' என்று நந்தினி ஆவேசம் வந்தவள்போல் பேசி நிறுத்தினாள்.

'' அதற்கு நான் தடையாக இருப்பேன் என்றுதானே என்னைப் போகச் சொல்லுகிறீர்கள் ? என் உயிருக்கு ஆபத்து வரும் என்று பயமுறுத்தப் பார்க்கிறீர்கள்?'' என்றான் வந்தியத்தேவன்.

''ஆகா! என் பழியை முடிப்பதற்கு நீர் தடை செய்யப் போகிறீரா? நல்ல காரியம்! யார் வேண்டாம் என்றார்கள்? உம்முடைய நண்பரிடம் சென்று இதையெல்லாம் சொல்லி இங்கே அவரை வராமல் தடுத்து விடுவதுதானே ?''

''தேவி! அவரிடம் சொல்லித் தடை செய்ய முடியாது என்றுதான் தங்களிடம் வந்தேன். தங்களுடைய காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டாவது தங்களை இந்தப் பாவ காரியம் செய்யாமல் தடுப்பதற்கு வந்தேன்....''

''ஆகா! பாவ காரியமா? எது பாவ காரியம்? என் தோழியிடம் கேட்டுப் பார்க்கலாம். மணிமேகலை! நீ சொல்! நீ உன் நெஞ்சை ஒருவருக்கு அர்ப்பணம் செய்திருக்கிறாய். அவர் காயம்பட்டு நிராதரவாயிருக்கும்போது அவருடைய பகைவன் அவரைக் கொல்ல வருகிறான். நீ அப்பகைவன் காலில் விழுந்து உன் காதலரைக் கொல்ல வேண்டாமென்று வேண்டிக் கொள்ளுகிறாய். அவன் அப்படியும் கேட்காமல் கொன்று விட்டுப் போகிறான். அப்படிப்பட்ட கிராதகனைப் பழி வாங்குவது பாவம் என்று நீ சொல்லுவாயா, என் கண்ணே !''

''ஒரு நாளும் சொல்ல மாட்டேன், அக்கா! ஆனால் உங்களைப் போல் நான் அவன் காலில் விழுந்து கெஞ்சியிருக்கவும் மாட்டேன். நானே கத்தி எடுத்து அவனை முன்னாலேயே கொன்றிருப்பேன்!'' என்று சொன்னாள் மணிமேகலை.

வந்தியத் தேவன் மணிமேகலையை நோக்கி, ''இளவரசி ! அந்தப் பகைவன் ஒரு வேளை தங்களுடைய சொந்தச் சகோதரன் என்று ஏற்பட்டுவிட்டால்....?'' என்று கேட்டான்.

''சகோதரனாயிருந்தாலும், யாராயிருந்தாலும் எனக்கு ஒன்றுதான் !'' என்றாள் மணிமேகலை.

'' அப்படிச் சொல்லடி, என் கண்ணே !'' என்றாள் நந்தினி.

''இளவரசி தாம் சொல்லுவது இன்னதென்று யோசியாமல் சொல்லுகிறார். இவருடைய தமையன் கந்தமாறன் என்னதான் இவருக்கு விரோதமாகக் காரியம் செய்தாலும், அவனைக் கொல்ல இவருக்கு மனம் வருமா ?'' என்று வல்லவரையன் கேட்டான்.

நந்தினியும் மணிமேகலையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பின்னர் நந்தினி வந்தியத்தேவனைப் பார்த்து, ''இது என்ன வீண் கேள்வி? நான் என் கூடப் பிறந்த சகோதரனைக் கொல்லப் போவதில்லை. முதன் முதலில் நீர் என்னைச் சந்தித்த போது என் தமை

யன் திருமலையின் பெயரைச் சொன்னீர். அதனாலேதான் உம்மிடம் எனக்கு அபிமானம் உண்டாயிற்று. ஆழ்வார்க்கடியானுடைய நண்பர் என்பதற்காகவே நீர் பலமுறை அபாயத்திலிருந்து தப்பிச் செல்வதற்கு உதவி செய்தேன். ஐயா! இன்று நான் என் சபதத்தை முடிக்காமல் என் உயிரை விடும்படி நேர்ந்தால், திருமலையிடம் என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டதாகத் தெரிவிக்க வேண்டும். அவனுடைய சொற்படி நான் நடக்காவிட்டாலும், அவனை அடியோடு மறந்துவிடவில்லை என்பதாகச் சொல்ல வேண்டும்!'' என்றாள்.

''அம்மணி! இந்தக் கபட நாடகம் இன்னும் ஏன்? ஆழ்வார்க்கடியான் தங்கள் தமையன் அல்ல; தாங்கள் அந்த வீர வைஷ்ணவனுடைய சகோதரியும் அல்ல......''

''பின் யார் என் தமையன்? யாருடைய சகோதரி நான்?''

'' தங்கள் தமையனார் ஆதித்த கரிகாலர்தாம். ஆகையினாலேயே தாங்கள் சகோதர ஹத்தி தோஷத்துக்கு ஆளாக வேண்டாம் என்று வேண்டிக் கொள்கிறேன். வீரபாண்டிய குலத்துக் கொலை வாளைத் தயவுகூர்ந்து என்னிடம் கொடுத்து விடும்படி மன்றாடுகிறேன்!''

''கரிகாலரும் நானும் உடன்பிறந்தவர்கள் என்ற அபூர்வ கற்பனையைத் தாங்கள் இளவரசரிடம் சொல்லியிருக்கிறீர்கள் அல்லவா? அதை அவர் நம்பினாரா?'' என்று நந்தினி ஏளனப் புன்னகையுடன் கேட்டாள்.

'' நம்பியதாகத்தான் தோன்றியது. ஆனால் அவர் மனத்தில் உள்ளதை நான் ஒன்றும் அறியேன்....''

''அவர் மனத்தில் உள்ளதை நான் அறிவேன். அந்தப் பழையாறை மோகினியின் கற்பனா சக்தியைப் பற்றி அவர் பெரிதும் வியக்கிறார்....''

''அம்மணி! நான் கூறியது கற்பனை அல்ல. பழையாறை இளையபிராட்டியின் கற்பனை அல்லவே அல்ல. ஈழ நாட்டில் நான் என் கண்ணால் பார்த்தேன்....''

''என்னத்தைப் பார்த்தீர்?''

''வாயினால் பேசும் சக்தி அற்ற ஒரு பெண் தெய்வத்தைப் பார்த்தேன். என்னையும், ஆழ்வார்க்கடியானையும், அருள்மொழிவர்மரையும் அந்தத் தெய்வ மகள் பேரபாயத்திலிருந்து காப்பாற்றினார். அநுராதபுரத்தின் வீதிகளில் நள்ளிரவில் நாங்கள் ஒரு பழைய மாளிகையின் ஓரமாகப் போய்க் கொண்டிருந்த போது அவர் வீதியின் எதிர்ப் பக்கத்தில் நின்று எங்களைச் சமிக்ஞையினால் அழைத்தார். அருள்மொழிவர்மரும் நாங்களும் அவரை நோக்கி நகர்ந்ததும் நாங்கள் சற்றுமுன் நின்றிருந்த வீட்டின் முகப்பு இடிந்து விழுந்தது. பொன்னியின் செல்வர் அந்தப் பெண்ணரசியைத் தம் குல தெய்வம் என்று போற்றி வணங்கினார்.''

''ஐயா! இந்தக் கதைக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அருள்மொழிவர்மரைச் சோழ சிங்காதனத்தில் அமர்த்த விரும்பும் இளையபிராட்டியிடம் இதையெல்லாம் நீங்கள் கூறியிருக்கலாம்; அவளும் வியந்து மகிழ்ந்திருப்பாள். என்னிடம் ஏன் சொல்கிறீர்?....''

''அதற்குக் காரணம் இருக்கிறது. அநுராதபுரத்து வீதிகளில் மங்கலான நிலவு வெளிச்சத்தில் அந்தப் பெண்ணரசியை நான் சற்றுத் தூரத்திலிருந்து பார்த்த போது. 'தஞ்சாவூரில் நாம் விட்டுப் பிரிந்து வந்த பழுவூர் இளையராணி இங்கே எப்படி வந்து சேர்ந்தார்?' என்று வியப்படைந்தேன். அம்மணி! தங்களுக்கும் அவருக்கும் உருவத் தோற்றத்தில் அணுவளவும் வித்தியாசம் இல்லை. தாங்கள் ஆபரண அலங்காரங்களை நீக்கிவிட்டுக் கூந்தலைப் பிரித்துப் போட்டுக் கொண்டால் தத்ரூபமாக அவரைப் போலவே இருப்பீர்கள்....''

''நீர் சொல்வதை நான் ஏன் நம்ப வேண்டும்? தாங்கள் கற்பனா சக்தி அதிகமுடையவர் என்பதை நான் அறிவேன். இதுவும் ஏன் உமது அபூர்வ கற்பனைகளில் ஒன்றாயிருக்கக் கூடாது?''

''தேவி! சத்யமாகச் சொல்கிறேன்.''

''நீர் எவ்வளவுதான் ஆணையிட்டுச் சொன்னாலும் என்னால் நம்பமுடியாது!''

''ராணி! 'நம்ப முடியாது' என்று தாங்கள் சொல்வது பொய்! நான் சொல்வது உண்மை என்பது தங்களுக்கே தெரியும். நாங்கள் தெரிந்து கொள்வதற்கு முன்பே தங்களுக்குத் தெரியும். அந்த உண்மையைத் தங்கள் காரியத்துக்கு உபயோகப்படுத்திக் கொண்டுமிருக்கிறீர்கள். முதன் முதலில் தங்களைத் தஞ்சை அரண்மனையில் நான் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது இந்த மந்திரவாதி ஆந்தையைப் போல் கத்திக் கொண்டு வந்தான். என்னை அப்பால் போய் இருக்கச் சொன்னீர்கள். தற்செயலாகத் திறந்திருந்த பொக்கிஷ நிலவறைக்குள் நான் போய் ஒளிந்து கொண்டிருந்தேன். அப்போது சில விந்தையான காட்சிகளை நான் பார்க்கும்படி நேர்ந்தது...''

'' ஆகா! அவை என்ன அபூர்வ காட்சிகள்?''

'' கந்தமாறன் மதுராந்தகத் தேவரோடு அந்த நிலவறைப் பாதை வழியாகப் போவதைப் பார்த்தேன்...''

''அதனால் என்ன ?''

''சிறிது நேரத்துக்கெல்லாம் அதே நிலவறையில் தாங்களும் பெரிய பழு வேட்டரையரும் போவதைப் பார்த்தேன். அப்போது நீங்கள் எங்கே போகிறீர்கள் என்பது தெரிந்திருக்க வில்லை. பிறகுதான் ஊகித்துத் தெரிந்து கொண்டேன். தங்கள் அன்னையின் ஆவி வடிவத்தைப் போல் நடித்துச் சக்கரவர்த்தியைத் துன்புறுத்துவதற்காகப் போகிறீர்கள் என்று தெரிந்து கொண்டேன்.....''

இத்தனை நேரம் திடமாக நின்று பேசிக்கொண்டிருந்த நந்தினி இப்போது திடீரென்று சோர்வடைந்து அங்கே கிடந்த ஆசனம் ஒன்றில் அமர்ந்தாள்.

''ஐயா! இன்னும் என்ன தெரிந்து கொண்டீர்கள் ?''

''தாங்களும் பெரிய பழுவேட்டரையரும் நிலவறைப் பாதையில் போய்க் கொண்டிருந்தபோது, மதுராந்தகரை அழைத்துச் சென்ற கந்தமாறன் திரும்பி வந்து கொண்டிருந்தான். பழுவேட்டரையரிடம் அவன் ஏதோ கூறினான். அவர் அவனுடன் திரும்பி பிடித்துக் கொண்டு வந்த காவலனிடம் ஒரு சமிக்ஞை செய்தார்....''

'' அது என்ன சமிக்ஞை ?''

''தங்களுக்கு அது தெரிந்தேயிருக்க வேண்டும். கந்தமாறனை முதுகில் குத்திக் கொன்று விடும்படி பழுவேட்டரையர் கட்டளையிட்டார். அதை நான் தடுத்துக் கந்தமாறன் உயிரைக் காப்பாற்றினேன். அதன் பயனாக, அவனுடைய முதுகில் கத்தியால் குத்திய பழி என் பேரில் விழுந்தது....''

நந்தினி மணிமேகலையைத் திரும்பிப் பார்த்து விட்டு, ''ஐயா ! ஏதேதோ சொல்லி இந்தப் பெண்ணின் மனத்தை ஏன் கலக்குகிறீர்கள்?'' என்றாள்.

'' தேவி ! இத்தனை காலமும் இதையெல்லாம் பற்றி நான் யாரிடமும் சொல்லவில்லை. உங்கள் கையில் வைத்திருக்கும் வாளை என்னிடம் தாங்கள் கொடுத்து விட்டால், இனியும் யாரிடமும் சொல்லவில்லை....''

''வாளைக் கொடுக்க முடியாது, ஐயா! எதற்காகக் கொடுக்க வேண்டும் ? யாரிடம் வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். இன்னும் ஏதாவது கற்பனை சேர்த்து வேணுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். ஏன்? இப்போதே கரிகாலரிடம் சென்று, அவர் இங்கு வருவதை நிறுத்தி விடுங்கள்! என்னை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்? போங்கள்'' என்று நந்தினி கூறியபோது, அவளுடைய கண்களில் நீர் ததும்பியது.



விநோத சம்பிரதாயம்

மைசூர் ராஜ்யத்தில் அந்தணக் குடும்பங்களில் கல்யாணத்துக்கு முன் மாப்பிள்ளை காசி யாத்திரை புறப்பட, வருங்கால மாமனாரும் மாமியாருமே அவருக்கு அலங்கரித்து அனுப்புகிறார்கள்! மாமனார் வருங்கால மாப்பிள்ளைக்குச் சந்தனம் தடவுகிறார். வருங்கால மாமியார் மாப்பிள்ளையின் கன்னத்தில் திருஷ்டி பொட்டு வைத்து, மருதாணியும் கால்களில் இடுகிறார். வருங்கால மாமனார் மாப்பிள்ளைக்கு மாலை அணிவித்து, 'பட்டம்' கட்டிய டர்பனும் அணிவித்துக் காசி யாத்திரைக்கு மாப்பிள்ளையைத் தயாராக்குகிறார்! வருங்கால மாமியார் கண்ணாடியைக்காட்டி, ''உங்க அழகைப் பார்த்துக்குங்கோ!'' என்கிறார் சிரித்தபடியே. காசி யாத்திரைக்குக் கிளம்பும் மாப்பிள்ளை கையில் அலங்கார விசிறி ஏந்தி ஒரு சுற்று நடந்து வருகிறார். அதற்குள் வருங்கால மாமனார் 'வாருமையா! உம்ம காசி யாத்திரை போதும். கல்யாணம் பண்ணிக்க வாரும்!' என்று கையைப் பிடித்துக் கல்யாண மேடைக்கு அழைத்து வருகிறார்.

மைசூர் மாநிலத்தில் கொப்பரைத் தேங்காய்களை அழகுபடுத்தி, சம்பந்திமார்களுக்கு அவற்றை வழங்கி மரியாதை செய்வது விநோத சம்பிரதாயம்.

(பெங்களூர் சீனிவாஸ் - ரோகிணி திருமணத்தில் பார்த்தவை.)
- பி. எஸ். எம்.

''அம்மணி! இளவரசருடைய சுபாவம் எனக்கு நன்றாய்த் தெரியும். அவரைத் தடுக்க என்னால் முடியாது. தடுக்க முயன்றால் அவருடைய பிடிவாதம் அதிகமாகும். ஆகையினால்தான் தங்களை வேண்டிக் கொள்ள வந்தேன்....''

''என்னை வேண்டிக் கொள்ள உமக்கு என்ன உரிமை? நீர் கூறியதெல்லாம் உண்மையாகவே இருக்கட்டும். ஈழ நாட்டில் என்னைப் பெற்றெடுத்த அன்னையை நீர் பார்த்ததாகவே இருக்கட்டும். அதற்காக நான் ஏன் என் சபதத்தைக் கைவிட வேண்டும்? என் அன்னைக்குச் சக்கரவர்த்தி பெரிய துரோகம் செய்திருக்கிறார். அவர் மேலும் அவருடைய மக்கள் மேலும் நான் ஏன் இரக்கம் காட்ட வேண்டும்? பழி வாங்குவதற்கு வேண்டிய காரணம் இன்னும் அதிகமாகவல்லவோ ஆகிறது ?''

''இல்லை, அரசி! இல்லை! தங்களுடைய பழி வாங்கும் எண்ணத்தைத் தங்கள் அன்னை சரியென்று ஒப்புக் கொள்வாரா என்று யோசித்துப் பாருங்கள். சக்கர

வர்த்தியின் மக்களை அந்த மூதாட்டி தம் உயிருக்கு உயிராகக் கருதியிருக்கிறார். அவர்களில் ஒருவரைத் தாங்கள் தங்கள் கையினால் கொல்லுவதை அவர் விரும்புவாரா என்று யோசித்துப் பாருங்கள்? ஒரு நாளும் விரும்பமாட்டார். தங்களுடைய செயலை அறிந்தால் அவர் தங்களை வெறுப்பார். அவர் உயிரோடிருக்கும் வரையில் தங்களைச் சபித்துக் கொண்டிருப்பார். இறந்த பிறகுகூட, ஆவி வடிவத்திலே வந்து தங்களைச் சுற்றி வருத்திக் கொண்டிருப்பார். வாயினால் அவர் பேச முடியாது. ஆனால் அவருடைய கண் பார்வையே தங்களை என்றென்றைக்கும் நரகத்திலும் கொடிய வேதனையில் ஆழ்த்திக் கொண்டிருக்கும்....."

நந்தினியின் கண்களில் இப்போது கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மேல் நோக்காகப் பார்த்தாள். அங்கு ஏதோ துயர மயமான காட்சியைப் பார்த்தவள்போல் அவள் முகம் வேதனை அடைந்து காட்டியது. "அம்மா! அம்மா! வீரபாண்டியருடைய தலையும் உடலும் தனித் தனியே வந்து என் பிராணனை வதைத்து எடுப்பது போதாதா? நீ வேறே வந்து என்னைச் சுற்ற வேண்டுமா?" என்று சொல்லிக் கொண்டே, அந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக்காதவள் போல் கண்களைக் கையினால் மூடிக் கொண்டாள். சிறிது நேரம் அந்த அறையில் நந்தினியின் விம்மல் சத்தம் மட்டுமே கேட்டது.

மணிமேகலை வந்தியத் தேவனைப் பார்த்து, "ஐயா! தாங்கள் இவ்வளவு குரூரமானவர் என்று எனக்குத் தெரியாமல் போயிற்று!" என்றாள்.

இதைக் கேட்ட நந்தினி உடனே தன் கண்களைப் பொத்தியிருந்த கரங்களை எடுத்துவிட்டு, "அவர் பேரில் குற்றம் ஒன்றுமில்லை, தங்காய்! என்னுடைய நன்மைக்காகத்தான் சொல்கிறார். என்னைப் பெரும் பாதகத்திலிருந்து காப்பாற்றுவதற்காகத்தான் சொல்லுகிறார்! ஆனாலும் அது என்னை இப்படித் துன்புறுத்துகிறது!" என்றாள்.

பின்னர், கண்ணீர் ததும்பிய கண்களினால் வந்தியத்தேவனை நோக்கி, "ஐயா! இதுவரையில் யாரும் சாதிக்க முடியாத காரியத்தை நீர் சாதித்துவிட்டீர். என்னுடைய இரும்பு நெஞ்சையும் இளகச் செய்து விட்டீர். இதோ உமது விருப்பத்தின்படி இந்த வாளை உம்மிடமே கொடுத்து விடுகிறேன். பெற்றுக் கொள்ளும்!" என்று வாளை நீட்டினாள்.

வந்தியத்தேவன் அதைப் பெற்றுக் கொள்ளக் கையை நீட்டிய போது நந்தினி மறுபடியும் பின்வாங்கினாள்:

"கொஞ்சம் பொறுங்கள்! வாளை எடுத்துக் கொள்வதற்குமுன் எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா என்று சொல்லுங்கள். என் சபதத்தை நிறைவேற்றாமல் நான் இங்கிருந்து கிளம்பினால் வேட்டை மண்டபத்தில் உள்ளவர்கள் என்னைச் சும்மாவிட மாட்டார்கள். உயிரோடு சிதையில் வைத்து நெருப்பு மூட்டிக் கொளுத்திவிடுவார்கள். அதற்குக்கூட நான் அஞ்சவில்லை. ஆனால் நான் சாவதற்குமுன்னால் என் தாயை ஒரு முறை சந்திக்க விரும்புகிறேன்.... வாணர்குல வீரரே! நீர் கூறியதையெல்லாம் நான் நம்பவில்லையென்று சொன்னேன். அது தவறு! ஈழநாட்டுக் காடுகளில் தலைவிரி கோலமாகத் திரிந்து கொண்டிருக்கும் என் அன்னையைப் பற்றி நீர் சொல்லியதையெல்லாம் நான் நம்புகிறேன். ஒவ்வொரு வார்த்தையையும் நம்புகிறேன். நானே அவரைப் பார்த்ததும் உண்டு...."

"எப்போது? எப்படி?" என்று கேட்டான் வந்தியத்தேவன்.

"குழந்தைப் பிராயத்தில் நான் படுத்துத் தூங்கும் போது சில சமயம் திடுக்கிட்டுக் கண் விழித்துக் கொள்வேன். அப்போது ஒரு பெண்ணுருவம் என் முகத்தினருகில் குனிந்து என்னைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கக் காண்பேன். நான் கண் விழித்ததும் அந்த உருவம் மறைந்து விடும். எனக்கு இது அதிசயத்தையும் அச்சத்தையும் அளித்து வந்தது. கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்துக் கொள்வதில் எனக்கு அப்போதிருந்து ஆசை நிரம்ப உண்டு. ஆகையால் என் முகத் தோற்றம் என் மனத்தில் நன்றாகப் பதிந்திருந்தது. நான் தூங்கும்போது என்னைக் குனிந்து உற்றுப் பார்த்த உருவம் என்னைப் போலவே இருப்பது பற்றி வியந்திருக்கிறேன். என் முகமும் என்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த உருவத்தின் முகமும் ஒரே மாதிரி இருக்கும். கூடு விட்டுக் கூடு பாய்வது பற்றிய கதைகளை நான் கேட்டிருந்தேன். என் உயிரே என் உடம்பை விட்டுப் பிரிந்து தனியாக மேலே நின்று என் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறதோ என்று சந்தேகப்படுவேன். சில சமயம், நான் இறந்து போய்விட்டேனோ, படுத்திருப்பது என் உயிரற்ற உடம்போ என்று எண்ணித் திடுக்குறுவேன். இதெல்லாம் உண்மையாக நடப்பதா, கனவில் நடப்பதா,

அல்லது என் மனப் பிரமையா, எனக்குச் சித்தக் கோளாறு ஏற்பட்டு விட்டதா என்றெல்லாம் எண்ணி வேதனைப் படுவேன். எனக்குப் பிராயம் வந்த பிறகு, அப்படி நான் கண்டதெல்லாம் உண்மையான தோற்றமேதான் என்று பல காரணங்களினால் எனக்கு நிச்சயமாயிற்று. முக்கியமாக, சுந்தர சோழர் என்னைப் பார்த்து அடைந்த குழப்பத்தைக் கவனித்து அந்த நிச்சயம் அடைந்தேன். வேறு பல அறிகுறிகளினாலும், ஆழ்வார்க்கடியான் சில சமயம் தவறிக் கூறிய வார்த்தைகளினாலும், என்னைப் போன்ற உருவம் படைத்த என் அன்னை ஒருத்தி இருக்க வேண்டும் என்று நிச்சயம் அடைந்தேன். அவரை ஒரு தடவை பார்க்க வேண்டும், அவருடைய மடியிலே படுத்து விம்மி அழ வேண்டும் என்று என் உள்ளத்தில் தாபம் குடி கொண்டது. ஐயா! இன்று தாங்கள் கூறிய வார்த்தைகளினால் அந்தத் தாபம் பன்மடங்கு அதிகமாகி விட்டது. என்னை என் தாயாரிடம் நீர் அழைத்துப் போவதாயிருந்தால், என் பழி வாங்கும் நோக்கத்தை விட்டுவிடுகிறேன் ! இந்தப் பாண்டிய குலத்து வாளை உம்மிடம் இப்போதே கொடுத்து விடுகிறேன்!'' என்று விம்மிக்கொண்டே கூறினாள் நந்தினி.

வந்தியத் தேவன் சிந்தனையில் ஆழ்ந்தான். ''இது என்ன வம்பு? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டுவிட்டதே?'' என்று எண்ணினான்.

மணிமேகலை, '' ஐயா ! நானும் தங்களை வேண்டிக் கொள்கிறேன். அக்காவின் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதாக வாக்குக் கொடுங்கள் !'' என்றாள்.

வந்தியத்தேவன் மிக்க தயக்கத்துடன் ''என்னால் முடிந்தால் பார்க்கிறேன்!'' என்று சொன்னான்.

'' அப்படியானால், உடனே நாம் கிளம்ப வேண்டும். ஆதித்த கரிகாலர் இங்கு வருவதற்குள் கிளம்பிவிட வேண்டும். இங்கிருந்து எப்படிப் புறப்பட்டுச் செல்வது ? வாசல் வழி அபாயகரமானது. எதிரே கந்தமாறனும் கரிகாலனும் வந்தாலும் வருவார்கள்!'' என்றாள் நந்தினி.

'' வேட்டை மண்டபத்துக்குள்ளிருக்கும் சுரங்கப் பாதை வழியாக அழைத்துப் போகிறேன், வாருங்கள்!'' என்றான் வந்தியத்தேவன்.

''அக்கா! நானும் வந்து விடுகிறேன். என்னையும் அழைத்துப் போங்கள் !'' என்றாள் மணிமேகலை.

நந்தினி அதைக் கவனிக்காமலே, ''வேட்டை மண்டபத்துக்குள் போக நான் விரும்பவில்லை. ரவிதாஸனும் அவனுடைய ஆட்களும் நம்மை உயிரோடு விடமாட்டார்கள்....'' என்றாள்.

''அம்மணி! தங்கள் கையில் உள்ள வாளை மட்டும் என்னிடம் கொடுங்கள். அவர்கள் நாலு பேரையும் நான் சமாளித்துக் கொள்கிறேன் !'' என்றான் வந்தியத் தேவன்.

''வேண்டாம்! அதனால் பல சங்கடங்கள் உண்டாகும். மணிமேகலை! இங்கிருந்து வெளியேறுவதற்கு வேறு வழி ஒன்றும் இல்லையா?'' என்று கேட்டாள் நந்தினி தேவி.

மணிமேகலை புருவத்தை நெரித்துக் கொண்டு சிறிது யோசித்தாள். '' அக்கா ! எனக்கு வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இவரையே கேளுங்கள். முன்னொரு சமயம் இவர் இந்த அறையிலிருந்து மாயமாக மறைந்து போனார். எப்படிப் போனார் என்று கேளுங்கள் !'' என்றாள்.

நந்தினி வந்தியத்தேவன் முகத்தைப் பார்த்தாள்.

வந்தியத்தேவன், ''ஆம், அம்மணி! வேறு ஒரு வழி இருக்கிறது. தற்செயலாக அதை நான் கண்டுபிடித்தேன். ஆனால் அதன் வழியாகப் போவது எளிதன்று. மச்சுக்கு மச்சு, மாடத்துக்கு மாடம் தாவிக் குதிக்க வேண்டும். அப்புறம் மதில் ஏறியும் குதிக்க வேண்டும். தங்களால் முடியுமா என்று சந்தேகிக்கிறேன். அதைக் காட்டிலும் மந்திரவாதியையும் அவனுடைய ஆட்களையும் ஒரு கை பார்த்து விட்டுச் சுரங்க வழியில் போவது எளிது !'' என்று சொன்னான்.

அப்போது மணிமேகலை, ''ஐயோ, அவர்கள் வருகிறார்கள் போலிருக்கிறதே!'' என்று திடுக்கிட்டுக் கூறினாள்.


இருவரும் உற்றுக் கேட்டார்கள்.

ஆம்; அப்போது அரண்மனை முன் கட்டிலிருந்து அந்த அறைக்குள் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது.

''ஐயா! சீக்கிரம் வேட்டை மண்டபத்துக்குள் போய் விடுங்கள்!'' என்றாள் நந்தினி தேவி.

''மறைந்து கொள்ள எனக்கு வேறு ஒரு நல்ல இடம் இருக்கிறது. தேவி! அந்த வாளை இப்படிக் கொடுங்கள் !'' என்றான் வந்தியத் தேவன்.

நந்தினி அவனிடம் வாளைக் கொடுப்பதற்காக அதை முன்னால் நீட்டினாள். அப்போது அவளுடைய கை தவறி, வாள் தரையில் விழுந்து, 'ஜணஜண ஜண கணகண' வென்னும் ஒலியை எழுப்பியது. (தொடரும்)



மணமகள் : அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் எம். நிக்ஸன் அவர்களின் செல்வக் குமாரத்தி ட்ரீஷியா என்று செல்லமாக அழைக்கப்படும் பட்ரீஷியா.

மணமகன் : வழக்கறிஞர் கர்னல் ஹோவர்ட் காக்ஸ் அவர்களின் செல்வக் குமாரன் எட்வர்ட் ஃபின்ச் காக்ஸ். (சட்டக் கல்லூரி] மாணவர்).

ஒயிட் ஹவுஸில் ஜூன் 5-ந் தேதி நடைபெறும் இத்தக் கல்யாணத்துக்காக மாம்பலம் மங்களம் மாமி விசேஷமாகத் தயாரித்துப் பாடி அளிக்கும் ஊஞ்சல், நலங்கு, பத்தியம், கௌரி கல்யாணப் பாட்டுக்கள்.

ஊஞ்சல்

கண்ணூஞ்சல் ஆடியிருந்தாள்;
கண்மணி ட்ரீஷியா மனமகிழ்ந்தாள் (கண்)

பொன்னூஞ்சலில் பூரித்து
பூஷணங்கள் தரித்து
எட்வர்ட் காக்ஸிடத்தில்
எத்தனையோ அன்பு வைத்து (கண்)

நலங்கு


நாதா நலங்கிட வாரும்—நைலான் சாக்ஸ் இல்லாத
பாதங்களைத் தாரும் (நாதா)

மைமோசா ஜாஸ்மின் ரோஜா
மற்றும்பல ஃப்ளவர்ஸ் சேர்த்து
மகிழ்போலே பொக்கே வைத்தேன்
மன்னவனே வந்திடுவீர் (நாதா)


என்றும் இல்லாத எனது
'எக்ஸ்டஸி'யை என்ன சொல்வேன்
என் மனத்தைக் கொள்ளை கொண்ட
ஹே! மை டார்லிங் ஹப்பி (நாதா)

பத்தியம்


ஒதுங்கியே தொடர்ந்து வந்து
உத்தமரே வேண்டுமென்று
ஓடியே வந்து நான்
மாலை யிட்டேன்.




நிக்ஸன் மகளுக்கு- கௌரி கல்யாணம்!









குணத்திலே அதிகமென்று
குணசாலி வேண்டுமென்று
குலுங்காமல் நடந்து வந்து நான்
மாலையிட்டேன்.

படித்தவன் வேண்டுமென்று
பாங்கான காக்ஸைக் கண்டு
பரபரவென்று நான் வந்து
மாலையிட்டேன்.

அக்கேஷியாப் பூப்போலே மாமனாரும்
ஆப்ரிகாட் பழம்போலே மாமியாரும்
ஆடுதன்ராஜாவாக அகமுடையாளும்—என்
அதிருஷ்டம்தான் வந்து வாய்த்திருக்க
அடியெடுத்து நடந்து வந்தேன்
ஆசையோடு மாலையிட்டேன்.

சௌரி கல்யாணம்

ட்ரீஷியா கல்யாணமே வைபோகமே

காக்ஸ் குலபாலா
  கர்னல் ஹோவார்ட் குமாரா
சகல குண ட்ரீஷியாவின்
  சர்வ சம்பத்து லோலா (சௌரி கல்)

பீராலே காலலம்பி
  மிங்காலே துடைத்து
மெனி டிரிங்க்ஸ் வழங்கி
  மணி டின்னர் கொடுத்து (சௌரி கல்)

கோமதி ஸ்வாமிநாதன்





லோகஸ் என்ற புத்தகக் கண்காட்சிக் கப்பல் ஒன்று மேநாட்டு பிரபல பிரசுர கர்த்தர்களின் சமீபத்திய வெளியீடுகளை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்குடன் கொச்சியில் தங்கியிருக்கிறது. விரைவில் அது இலங்கை வந்து அடுத்து சென்னை வரப்போகிறது. மொத்தம் எழுபத்தி ஐந்து 'டன்' எடையுள்ள ஆயிரமாயிரம் புத்தகங்களைச் சுமந்துவருகிறது. விற்பனை கிடையாது.

"லயா"

சினிமா பார்க்கச் சம்பளம் தருகிறார்கள்!



லண்டனில் பல பத்திரிகைகள் பெருமளவு நஷ்டப்பட்டுச் சிரம தசையில் இருக்கின்றன. ஒன்றன்பின் ஒன்றாக் காரியாலயங்கள் மூடப்படுகின்றன; அல்லது இரு பத்திரிகை நிறுவனங்கள் இணைந்து ஒரே பத்திரிகையாகின்றன. தயாரிப்புச் செலவு உயர்வு, விளம்பரங்கள் பெற டெலிவிஷனுடன் போட்டி போட வேண்டியிருப்பது ஆகியவை மட்டுமல்ல காரணம். தொழிற் சங்கங்களின் ஆதிக்கம் அபரிமிதமாய் வளர்ந்து விட்டது. பத்திரிகையில் சில செய்திகள் இடம் பெறாமல் இருட்டடிப்பு செய்யக்கூடத் துணிகின்றன, தொழிற் சங்கங்கள்.

இயந்திர மயமானதால் பல ஊழியர்களுக்கு வேலை இல்லை. ஆயினும் யூனியன் கெடுபிடி காரணமாய் இவர்களுக்கும் சம்பளம் தரப்படுகிறது. இவர்கள் எட்டு மணி ஷிப்ட்டுக்கோ ஒரு மணி ஷிப்ட்டுக்கோ வருவதில்லை. சினிமா ஷிப்ட்டுக்கு வருகிறார்கள். அதாவது காரியாலயத்துக்கு வந்து கையெழுத்துப் போட்டுவிட்டுச் சினிமாவுக்குப் போகிறார்கள். திரும்பி வரும் சமயம் அலுவலக நேரம் முடியும் தருணமாயிருக்கும். ஆகவே வீட்டுக்குக் கிளம்பிவிடுவார்கள்!

- 'டைம்'

இந்தியாவின்
உன்னத
சோப்புகளைத்
தயாரிக்கும்

டாடா

இப்போது
வழங்குவது



மலபார்
சந்தன
சோப்

மேனியழகை சோபிக்கச்
செய்யும் பாரம்பரியமான
சோப்

நீங்கள் மலபார் சந்தன சோப் உபயோகித்து நீராடுங்கள். இதன் மென்மையான தொட்டுணர்ச்சியால் உங்கள் சருமம் புத்துணர்வு பெற்றுக் கிளுகிளுக்கும். உங்கள் மேனி மாசு மறுவற்ற அழகு பெற்று மினுமினுக்கும்; ஓர் இன்ப உணர்ச்சி பொங்கி வரும். மலபார் சந்தன சோப், தூய்மையான சந்தன எண்ணெயிலிருந்து தயாரிக்கப் படுகிறது. இதை உபயோகித்தால், உங்கள் சருமம் இயற்கை எழிலுடன் ஒளி வீசும். இதன் மென்மையான நறுமணமோ மணிக்கணக்கிலே நீடித்து நிலைக்கும்.

டாடா தயாரிப்பு



கவிதை பிறந்த கதை





இன்று ஐம்பது வயதின ராய் இருக்கும் கவிஞர் திரு மி. ப. சோமசுந்தரம் (சோமு) அவர்கள் முதன் முதலாகப் பத்திரிகையில் வெளியிட்ட கவிதை 'தீபாவளிப் பாட்டு' என்பது. இதை எழுதியபோது அவருக்கு வயது பதினேந்து. அந்தக் கவிதை தீபாவளி யன்று பட்டாசு விடுகிற சிறு வர்களின் களியாட்டத்தைச் சித்திரிக்கிறது. இந்தப் பாட்டைப் பாராட்டி 'ஆனந்த விகடன்' தீபாவளி மலரில்

பூக்கதம்பத்தில் பூப்போலொரு முத்தம்



1937ம் ஆண்டு வெளியிட்டவர் அப்போது விகடனின் நிர்வாக ஆசிரியர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

அந்தக் காலத்தில் கல்வெடி இனுககளில் முதுகிலே எறிந்தால் வெடிக்கக் கூடிய 'மாப்பிள்ளை வெடி' என்று ஒரு ரகம் இருந்தது! இந்த வெடியைப் பற்றிய வரிகளைப் பாராட்டி எழுதினார் கல்கி அவர்கள்.

மாடியிலே போயிருக்கும் அத்தான் முதுகில்-மெள்ள
  மாப்பிள்ளை வெடிவீசிப் போடுவமடா

ஓடிப் பாய்ந்து நம்மையவர் அடிக்க வந்தால் - ஒரு
  ஒத்தைவெடி போட்டுவிட்டே ஓடுவமடா !

புத்தம் புதியகடை தீர்த்தராஜும் - கைக்குப்
  பூமத்தாப்புக் கம்பியொன்று கொடுத்திடடா

மெத்தைக் கவருகே போடாதேயடா - ஜிம்மி
  மேனி சிலிர்த்துமிக நடுங்குதடா !

1940ம் ஆண்டில் ஒரு விழாவில் இவருடைய அன்புக்கு உரிய ஒரு நண்பருக்குப் பூச்செண்டு கொடுத்து மாலை அணிவித்தார் கவிஞர் சோமு. அப்போது அந்த நண்பர் பூச்செண்டை வாங்கி மோந்து பார்த்துக் கொண்டே, ''உங்களுடைய அன்பின் மணம் இந்தப் பூச்செண்டில் கமழுகிறது'' என்று சொன்னார். இந்த வாக்கியம் கவிஞரின் உள்ளத்தில் வேகமாக வேலை செய்தது. நண்பர்களுக்குள் உள்ள நட்பின் வேகமே இப்படி என்றால், ஒரு காதலியின் கைபட்ட பூச்செண்டு காதலனுக்கு எப்படி இருக்கும் என்பதைச் 'சோமு'வின் ஒரு பாடல் அழகாகச் சித்திரிக்கிறது.

பூவின் கதம்பம் ஒன்றுதந்தேன் - அதில்
  பூப்போல் நீயொரு முத்தமிட்டாய்
பூவினை மீண்டும் நுகர்ந்தாலோ - அடீ
  பூவைநின் மணமதில் வீசுதடி - அடீ
  பூவைநின் புகழதில் பேசுதடி !

பத்திரிகை நடத்துகிறவர்களுக்கு அடுத்த இதழின் அட்டைப் படம் என்ன என்பது ஒரு பெரிய பிரச்னை. இப்படி 'வானொலி' ஆசிரியர் ஒரு சமயம் சிந்தனை செய்துகொண்டிருந்தபோது, வானொலி நிலையத் தலைவர், அந்தி மாலைக் காட்சி ஒன்றின் புகைப்படத்தைக் கொடுத்து, அதை 'வானொலி' அட்டைப் படமாக வெளியிடும்படி சொன்னார். நதியின் மேற்குக் கரையில் சூரியனுடைய கதிர்கள் படிகிற அழகான காட்சி அது. படத்தை மட்டும் வெளியிட்டால் போதுமா? அதற்குரிய ஒரு நிகழ்ச்சி ஒலிபரப்பாக வேண்டும் அல்லவா? உடனே கவிஞர் சோமு, ''பொழுது சாயுது பொருநையிலே'' என்று தலைப்புக் கொடுத்தார். அந்த மாதத்து நிகழ்ச்சிகளில் இந்தத் தலைப்பில் ஒரு கவிதைச் சித்திரம் எழுதி, அதை இசை – நாடகமாக ஒலிபரப்பினார் கவிஞர் சோமு. இந்தப் பாடல் சோமுவின் 'இளவேனில்' என்ற கவிதைத் தொகுப்பிலே இடம் பெற்றது. இந்தத் தொகுப்பைத்தான் தமிழ்நாட்டு அரசாங்கம் சிறந்த கவிதை நூல் என்று தேர்ந்தெடுத்து, 1948ம் ஆண்டில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசை வழங்கியது.

வானொலியில் ஒலிபரப்பிய இந்தப் பாடலின் ஒரு பகுதி. படகோட்டிகள் பாடுவதாக அமைந்திருக்கிறது:

''மேக்குவானம் சிவந்துபோச்சு பொருநைக்
          கப்பாலே - அதோ
மேலைக்கருடங்கள் விழுந்துபோச்சு பொதிகைக்கப்பாலே
காக்கை கருடன் கொக்குக் கூட்டம் கடலுக்
          கப்பாலே - எல்லாக்
காற்றிலேறி மறைஞ்சுபோச்சு கண்ணுக் கப்பாலே !''

இவ்வகையான பாடல்கள் தவிர, சோமு அவர்கள் தமது குடும்பத் தெய்வமான கடலூரர் பச்சைநாயகிஅம்மனிடத்தில் ஆழ்ந்து ஈடுபட்டு எழுதிய வெண்பாக்களும், விருத்தங்களும் ஏராளம். அண்மையில் வெளிவந்த 'குடிகாட்டு வேழமுகன் வெண்பா மாலை' என்ற நூல் நூற்றி எட்டு வெண்பாக்களாலாகிய பக்தி நூல். இது போன்றதே 'பச்சைமணி மாலை' என்ற நூலும். இத்தகைய பாடல்களில் ஒரு வெண்பா:

கடலூர்ப் புறத்தேழ் காடுளதால் அங்கே
கடலாம் துயரைக் கடக்கப் - படருளது
நம்பிக்கை யோடதனை நண்ணி இவர்ந்தார்க்குத்
தும்பிக்கை உண்டே துடுப்பு.   பேட்டி: பி. வி. கி

அத்தியாயம் 12

மஞ்சுளா பங்களாவுக்குப் போயிருந்தாள். தாத்தாவின் மறைவைக் கேட்ட பிறகும் அவளுக்கு வேப்பமரத்துப் பங்களாவில் இருப்புக் கொள்ளுமா? சேகர் வேப்பமரத்து விடுதியில் தன்னந் தனியாக இருந்தான். பயத்தை வென்றவன்தான் அவன். ஆனாலும்கூட அந்த வேளையில் அவன் கேட்கும் அந்த ஒலி—விநோதமான சத்தம் அவன் ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது. பூமியில் யாரோ எதையோ 'தப் தப்' என்று இடிப்பது போன்றிருந்தது. அது என்ன எங்கிருந்து வருகிறது என்பதை ஆராயலாம் என்று சேகர் வெளியே கிளம்பிய போது மஞ்சுளாவோடு பங்களாவுக்கு அவளைக் கொண்டு விடப் போயிருந்த கோபால் வந்து கொண்டிருந்தான். கச்சிதமாக உடை அணிந்திருந்தான் அவன். உருண்டு திரண்ட அவனுடைய கட்டமைந்த உடலுக்கு எந்த உடையுமே அழகாகத்தான் இருக்கும்.

''ஆவிகளைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன?'' என்று வரும்போதே கேள்வியுடன் வந்தான் கோபால்.



சுழிக்காற்று

''எந்த ஆவி?..... நீராவியா?... அல்லது?...'' என்று இழுத்தான் சேகர். கோபால் எந்த ஆவியைப் பற்றிக் குறிப்பிடுகிறான் என்று அவனுக்குத் தெரியாதா?

''இறந்தவர்களின் ஆவியைப் பற்றிப் பேசுகிறேன் அப்பா நான். இந்தப் பண்ணையிலே இறந்து போனவர்களெல்லாம் நம் கண் முன்னே நடமாடுகிறார்களப்பா'' என்றான் கோபால், சேகரின் அருகே வந்து நின்று கொண்டு. அவன் இரு கைகளும் பாண்ட் பாக்கெட்டினுள் பதுங்கிக் கொண்டிருந்தன.

''நீ என்ன சொல்கிறாய்? ஏதாவது புதிர் போடுகிறாயா? எனக்கு அதையெல்லாம் விடுவிக்கத் திறமை கிடையாது'' என்றான் சேகர் இலேசான முறுவலுடன்.

''இருபது வருடங்களுக்கு முன்பே இறந்து போன நபர்களுடனெல்லாம் நாம் பழகுகிறோமோ என்று நினைக்கிறேன் பிரதர். அந்த வேலப்பனை உனக்கு நினைவிருக்கிறதா?'

''ஆமாம்! காளியப்பனுடைய சகோதரனைத்தானே சொல்கிறாய்? நன்றாக நினைவிருக்கிறதே. பழங்காலத்து ஆள். அதனாலென்ன?''

''இந்தப் பண்ணையின் வடக்குக் கோடியில் சில கல்லறைகள் உள்ளன. அதில் ஒன்றில் 'வேலப்பன்' என்று எழுதி இறந்த நாளையும் குறித்திருக்கிறது! நான் நினைக்கிறேன்: யாராவது அவனை அந்தக் கல்லறைக்குள்ளிருந்து வெளியேற்றி இங்கு உலவ விட்டிருக்கிறார்களோ என்று.''

சேகர் ஒலி யெழுப்பாமல் சிரித்தான். கோபால் தன் ஆராய்ச்சிக்கு ஆதாரமாக அமைந்ததை விளக்கினான். நீர்




மலாவைத் தேடிச் சென்றபோது பண்ணையின் வடக்குக் கோடியில் ஒதுக்கப்பட்டிருந்த ஸ்மசான பூமியைக் காணும் வாய்ப்பு அவனுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஜமீனின் பிரத்தியேகமான மயான பூமி அது. அந்தக் குடும்பத்தில் இறந்தவர்களைப் புதைப்பதுதான் வழக்கம் போலும். அப்படிப் புதைக்கப்பட்டவர்களின் சமாதிகள் கொண்ட கல்லறைப் பூமியில் ஒரு கல்லறையின் நடு கல்லில் 'வேலப்பன்' என்று பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டதின் விளைவு தான் கோபாலுடைய இந்த வியாக்கியானத்தின் விருத்தாந்தம்.

வேலப்பன் இரவு பகல் பாராமல் உழைப்பதும் இந்த வயதில் உரம் பெற்ற உடலுடன் இருப்பதும் கோபாலை இப்படிக் கற்பனை செய்ய வைத்திருக்கிறது.

''நான் சொல்வது பொய்யென்றால் என்னுடன் வந்து பார்! இந்த வேளையில் மனிதன் செய்யும் வேலையையா அவன்

கௌசிகன்


துள்ளும் குழந்தைகள் நன்கு வளர்ந்திட
ருசித்துப் பருகட்டும் போர்ன்விடா!
MONITOR
ஓடி விளையாடும் குழந்தைகள்
உணவிலிருந்து பெறும் சக்தியை
பள்ளியிலும் விளையாட்டிலும்
வெகுவாக இழந்து விடுகின்றனர்.
அவர்களுக்கு தேவையான
இச்சக்தியை போர்ன்விடா
அளிக்கிறது. கோகோ, பால்,
மால்ட், சர்க்கரை இவை
இனிதே சேர்ந்த போர்ன்விடா,
ஒரு காட்பரிஸ் தயாரிப்பு.
Cadbury's
Bournvita
the ideal food drink
for strength and vigour
450g
net
சக்திக்கும் வலிமைக்கும்—
மற்றும் தீஞ்சுவைக்கும் காட்பரிஸ் போர்ன்விடா!
B/4664 TAM

செய்கிறுன்? அதைப் பார்த்த பிறகு உன் முடிவைச் சொல்'' என்று அழைத்தான் கோபால்.

சேகரும் கோபாலும் மெல்ல நடந்தார்கள். சேகர் கேட்ட அந்தச் சத்தம் வர வர அருகில் நன்ருகக் கேட்க ஆரம்பித்தது. பண்ணையின் எல்லையைப் பறைசாற்றிக் கொண்டு கோட்டை மதிலைப் போல் சுவர் ஓங்கி உயர்ந்து சூழ்ந்திருந்தன. அதற்குள் — அந்த மூலையில் இன்னெரு குட்டிச் சுவர் எழுந்து அந்தப் பிரதேசத்தைத் தனிமைப்படுத்திக் கொண்டிருந்தது. அது தான் மயான பூமியாக இருக்க வேண்டுமென்பதைப் புரிந்து கொண்டான் சேகர். குட்டிச் சுவருக்குப் பின்னுல் குட்டை மரங்கள் வரிசையாகப் பயிராக்கப்பட்டு அந்தப் பிரதேசத்துக்குத் திரைச் சீலை கட்டி மறைத்ததைப் போலிருந்தது. அதற்குள் புகுவதற்கான இரும்புக் கதவு திறந்தே யிருந்தது. இருவரும் உள்ளே போனுர்கள். அங்கு சற்றுத் தொலேவில் ஓர் இடத்திலிருந்து மண் வெளியே வந்து விழுந்து கொண்டிருந்தது. தானுக அல்ல. யாரோ குழி தோண்டிக் கொண்டிருந்தார்கள். அந்த யாரோவின் தலை உச்சிப் பாகம் மட்டும் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தது. அது தோன்றும்போதெல்லாம் தோண்டி எடுத்த மண்ணை மேலே வாரி வீசிக்கொண்டிருந்தன இரண்டு உறுதியான கைகள். அந்த யாரோதான் வேலப்பன் என்று விளக்கம் கொடுத்தான் கோபால்.

வேலப்பன் புதைகுழி தயாரித்துக் கொண்டிருந்தான்.

''யாரு, வேலப்பனு?...?'' என்று குரல் கொடுத்தான் சேகர். இருள் பிரிய ஆரம்பித்திருந்த வேளை அப்போது.

குரலைப் புரிந்து கொண்டது குழிக்குள்ளிருந்த உருவம். ''ஆமாம் ஐயா!'' என்றும் பதிலளித்தது. சேகர் அருகில் சென்றதும் திகைத்துப் போனுன். வேலப்பன் தோண்டிக் கொண்டிருக்கும் குழிக்கு அப்பால் இன்னெரு மண்மேடு. அப்போதுதான் தோண்டி எடுத்த மண் குவிக்கப் பட்டிருந்தது. அதன் அருகே இன்னெரு குழி. அப்படியானுல் வேலப்பன் இப்போது தோண்டுவது இரண்டாவது குழி.

''வேலப்பா... வந்து பங்களாவிலே பெரிய எஜமானர் தர்மலிங்கம் ஒருத்தர் தான் இறந்ததாகக் கேள்விப்பட்டேன்'' என்று தன் பேச்சை முடிக்காமல் அப்பால் உள்ள குழியைப் பார்த்தான் சேகர்.

''ஆமாங்க. பெரியய்யா ஒருத்தர் தான் இறந்தது.'' அவன் வாய் பேசினுலும் கை தோண்டும் பணியை நிறுத்தவில்லை.

''ஆனுல் நீ இரண்டு குழிகள் வெட்டிக் கொண்டிருக்கியே?''

ஒரு விநாடி வேலப்பன் மௌனமாக இருந்தான். பிறகு, ''நேரத்தை மிச்சப்படுத்தத்தான். ஒரு வேலே செய்யும் போது அவகாசம் இருக்குமானுல் இன்னும் கொஞ்சம் அதிகமாகவே வேலே செய்துவிட்டால் பின்னுல் பயன்படுமில்லீங்களா? இன்னெரு குழி தோண்ட வேண்டிய அவசியம் எப்போதாவது ஏற்படுமானுல் அப்போது மண்வெட்டி கடப்பாறை அது இது என்று தேடிக்கிட்டிருக்க வேண்டாமே'' என்று அவன் வாய் பேசிக் கொண்டிருந்தாலும் கை வேலே செய்து கொண்டுதானிருந்தது.

கோபால் அங்கு சற்றுத் தொலேவிலிருந்த ஒரு சமாதியையும் அதன் தலைமாட்டில் நட்டிருந்த நடுகல்லில் எழுதியிருந்த பெயரையும் சுட்டிக் காட்டிச் சேகரின் கவனத்தைத் திருப்பினுன். சேகரும் அதைப் பார்த்தான்.

''கோபால், இது பொது மயானம் அல்ல. இந்தப் பண்ணேக்கே உரிய தனிப்பட்ட இடம். இங்கு சில சமாதிகள் ரொம்பப் பழங்காலத்ததாகக்கூட இருக்கும். தர்மலிங்கம் இந்தப் பண்ணேயை வேறு யாரிடமிருந்தோ வாங்கியிருக்கிருர். அந்தச் சந்ததியார்களின் சமாதிகள் இங்கு இருந்ததை அப்படியே இவரும் வைத்திருக்கிருர். ஆகவே இந்த வேலப்பனும் அந்த வேலப்பனும் ஒன்றல்ல'' என்று விளக்கினுன் சேகர். ஆனுல் கோபாலுக்கு என்னவோ நம்பிக்கைப்படவில்லே. இந்த வேலப்பனே அவன் அந்தக் கல்லறையிலிருந்து வெளிப்பட்டிருக்கும் ஆவியாகத்தான் எண்ணினுன்!

சேகர் வேலப்பனிடம் பேச்சுக் கொடுத்தான். ''வேலப்பா! உன் மூதாதையர் இந்தப் பண்ணேயில் ரொம்பக் காலமாகவே வேலே செய்து வருகிருர்களா?''


மண்வாரி நிறைய மண்ணை எடுத்து மேலே வீசிக் கொண்டே வேலப்பன் சொன்னுன்: ''இந்தப் பண்ணே எங்க அப்பாருக்கிட்ட இருந்திச்சு. அவரு கிட்டேயிருந்து தர்மலிங்கம் வாங்கினுரு. எங்க தாத்தா பேரும் வேலப்பன்தான்'' என்று சொல்லிக் கொண்டே குழியிலிருந்து தாவி மேலே ஏறினுன் அவன். இரண்டு சக்கரக் கைத்தள்ளு வண்டியில் மண்வாரி, கடப்பாறை, மண்வெட்டி ஆகியவைகளை அள்ளிப் போட்டு, அதைத் தள்ளிக் கொண்டு போகத்

திருப்பினான். அப்போது துருப்பிடித்த சக்கரம் கிரீச்சிட்டு முனகும் மெல்லிய ஒலி எழுந்தது. அன்றிரவு சேகர் கேட்ட அதே 'கிரிக் கிரிக்' ஒலி.

'வீல் பாரோ' என்று சொல்லப்படும் அந்தத் தள்ளுவண்டியின் ஒலியை ரசித்தவாறே சேகர் வேலப்பனோடு நடக்க ஆரம்பித்தான். கோபால் அவ்விருவரையும் பின் தொடர்ந்தான்.

''நேற்று இரவு முழுதும் நீ தூங்கப் போகவே இல்லையா வேலப்பா?'' என்று சேகர் கேட்டான்.

''ஓ! தூங்கினேனே. இல்லாட்டி என்னாலே இத்தினி வேலை செய்ய முடியுங்களா?'' என்றான்.



''அப்போ விடியறதுக்கு ரொம்ப நேரத்துக்கு — பல மணி நேரங்களுக்கு முன்னாடியே எழுந்திருந்து இந்த வண்டியைத் தள்ளிக்கிட்டு வேலைக்குக் கிளம்பிட்டியா?''

வேலப்பன் பலமாகத் தலையை அசைத்தான். ''ஒருவேளை நான் தூக்கத்திலேயே எழுந்திருந்து வந்திருந்தாத்தான் உண்டு. நாலு மணிக்குத்தானே நான் குழி தோண்ட வந்தேன்!'' என்றான்.

''அப்படின்னா பாதி ராத்திரியிலே இந்த உன் வண்டியை வேறு யாரோ பயன்படுத்தியிருக்கணும். இதே 'கிரீச் கிரீச்' ஒலியை நான் நேற்று நள்ளிரவில் கேட்டேன்'' என்றான் சேகர்.

வண்டியின் கரகரப்பான ஒலியும் வேலப்பனின் நடையும் நின்றன. ''அப்ப என் சந்தேகமும் சரிதான். நான் கூட ஒரு நாள் நடு நிசியிலே இந்த வண்டியை யாரோ தள்ளிக்கிட்டுப் போற சத்தத்தைக் கேட்டேன். ஆனால் இதை யார் உபயோகப்படுத்தினாங்கன்னு இன்னிவரையிலே தெரிஞ்சுக்க முடியல்லே'' என்றான் வேலப்பன். அவன் முகத்தில் வியப்பு வரியிட்டிருந்தது.

''நீ கேட்டதும் நேற்றிரவுதானா?''

''நேத்தி ராவிலே நான் கேக்கல்லே. ரொம்ப நாளைக்கு முன்னே.''

''புயலடித்ததே, அன்று இரவிலா?'' தன் அனுமானத்துக்கு அநுசரணையான பதிலை எதிர்பார்த்தான் சேகர்.

ஆனால் வேலப்பனின் தலை பலமாக அசைந்தது. ''அன்னிக்கு இல்லே. அந்தப் புயல் ஒரு பயங்கரம் ஐயா. காற்று ஊளையிட்ட அந்த ஓலத்தில் வேறு எந்தச் சத்தத்தையுமே கேட்க முடியாது. நான் கேட்டது அன்னிக்கு ராத்திரி இல்லே. வேறொரு நாள் ராத்திரி.''

சேகர் அந்த ஒலியையும் புயலையும் ஒன்றாக்கிக் குழப்பிக் கொண்டிருந்தான்.

''நீங்க இதைப் பத்திக் கேட்டதும் நல்லதாப் போச்சு. இதோட சக்கரங்களுக்குக் கிரீஸ் போடணும்'' என்று கூறியபடியே வேலப்பன் தன் வண்டியைத் தோப்புப் பக்கமாகத் தள்ளிக்கொண்டு போனான்.

உதய சூரியனின் பொன்னொளியில் குளித்துக் கொண்டிருந்தன அந்தப் பண்ணையின் பயிர் பச்சைகள். அது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. காய்கறிப் பாத்திகள் வரிசை வரிசையாக நீண்டு கிடந்தன. பல பாத்திகளில் நாற்றங்கால்களாகச் சின்னஞ் சிறு கன்றுகள் மண்ணிலிருந்து நம்பிக்கையும் உற்சாகமும் பொங்க இந்த உலகத்தைக் காணத் தலைதூக்கி நின்றன. பாத்திகளில் இரண்டு பெண்கள் குனிந்து ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தனர். கண்ணுக்கு எட்டியவரை பச்சைக் கம்பளத்தை விரித்தாற் போன்றிருந்த அந்த அழகிய காட்சியையே சில விநாடிகள் பார்த்துக்கொண்டு நின்றான் சேகர்.

பண்ணையின் பிரதான பங்களாவிலிருந்து சற்றுத் தொலைவில், தோட்டம் துரவுகளுக்கு அருகில் வரிசையாகப் பல கட்டிடங்கள் இருந்தன. இரண்டு பெரிய டிரக் கார், நிலங்களை உழும் ஒரு டிராக்டர், நான்கு மோட்டார்கள் இத்தனையும் நிறுத்துவதற்கான வசதிகள் கொண்டதொரு பெரிய காரேஜ் அந்தக் கட்டிடங்களில் ஒன்று. கார் மற்றும் பண்ணை யந்திரங்களைப் பழுது பார்க்க வசதியாக அங்கேயே ஒரு சிறிய தொழிற்சாலையும் இருந்தது. பண்டகசாலைகள் கிடங்குகள் இத்தனையும் இருந்தன, பண்ணைக்கான மின்சாரம் முழுதும் விநியோகம் செய்யப் பிரத்தியேகமானதொரு மின்சார நிலையமும் இருந்தது. அங்கு பலவிதமான சக்தி படைத்த மோட்டார்கள் இயங்கின. எந்த விஷயத்திலும் தன்னிறைவு பெற்றதாகத் தனித்து இயங்கக் கூடியதற்

போர்ஹென்ஸ் பற்பசையால் தவறாது பிரஷ் கொண்டு பல் துலக்கினால் ஈறு உபாதைகளையும் பற்சிதைவையும் தடுக்கலாம்

சிறியோர், பெரியோர், யாவரிடமிருந்தும் தாமாகவே தேடிவந்த நற்சாட்சிக் கடிதங்கள், ஈறு உபாதைகளை நிறுத்தி, பற்சிதைவைத் தடுக்கும் போர்ஹென்ஸ் பற்பசையின் அற்புதமான விளைவுகளைப் பாராட்டுகின்றன. அந்தக் கடிதங்களை ஜெப்ரி மானேர்ஸ் & கோ. லிமிடெட்டின் எந்த அலுவலகத்திலும் காணலாம்.

"போர்ஹென்ஸ் பற்பசைக்கும், அதை நான் தவறாமல் உபயோகிக்கச் சொன்ன டாக்டருக்கும் நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்... இதன் விளைவு, எனது 75வது வயதிலும், ஒரே மாதிரியாகப் பளபளப்பான என் பற்கள் ஆரோக்கியமான ஈறுகளில் வலுவாக வேரூன்றியுள்ளன..."

—விபூதி பூஷண் போஸ், கல்கத்தா

"உலகப் புகழ் பெற்ற உங்கள் பற்பசையை என் சிறு பிராயம் முதல் தவறாது உபயோகித்து வருகிறேன். இன்று என்னுடைய ஒவ்வொரு பல்லும் வலுவாக இருக்கிறது ... நான் போர்ஹென்ஸை எல்லா வகையிலும் சிறந்த பற்பசையாகக் கருதுகிறேன். ஏனெனில் அது பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை. அது ஒன்றே போதுமே...!"

—எஸ்.என். சட்டர்ஜி, கோயம்புத்தூர்

பற்களைத் தக்க முறையில் பராமரிக்க, இரவிலும் காலையிலும் போர்ஹென்ஸ் பற்பசையையும், போர்ஹென்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத்பிரஷ்ஷையும் உபயோகியுங்கள் ... தவிர, உங்கள் பல் வைத்தியரையும் தவறாது பார்த்து வாருங்கள்!



இலவசம்! "பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்னும் விவரமான வண்ணப் புத்தகம்.

இந்தப் புத்தகத்தைப்பெற, (தபால் செலவுக்காக) 20 பைசா தபால் தலையை "மனேர்ஸ் டென்டல் அட்வைஸரி பியூரோ, தபால் பை 10031, பம்பாய் 1" என்னும் முகவரிக்கு அனுப்புக. புத்தகம் 10 மொழிகளில்* கிடைக்கிறது.

K 6

பெயர் ____________ வயது ____________

முகவரி ________________________

*எந்த மொழியில் புத்தகம் வேண்டுமோ, அதன் கீழ் தயவு செய்து கோடிடவும். ஆங்கிலம், இந்தி, மராட்டி, குஜராத்தி, உருது, வங்காளி, தமிழ், தெலுங்கு, மலையாளம், அல்லது கன்னடம்.


போர்ஹென்ஸ் பல் வைத்தியரொருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை

90F-183 TAM.




சென்னை, பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனியைச் சார்ந்த திரு R. K. நாகராஜ் அவர்களின் குமாரத்தி செல்வி : ஜெயலக்ஷ்மிக்கும், கல்கத்தா திரு V.V. ராமன் அவர்கள் குமாரர் செல்வன் : V. பலராமனுக்கும் திருமணம் சமீபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !




சௌ. மைதிலி – சி. ரகுராமன்

ஸ்ரீதர் ஏஜன்ஸிஸ் விளம்பர நிறுவனத்தைச் சேர்ந்த திரு M. V. K. கிரி அவர்களின் குமாரர் சிரஞ்சீவி ரகுராமனுக்கும் (ஸ்டெனோ, என்னூர் பவுண்டரி; சென்னை) வேலூர் ட்வின் ஆர்ட்ஸ் இன்ஸ்டிட்யூட் பிரின்ஸிபால் திரு கோபால கிருஷ்ணனின் சகோதரி சௌ. மைதிலிக்கும் திருமணம் வேலூரில் வெகு சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள் !



மதராஸ் அட்வர்டைஸிங் கம்பெனி டைரக்டர் ஸ்ரீ எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யரின் புதல்வி சௌ. உஷாவுக்கும், ரிஸர்வ் பாங்கில் பணிபுரியும் சிரஞ்சீவி கே. நடராஜன் B.A.,C.A.,I.I B.க்கும் திருமணம் சமீபத்தில் சென்னை "தர்மபிரகாஷ்"ல் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !



ஜாம்ஷெட்பூர், டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பெனியைச் சார்ந்த ஸ்ரீ ஜே. ரெங்கராஜன் அவர்களின் சகோதரரும் சென்னை கிளை உதவி மானேஜருமான சிரஞ்சீவி ஜே. வி. ராகவனுக்கும், செங்கல்பட்டு, அட்வகேட் ஸ்ரீ டி.கே. சம்பத் அவர்கள் குமாரத்தி சௌ. சுகன்யாவுக்கும் செங்கல்பட்டில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கும் மாலை நடந்த வரவேற்புக்கும் ஏராளமான உறவினர்களும், நண்பர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர்.


வாழ்க மணமக்கள் !

கான வசதிகள் கொண்டதாக விளங்கியது இந்தப் பண்ணை.

அந்த அதிகாலை வேளையில் அந்தப் பண்ணையின் விஸ்தாரத்தைப் பார்த்து வியந்தபடி பங்களாவை நோக்கி நடந்து கொண்டிருந்தான் சேகர். பங்களாவினுள் நுழைந்ததுமே விசாலமான கூடத்தின் நடுவே கம்பீரமாக வீற்றிருந்த நீண்ட பெரியதொரு மேஜையின் ஒரு பக்கமாக மஞ்சுளா உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் முன்னால் ஒரு 'டிரே'யில் விலையுயர்ந்த பீங்கான்களினாலான டீசெட் இருந்தது. ஒன்றில் பால், மற்றதில் டிக்காக்ஷன், இரண்டு மூன்று ஜோடி கப்பும் ஸாஸரும், வேலைப்பாடமைந்ததொரு வெள்ளிப் பேலாவில் சர்க்கரை, அதில் ஒரு ஸ்பூன் - தேவையான அளவுக்குத் தருந்தபடி காப்பியைக் கலந்து பருக அத்தனையும் அப்படித் தனித் தனியே வைக்கப்பட்டிருந்தன.

மஞ்சுளாவின் அருகில் போய் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டான் சேகர். மௌனமாக ஒரு கோப்பையில் பாலை ஊற்றிச் சிறிது சர்க்கரையையும் போட்டபின் டிக்காஷனை அதில் சேர்க்கலானான். இடையே மஞ்சுளாவை அவன் பார்வை ஸ்பரிசித்தது. தன் அருமைத் தாத்தாவைப் பிரிந்துள்ள அந்தச் சோகத்திலும் சேகரின் பார்வை பட்டதும் அவள் இதழ்களில் ஒரு மென்னகை மலர்ந்தது.

அதே வேளையில் கோகிலா மாடிப் படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தாள் இவர்களை நோக்கி. பலவந்தமாகத் துக்கக் களையை முகத்தில் பூசிக்கொண்டிருப்பதைப் போலிருந்தது அவள் தோற்றம். மேஜையின் மறு பக்கத்தில் இவர்களருகே வந்து அமர்ந்தவள் மஞ்சுளாவை நோக்கி, ''உன் சித்தப்பாவுக்கு அவர் குறிப்பிட்டிருந்த எல்லா இடங்களுக்கும் டிரங்கால் செய்தேன். எங்குமே அவர் இல்லை. இன்று மாலை வரை பார்ப்போம். வராவிட்டால்...'' அவள் பேச்சை முடிக்கவில்லை. பங்களாவின் வாசலில் ஒரு கார் வந்து நின்றது. கோகிலா சட்டென்று எழுந்து வாசற்புற வராந்தாவுக்கு விரைந்தாள். மஞ்சுளா உட்கார்ந்தபடியே ஜன்னல் வழியாகப் பார்த்தாள். காரிலிருந்து இறங்கிய நபரைக் கண்டதும் அவளும் எழுந்திருந்துவிட்டாள். போலீஸ் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த சி. ஐ. டி. துரைசாமியும் அவருடன் இன்னும் மூன்று பேர்களும் வண்டியிலிருந்து கீழே இறங்கினர்கள்.



மோசம் போங்கள்!

''என்ன? ஒரு எழுத்துக்கூடத் தெரியல்லையா! அப்படியானால் கண் பார்வை ரொம்ப மோசமாகத் தான் இருக்கு!''

'இஷன்'

படுக்கையிலிருந்து புரண்டு எழுந்த அலங்காரத்தோடு கையில் ஒரு துப்பறியும் நாவலுடன் லலிதாவும் அங்கு காட்சியளித்தாள்.

மஞ்சுளாவும் பின்னால் சேகரும் அவன் பின்னால் கோபாலும் வராந்தாவுக்கு நகர்ந்தார்கள். லலிதா ஹாலிலேயே உட்கார்ந்து கையிலுள்ள புத்தகத்தில் மூழ்கிப் போனாள். துரைசாமி மிகுந்த மரியாதையுடன் பெரியவரின் மறைவுக்குத் தம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார். பிறகு ''இந்த மாதிரியானதொரு சந்தர்ப்பத்தில் நான் என் கடமையைச் செய்வதற்காக இங்கு வந்து உங்களுக்குத் தொந்தரவு தருவதற்கு மன்னிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். நர்ஸ் நிர்மலாவின் மறைவு பற்றித் தாம் அங்கு சோதனையிட வந்திருப்பதை அத்தனை நாசூக்காகத் தெரிவித்துக் கொண்டார் அவர்.

ஜமீந்தாரிணிக்கே உரிய மிடுக்குடன் கோகிலா கம்பீரமாகப் பதிலளித்தாள். ''உங்கள் கடமையை நீங்கள் செய்வதில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபமும் கிடையாது. ஆனால் என் கணவரின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் எதையும் நான் அனுமதிப்பதற்கில்லை.''

''எவ்வித ஆர்ப்பாட்டமும் இருக்காது. மிக மிக அமைதியாகவே எங்கள் வேலையை முடித்துக் கொள்வோம். அதற்கு நான் உறுதி'' என்றார் துரைசாமி. பிறகு தம் ஆட்களுக்குக் கண்களாலேயே ஜாடை காட்டினார். செய்ய வேண்டியதை முன்பே அவர்களுக்குத் திட்டம் வகுத்துக் கொடுத்திருந்ததைப் போல அவர்கள் மௌனமாகத் தோட்டத்துப் பக்கம் சென்றனர். அவர்களுடன் துப்பறியும் துரைசாமியும் சென்றார்.

துப்பறியும் துரைசாமி தம் சகாக்களுடன் திரும்பி வந்தபோது மஞ்சுளா

அவருடன் அவர் காரை நோக்கி நடந்து கொண்டே கேட்டாள்: ''நிர்மலாவைப் பற்றிய மர்மம் ஏதாவது விடுவிக்க முடிந்ததா?''

''நான் தெரிந்து கொண்டதை விட இன்ஸ்பெக்டரிடம்தான் அதிகத் தகவல்கள் இருக்கின்றன. அதன் பேரில் தான் என் ஆராய்ச்சியும் இருக்கும்'' என்றார் சி. ஐ. டி.

''மிஸ்டர் துரைசாமி! நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. காளியப்பனைப் பற்றி உங்கள் முடிவு என்ன? நீங்கள் சொல்ல விரும்பாவிட்டாலும் எனக்கு அது தெரியும்'' என்றாள் மஞ்சுளா.

''மஞ்சுளா, இனி நீங்கள் அவனுடன் பேச முடியாதென்று நினைக்கிறேன்.''

''அப்படியானால் ஏகாம்பரம் அவனைக் கைது செய்து ஜெயிலில் தள்ளிவிட்டார் என்று சொல்லுங்கள்.''

''நான் அப்படிச் சொல்லவில்லையே?''

''நீங்கள் சொல்லா விட்டாலும் நடந்திருப்பது அதுதான். எனக்குத் தெரியும். காளியப்பனை இன்ஸ்பெக்டர் நிஜமாகவே உள்ளே தள்ளிவிட்டாரா? ஏன்...? மிஸ்டர் துரைசாமி, இந்த அநியாயம் ஏன்?'' மஞ்சுளா கோப வெறியில் கூவினாள்.

துரைசாமியோ மிக்க நிதானமாக ''இன்ஸ்பெக்டர் அதைச் செய்யக் கடமைப்பட்டவர் மஞ்சுளா. அவ்வளவு தான் என்னால் கூற முடியும். உங்கள் தோழி நிர்மலா என்ன ஆனாள் என்பதைத் தெரிந்து கொள்ளுவதில் உங்களுக்கு ஆர்வமும் அக்கறையும் இருக்குமானால் தயவுசெய்து என்னை இங்கு தாமதிக்கச் செய்யாதீர்கள்'' என்றார்.

மஞ்சுளா சட்டென்று சேகரின் பக்கம் திரும்பினாள். ''பார்த்தீர்களா, சேகர்...போலீஸ் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்துக்குத் தாம் செய்வது தவறு என்பதை நான் உணர்த்தத்தான் போகிறேன். எப்படியும் காளியை இந்தச் சிக்கலிலிருந்து விடுவித்தே தீருவேன். நீங்களும் வருகிறீர்களா?'' என்று கேட்டாள் மஞ்சுளா. அந்தக் கேள்வியே அவள் எங்கோ கிளம்பத் தயாராகிவிட்டாள் என்பதை எடுத்துக் காட்டியது.

''நீ கூப்பிட்ட பிறகு நான் வராமல் இருக்க முடியுமா?'' என்று சேகர் உடனே கிளம்பினான்.

''நானும் கூட...'' என்று தொடர்ந்தான் கோபால்.

மஞ்சுளா அருகில் இருந்த ஒரு இடைவழிக் கதவு மூலம் வீட்டினுள் நுழைந்தாள். வேகமாகச் சென்ற அவள் அங்கு ஓர் இடத்தில் சுவரில் பதிந்துள்ளதொரு பலகையின் அருகில் போனாள். அந்தப் போர்டிலிருந்த வரிசையான கொக்கிகளில் பல சாவிகள் தொங்கிக் கொண்டிருந்தன. அவைகளிலிருந்து ஒரு சாவியை எடுத்துக் கொண்டு நடந்தாள். சேகருக்கும் கோபாலுக்கும் அவள் இயக்கத்துக்கு ஏற்பச் செயல்படுவதைத் தவிர வேறு வழியில்லை. மஞ்சுளா கார்கள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த காரேஜுக்குப் போனாள். விதானம் மடக்கப்பட்டிருந்ததொரு காரின் அருகில் சென்று கதவைத் திறந்து டிரைவிங் சீட்டில் அமர்ந்தவள் கொண்டுவந்திருந்த சாவியைக் கொண்டு காரைக் கிளப்பினாள். சேகரும் கோபாலும் இதற்குள் அவள் அமர்ந்த காருக்குள் புகுந்து கொண்டார்கள். மஞ்சுளா அந்தக் காரைப் பின்பக்கமாகச் செலுத்திக் கொண்டு காரேஜுக்கு வெளியே கொண்டு வந்தாள். அதுவரையில்தான் அவளிடம் நிதானம் இருந்தது. அதன் பிறகு ஓர் உறுமலுடன் அந்த வண்டி பாய்ந்தது. இல்லை, பறக்க ஆரம்பித்தது. இத்தனை லாகவமாக, வேகமாக அவளால் கார் ஓட்ட முடியும் என்பதைக் கண்டு வியந்து மகிழ்ந்து கொண்டிருந்தார்கள் ஆண்கள் இருவரும்.

பண்ணையைப் பின்னுக்கு உந்தி உதறிவிட்டு ஊருக்குள் புகுந்த மஞ்சுளாவின் கார் எங்கும் நிற்கவே இல்லை. எங்கும் தான் — காளியப்பனின் டாக்ஸி பனித்துளிகள் படிந்து அதன் வழக்கமான இடத்தில் நின்று கொண்டிருந்தது. அதன் அருகில் வந்த போதுகூட அவள் தன் காரின் வேகத்தை மட்டுப் படுத்தவில்லை. போலீஸ் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தின் அலுவலகத்தின் அருகிலும் நிற்கவில்லை. ஸ்டேஷனினுள் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. உள்ளே இன்ஸ்பெக்டர் இருக்கிறார் என்பதைத் அறிவித்துக் கொண்டு. ஆனால் போலீஸ் ஸ்டேஷன் அருகில் வந்த போது மஞ்சுளா ஆக்ஸிலேட்டரை அழுத்தித் தன் வாகனத்தின் வேகத்தை இன்னும் அதிகமாக்கினாள். திரும்பி வளைந்து உறுமி ஓடி முடிவாக அவள் ஒரு வீட்டின் முன்னால் கொண்டு போய் வண்டியை நிறுத்திய கையோடு ஹாரனையும் சற்று உரக்க, உறுதியாக ஒலிக்கச் செய்தாள். பிறகு காரிலிருந்து குதித்து இறங்கி ஓடிப் படிகளில் ஏறியவள் வீட்டுக் கதவையும் படபடவென்று அதிர வைத்தாள். (தொடரும்)


வயிற்றுக் கோளாறா?
வாயுவா? அமில உபாதையா?
நெஞ்செரிச்சலா?
அஜீரணமா?
2 ரென்னி மாத்திரைகளை
மெல்லுங்கள்... விரைவிலேயே நிவாரணம் பெற

mcm/ri/2 tm


குளுமை... தூய்மை... மென்மை
அளிப்பது எலுமிச்சம் பழம்
எலுமிச்சை எண்ணெயிலிருந்து தயாரான ல்யூர் லைம் ஷாம்பு கூந்தலுக்கு குளுமையும் தூய்மையும் மென்மையும் தரும் சிறந்த ஷாம்பு!
எலுமிச்சம் பழச் சத்து நிறைந்த ல்யூர் லைம் ஷாம்பு, உடலுக்கு குளிர்ச்சியூட்டி கேசத்திற்கு சிறந்த பராமரிப்பை தருகிறது. பொடுகைத் தடுத்து கூந்தலில் படியும் மாசைப் போக்கி விடுகிறது. இதமான முறையில் சுத்தப் படுத்தி, கேசத்தை பட்டுப்போன்ற பளபளப்புடன் பராமரிக்கிறது ல்யூர் லைம் ஷாம்பு.
Lure
LIME SHAMPOO
குளுமையும் தூய்மையும் கொண்ட கூந்தல் பராமரிப்புக்கு ல்யூர் லைம் ஷாம்பு
டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்: தென் இந்தியா
டி.டி. கிருஷ்ணமாச்சாரி & கோ

எனக்குப் பத்திரிகை ஆபீசுக்குப் போக வேண்டியிருந்தது. தரம்தல்லா முனையில் டிராமில் ஏறினேன்.

டிராம் நகரத் தொடங்கியது. அப்போது ஒரு குரல் கேட்டது. ''நிறுத்து! நிறுத்து! பெண்பிள்ளை ஏற வேண்டும்!''

திரும்பிப் பார்த்தேன். ஓர் இளைஞன்—சுமார் இருபத்தைந்து வயது இருக்கும். அவனுக்கு — டிராமைப் பிடிக்க அதனுடனேயே ஓடிவந்து கொண்டிருந்தான். அவன் டிராமின் கைப் பிடியைப் பிடிக்கத் தன் கையைத் தூக்கிக் கொண்டிருந்தான். ஆனால் பிடிக்கத் துணிவில்லாமல் கூடவே ஓடி வந்து கொண்டிருந்தான்.

எனக்குச் சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்தவர் சோடா பாட்டில் கண்ணாடி அணிந்திருந்தார். ஐந்தாறு அடி தூரத்துக்கு மேல் அவருக்கு ஒன்றும் தெளிவாகத் தெரியாது. தம் பார்வைக்கு எட்டாத அந்தத் தூரத்தில் ஏதாவது விபத்து ஏற்பட்டு விடுமோ என்ற பயம் அவருக்கு. அவர் பின்புறம் ஒரு தடவை திரும்பிப் பார்த்து விட்டு டிரைவரை அதட்டினார். ''டிராமை நிறுத்தச் சொல்கிறார்களே, காதில் விழவில்லை? பெண் பிள்ளை ஏறவேண்டுமாம்!''

பெண் பிள்ளை ஏற வேண்டுமாமே! நல்ல வேடிக்கை தான்! எனக்குச் சிரிப்பு வந்து விட்டது.

இளைஞனின் முகத்தில் பெண்களுக்குரிய நளினம் இருந்தது. 'தொள தொள' சட்டையும், அதற்கு மேல் ஒரு சால்வையும் அணிந்திருந்தான். சுபாவமாகவே மிகுந்த சங்கோசக்காரன் போலும்; இந்த டிராம் விவகாரத்தில் வெட்கத்தால் இன்னும் குன்றிப்போய் விட்டான். டிராம் நின்றதும் அதில் ஏறிக் கொண்டு பக்கத்தில் இருந்தவர்களை ஒருமுறை பார்த்து விட்டுத் தன் கண்களைத் தாழ்த்தி கொண்டான்.

டிராமின் பின் பக்கம் கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்றாள் ஒரு யுவதி. இளைஞன் ஏறியதும் அவள் அவனிடம் தாழ்ந்த குரலில் சொன்னாள்: ''முன்னே போகலாம் வாருங்கள். அங்கே உட்கார இடம் இருக்கிறது.''

இப்போது எனக்குப் புரிந்தது. டிராம் ஓடிக் கொண்டிருக்கும்போதே அந்தப் பெண் அதில் ஏறிவிட்டாள். அப்படி ஏற முடியாமல் ஓடி வந்த இளைஞன் அவளுடைய கணவன்.

பெண் கறுப்புத்தான். ஆனால் பார்க்க லட்சணமாக இருந்தாள். பளபளப்பான சிவப்புப் புடவையும், சற்றே உயர்ந்த குதிகாலுடைய செருப்பும் அணிந்திருந்தாள்.

இருவரும் முன்னேறினார்கள்.

இளைஞன் சொன்னான்: ''நீ பெண்கள் சீட்டில் உட்கார்ந்து கொள். நான் அந்தப் பக்கம் உட்காருகிறேன்.''

அதாவது அவனுக்கு அவளோடு சேர்ந்து உட்கார சங்கோசம்.

அவனுடைய குணம் அவளுக்கு நன்றாகத் தெரியும். உறுதியான குரலில் அவள் சொன்னாள்: ''சரிதான், வாருங்கள் சும்மா!''

எனக்கு முன்னாலிருந்த காலி பெஞ்சில் அவர்கள் இருவரும் உட்கார்ந்து கொண்டார்கள்.


சற்று நேரம் மௌனம் நிலவியது. பிறகு யுவதி குனிந்த தலையுடன் தாழ்ந்த குரலில்



சொன்னாள்: ''எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வருகிறது!''

காரணம் இளைஞனுக்குப் புரியாமல் இல்லை; இருந்தாலும் கேட்டு வைத்தான்: ''ஏன்?''

யுவதி பின்புறம் ஒரு தடவை திரும்பிப் பார்த்தாள். நான் படித்துக் கொண்டிருந்த செய்திப் பத்திரிகையால் என் முகத்தை மறைத்துக் கொண்டேன். நான் பத்திரிகை படிப்பதில் மூழ்கி யிருப்பதாக நினைத்து அவள் சங்கோசம் தெளிந்து பேச ஆரம்பித்தாள். ''ஏன்? நீங்கள் செய்த கூத்தை நினைத்துத் தான். எல்லாரும் 'பெண் பிள்ளை, பெண் பிள்ளை' என்று கத்துகிறார்கள். சட்டென்று டிராமில் ஏறத் தெரியவில்லையே இந்தப் 'பெண்பிள்ளை'க்கு! அவசரத்தில் உங்களுக்கு



டிராமில் ஒரு டிராமா

வங்காளி மூலம்: ஸ்ரீ விபூதி பூஷண் முகோபாத்யாய

தமிழாக்கம்: சு. கிருஷ்ணமூர்த்தி

முன்னால் ஏறிவிட்ட எனக்கு எவ்வளவு வெட்கமாக இருந்தது தெரியுமா? உங்களைத் தான் 'பெண் பிள்ளை' என்று கேலி செய் தார்களோ, அல்லது மறைமுகமாக என்னைத் தான் 'ஆண் பிள்ளை' என்று குறிப்பிட்டார் களோ யார் கண்டார்கள்!''

அவள் மெல்லிய குரலில் சிரித்தாள்.

''நீ ஏன் டிராம் நிற்பதற்கு முன் ஏறினாய்?''

''தப்புத்தான். கூட வந்திருக்கும் 'பெண் பிள்ளை'யை ஏற்றிவிட்டல்லவா நான் ஏறி யிருக்க வேண்டும்! என்னை மன்னித்து விடுங்கள்!''

மறுபடியும் சிரிப்பு; பிறகு மறுபடியும் பேச்சு.

''இன்றைக்கு என்னவோ வெகு நாட் களுக்குப் பிறகு பள்ளிக்கூட ஞாபகம் வந்து விட்டது. பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது நான் விளையாட்டுக்களில் மிகவும் துடியாக இருப்பேன். அந்த விளையாட்டு நினைவில் ஓடுகிற டிராமில் ஏறிவிட்டேன். மேலும் அப் போதுதானே டிராம் நகர ஆரம்பித்திருந்தது! இருந்தாலும் பார்ப்பவர்கள் என்ன நினைத் தார்களோ! போகட்டும், அதைப் பற்றி இப் போது என்ன? என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டுமே!''

''ஏன் உரக்கப் பேசுகிறாய்? நீ பேசுவது எல்லோருடைய காதிலும் விழப் போகிறது.''

''நமக்கு முன்னால் ஒரு துரையும் துரைச் சானியும்தானே உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் பேசுவது என்ன புரியும்?''

''பின்னால் ஒருவர் உட்கார்ந்திருக்கிறாரே மறந்து விட்டாயா?''

''அவரா? அவர் அகில உலகப் பிரச்னை களில் மூழ்கியிருக்கிறார். தரம்தல்லாவில் நடக்கும் விஷயங்கள் அவர் கண்ணில் படக் காரணமில்லை.''

சிரிப்பும் கசமசப் பேச்சும் தொடர்ந்தன.

இளைஞன் ஒரு முறை பின்னால் திரும்பிப் பார்த்தான். நான் பத்திரிகையை இன்னும் ஆழ்ந்த கவனத்துடன் படிப்பதாகப் பாவனை செய்தேன்.

''நாம் பேசுவது அவருக்குக் கேட்காது தான். இருந்தாலும்...''

''என்ன 'இருந்தாலும்'? நாம் பேசுவது பற்றி வேறு யாருக்கு அக்கறை? அப்படியே அக்கறை இருந்தாலும் நாம் பேசுவது அவர் களுக்குக் காதில் விழாது. பழைய டிராம் களில் இது ஒரு நல்ல வசதி. அவை போடும் 'கட கடா'ச் சத்தத்தில் நம் பேச்சை யாரும் ஒட்டுக் கேட்க முடியாது...''

''நான் சொல்வது என்ன தெரியுமா? பக் கத்தில் ஓர் அழகி உட் கார்ந்திருக்கும் போது உலகப் பிரச்னைகள் அவ் வளவு முக்கியமாகத் தோன்றுமா?... பின் னால் உட்கார்ந்திருப்ப வர் நாம் பேசுவதைக் கவனித்து வருகிறாரோ என்னவோ!''

''ஆமாம், நான் பெரிய அழகியாக்கும்? நல்ல கறுப்பல்லவா நான்?''

''நீ பெரிய அழகி தான்! அதிலும் கறுப் பழகி!''

இருவரும் சேர்ந்து சிரித்தார்கள். மெது வாகத்தான். இளைஞ னின் சிரிப்பு பெண்ணின் சிரிப்பைக் காட்டிலும் தணிவாக இருந்தது.

சிறிது மௌனம். நான் மறுபடியும் தலைப் புச் செய்திகளில் கவனம் செலுத்தினேன்.

''அது சரி, நான் பக்கத்தில் இருக்கிறேன் என்பதற்காக இப்படி முகத்தைத் தூக்கிக் கொண்டு 'சீரியஸாக' உட்கார்ந்திருப்பா னேன்? நான்தான் முன்னமேயே சொன் னேனே, நீங்கள் இதற்கெல்லாம் லாயக்கில்லை என்று! சட்டப் பரீட்சையில் முதலாகப் பாஸ் செய்து விட்டால் போதுமா? உங்க ளுக்கு மனோதைரியம் கிடையாது. நீங்கள் பக்கத்தில் இருப்பதால் நான் எவ்வளவு துணிவோடு பேசுகிறேன், பாருங்கள்!''

இந்தச் சமயம் டிராம் நின்றதால் பேச்சும் சற்று நின்றது.

ஓர் ஆங்கிலேய இளைஞன் டிராமில் ஏறினான்.

'கடகடா' சத்தத்துடன் டிராம் மறுபடி யும் நகர ஆரம்பித்தது.

இதற்குள் அங்கே கண்டக்டர் வந்து விட்டான்.

அந்த இளம் தம்பதியுடன் பிரயாணம் செய்ய எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

இளைஞன் சற்றுத் தயங்கினான். பிறகு அரை ரூபாயை எடுத்துக் கண்டக்டரிடம் கொடுத்து ''இரண்டு ஷாம்பஜார்'' என்றான்.

யுவதிக்கு ஆச்சரியம். ''ஷாம்பஜாரா? நாம் காலேஜ் சதுக்கத்துக்கு அடுத்த ஸ்டாப்பில் அல்லவா இறங்க வேண்டும்?''

இளைஞன் மெல்லிய குரலில் சொன்னான்: ''சும்மா வாயேன்! ஷாம் பஜாருக்குத்தான் போவோமே!''

''நன்றாயிருக்கிறதே! கூட்டம் நடப்பது, ஒவர்டூன் ஹாலில். நீங்கள் ஷாம்பஜார் போக லாம் என்கிறீர்களே?''

''உஸ்! மெதுவாகப் பேசு!''

கண்டக்டர் பொறுமை இழந்து விட்டான். ''எங்கு போக வேண்டும் என்பதை நிச்சய மாகச் சொல்லுங்களேன்! நான் எவ்வளவு நேரம் காத்திருப்பேன்?'' பிறகு யுவதியை நோக்கிக் கேட்டான். ''காலேஜ் சதுக்கமா?''

யுவதி ஒரு தடவை இளைஞனைத் திரும்பிப் பார்த்தாள். அவனுடைய முகம் எனக்குத் தெரியாவிட்டாலும் அது பரிதாப நிலையில் இருந்தது என்பதை மட்டும் யூகிக்க முடிந்தது.

''இல்லே, ஷாம்பஜாருக்கே டிக்கெட் கொடுங்கள்.'' யுவதி சொன்னாள்.

டிராம் தரம்தல்லாவிலிருந்து திரும்பி வெலிங்டன் தெருவுக்குள் நுழைந்தது.

ஊடல் ஆரம்பித்து விட்டது. இன்னும் கொஞ்ச நேரத்துக்குப் பேச்சு வார்த்தை இருக்காது என்று நினைத்து நான் பத்திரிகை படிக்க ஆரம்பித்தபோது இளைஞனின் குரல் கேட்டது. ''என்ன கோபமா?''

கனிவும், கெஞ்சலும் கலந்த குரல் அது. அவனது முகமும் அவளுடைய முகத்துக்கு வெகு அருகில் வந்து விட்டது!

எனக்குச் சற்றுப் பயம் ஏற்பட்டது. இளங் கன்றுகள் அல்லவா? டிராமிலேயே ஏதாவது அசட்டுப் பிசட்டு என்று நடந்து கொண்டு விட்டால்!

''நான் சொல்வது கேட்கிறதா உனக்கு? என்ன கோபமா?''

யுவதியிடமிருந்து பதிலில்லை.

''நான் ஏன் ஷாம்பஜாருக்கு டிக்கட் வாங்கினேன் என்றுகூடக் கேட்கவில்லையே! அவ்வளவு கோபமாக்கும்!''

''உங்களைக் கேட்பானேன்? எனக்கே புரிந்து விட்டது. ஒவர்டூன் ஹாலில் உங்கள் நண்பர் யாரையாவது சந்திக்க நேர்ந்தால் அவருக்கு என்னை அறிமுகப்படுத்த வேண் டுமே என்ற பயம்தான்!''

''அறிமுகப்படுத்துவதில் பயமென்ன? அதில் எனக்குப் பெருமைதானே?''

''வீண் பேச்சு எதற்கு? என்னால் பெருமை யில்லை, உங்களுக்கு; அவமானந்தான்! நான் கறுப்பாக இருக்கிறேனே அதற்காக! அதனால் தானே நீங்கள் என்னிடமிருந்து விலகி விலகிப் போகிறீர்கள்?''

பெருமிதம் நிரம்பிய குரலில் இளைஞன் சொன்னான்: ''நீ கறுப்பா யிருந்தால் என்ன? எந்தச் சிவப்பியும் உன் கால் தூசுக்கு இணை யாக மாட்டாள்!''

''ஓகோ! அப்படியானால் ஷாம்பஜாருக்கு டிக்கட் வாங்கக் காரணம் என்னவோ?''

யுவதியின் குரல் சற்று இளகி யிருந்தது. கெட்டியான பனிக்கட்டியாக இருந்த அவள் சற்று உருகத் தொடங்கி யிருந்தாள். பாதக மில்லே; சட்டப் பரீட்சையில் முதலாவதாகத் தேறியிருக்கும் அந்த இளைஞன் ஓடும் டிராமில் ஏறக் கற்றுக் கொள்ளா விட்டாலும் பிறர் உள்ளத்தை உருக்கும் கலையைக் கற்றிருக் கிறான். அவனுடைய தொழிலுக்கு இந்தத் திறமைதானே தேவை! கோர்ட்டில் உள்ள நீதிபதியைவிடக் கடுமையான நீதிபதியிடமே வெற்றிகரமாக வாதம் செய்கிறானே! பலே ஆள்தான்! பிழைத்து விடுவான்!...

''சொல்லவா?''

''சொல்லுங்களேன்!''

''இன்றைக்குக் கூட்டம் ஒன்றும் பிடிக்க வில்லே எனக்கு. உன்னுடன் தனியாக எங்கா வது கொஞ்ச நேரம் இருக்கலாம் போலிருக் கிறது எனக்கு நந்தா!'' உணர்ச்சி மிகுதியில் இளைஞனது குரல் தழுதழுத்தது.

அவனுடைய பேச்சு சேர வேண்டிய இடத் தில் சேர்ந்து விட்டது போலும்! அவளிட மிருந்து பதிலே இல்லே.

''என்ன சொல்கிறாய், நந்து?''

''உங்கள் விருப்பத்துக்கு மாறாக எனக்கு விருப்பம் ஏது? சரி, பின்னே நாம் என்ன செய்யப் போகிறோம்? சினிமாப் பார்க்கப் போகிறோமா?''

''சினிமாப் பார்ப்பதன் மூலம் நாம் ஒரு வரை யொருவர் அடைந்து விட முடியுமா நந்து? திரைக்கு முன் உடல்களின் கூட்டம். திரையில் நிழல்களின் கூட்டம். நீ பக்கத்தி லிருக்கும்போது உன்னை மறந்து விட்டு ஒரு நிழலுலகத்தில் சுற்றக் கட்டோடு பிடிக்க வில்லே எனக்கு. எனக்கு நீதான் வேண்டும்!''

டிராம் பகு பஜார் முனையில் நின்றது. பிரயாணிகள் ஏறினார்கள். இறங்கினார்கள். காதலர்களின் பேச்சு தடைப்பட்டது.

யுவதி சர்வ சாதாரணமான குரலில் இளை ஞனைக் கேட்டாள்: ''ஏப்ரல் மாதம் முதல் ரயில் நேரங்களில் ஏதாவதுமாறுதலுண்டா?''

அதாவது ரயில்வே கால அட்டவணை போன்ற விஷயங்களைப் பற்றித்தான் அவர்கள் இதுவரையில் பேசி வந்திருப்பதா யும் இனியும் பேசப் போவதாயும் மற்றவர்கள் நம்ப வேண்டுமாம்! அந்தப் பெண்ணின் சாமர்த்தியத்தை நான் உள்ளூறப் பாராட் டிக் கொண்டேன்.

இந்த வாலிபர்கள் வயதான எங்களைப் பற்றி என்னதான் நினைத்துக் கொண்டிருக் கிறார்கள்? நாங்களும் ஒரு காலத்தில் இவர் களைப் போல் இருந்தவர்கள்தானே?

டிராம் புறப்பட்டதும், இளைஞன் தாழ்ந்த குரலில் சொன்னான்: ''டம் டம் விமான நிலையத்துப் பக்கம், அல்லது...''

யுவதியின் முகம் உற்சாகத்தால் மலர்ந்தது. ''டம்டம்தான் தேவலே! வேறு யோசனை வேண்டாம்!''

''உஸ்! உரக்கப் பேசாதே!''

''அடேயப்பா! என்ன பயம் உங்களுக்கு?''

''டம் டம் போனால் ஜோராகத்தான் இருக்கும். ஆனால் போக முடியாது போலிருக் கிறதே!''

''ஏனோ?''

சோப் ஒன்று–பலன் மூன்று!

நிகோ *கிருமிநாசினி* சோப்

மற்றெந்த சோப்பையும் விட உங்கள் சருமத்திற்கு மிகுந்த பாதுகாப்பளிக்கிறது

1 நிகோ சருமக் கிருமிகளைக் கொல்லுகிறது

2 நிகோ உடல் துர்நாற்றத்தைப் போக்குகிறது

3 நிகோ உடலைத் துப்புரவாக்கிப் பாதுகாப்பளிக்கிறது

நீங்கள் ஆரோக்கியமான சருமத்தைப் பெற, நாள்தோறும் நிகோ சோப் தேய்த்துக் குளியுங்கள். நிகோவின் நச்சுநாச நுரைவளம் சரும நோய்க் கிருமிகளைக் கொன்று, உங்கள் சருமத்திற்கு ஆரோக்கியமளிக்கிறது. நிகோவிலுள்ள மருந்துப் பொருள்கள் வியர்வையினால் ஏற்படும் துர் நாற்றத்தைப் போக்குகின்றன. நிகோ சின்னஞ்சிறிய சருமத் தொற்றுகளையும் எதிர்த்துப் போராடி, சருமத்துக்கு மென்மையளிக்கிறது. அதோடு மினுமினுப்பும் புதுமையும் தருகிறது. இது மட்டுமல்ல, முகப் பருக்கள் மற்றும் வேர்க்குருவிலிருந்தும் உங்கள் சருமத்துக்குப் பாதுகாப்பு தருகிறது நிகோ. ஷாம்புவாகக்கூட இதைப் பயன்படுத்தலாம். இதனால் பொடுகு விழாமல் தடுக்கிறது நிகோ. எனவே, இன்று முதலே, நிகோ சோப் உபயோகிக்கத் தொடங்குங்கள்

TRIPLE ACTION


NEKO

The Original Germicidal Soap

PARKE-DAVIS




JAISONS 72 Tam



எஸ்ட்ரெலா
சிறந்த ரேடியோ பேட்டரிகள்

காகித, பிளாஸ்டிக், உலோகக் கவச உறைகளிட்ட பேட்டரி வகைகள் உள்ளன, நீங்கள் தேர்ந்தெடுக்க. கசியாத் தன்மை உடையவை அவை. நெடுங்கால உழைப்பிலும் இடையருத சக்தியை வழங்குபவை. உங்கள் டிரான்ஸிஸ்டர் ரேடியோவின் மூலம் உங்கள் செவியின்பத்தைப் பெருக்கத் தலைசிறந்த பேட்டரிகள் — எஸ்ட்ரெலா.



இலவசம்!

எஸ்ட்ரெலா
பேட்டரிகள்

அதிக சக்தி
அதிக உபயோகம்

எஸ்ட்ரெலா பேட்டரீஸ்
லிமிடெட்,
பம்பாய்-13.


FOCUS W-31-K TM

''என் நண்பர்கள் ஜதின், இமிர் இருவரும் ஒவர்டூன் ஹாலுக்கு முன்னால் நமக்காகக் காத்திருப்பதாகச் சொல்லி யிருக்கிறார்களே! உன்னை வரவேற்கப் போகிறார்களாம்!''

சற்று மௌனம்; நண்பர்களின் வரவேற்பா, டம்டம் பிரயாணமா?...

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்து விட்டாள் யுவதி. ''எப்படியாவது டம் டம் போக வேண்டியது தான்!....இதோ பாருங்கள்! ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லாதீர்கள். எனக்கு இந்தக் கூட்டமெல்லாம் பிடிக்கவில்லை....''

''டம்டம் போய்ச் சுற்றுவதுதான் சரியாக்கும்?'' இளோருன் வாக்கியத்தை முடித்தான்.



''உன் அப்பாதான் கடுதாசு போட்டிருக்கார். ஞாபகமறதியா குஞ்ய மையிலே எழுதிட்டார்னு தெரியறது!''

'ஷேஷன்'

''என்னை ஒன்றும் கேலிசெய்யவேண்டாம்! ...இருக்கட்டும். அம்மா, அப்பா பாகல்பூரிலிருந்து வந்ததும் அவர்கள் ஊரில் இல்லாத சமயத்தில் என்னைக் கூட்டத்துக்கு நீங்கள் அழைத்துப் போனதை அவர்களிடம் சொல்லி விடுகிறேன்....''

அடி சக்கை! பையனை நன்றாக மாட்டி விட்டாளே!

''கனு!'' இளோருன் அவளைக் கூப்பிட்டான்.

முதலில் 'நந்தா'; பிறகு 'நந்து': அப்புறம் 'நது': இப்போது 'கனு'! எத்தனை செல்லப் பெயர்கள்! அவளுடைய முழுப் பெயர் என்னவாக இருக்கும்? 'சுநந்தாவா?'

தன் பெயருக்குள்ளே இத்தனை இனிமையை வைத்திருப்பவள் தன்னுடைய அப்பாவிக் காதலனைப் பயமுறுத்துகிறாளே!

''இந்த இக்கட்டில் என்னதான் செய்வது சொல்லேன்!'' கெஞ்சினான் அவன். ''நீ என்ன சொல்கிறாயோ அதையே செய்கிறேன்.''

கருக்கமாகப் பதில் வந்தது. ''டம்டம்!''

''ஆனால் போவது எப்படி? அவர்கள் வழியில் நின்று கொண்டிருப்பார்களே!''

''வேறு வழியாகப் போகலாமே!''

''எப்படி? பகுபஜார் வழியாகவா?'' இளோருன் அழாக் குறையாகக் கேட்டான். ''நாம் ஷாம்பஜாருக்கல்லவா டிக்கட் வாங்கியிருக்கிறோம்! இது கண்டக்டருக்கு மட்டுமல்ல, பக்கத்தில் உள்ளவர்களுக்கும் தெரியும். நாம் இப்போது டிராமிலிருந்து இறங்கினால் இவர்கள் என்ன நினைப்பார்கள்? நாம் எழுந்ததுமே கண்டக்டர் சொல்லுவார், 'ஐயா ஷாம்பஜார் இன்னும் வரவில்லை' என்று.''

இரண்டே நிமிஷங்கள்!

வேறு வழியே இல்லையா?...

எதிரில் வந்த ரிக்ஷாவைத் தவிர்ப்பதற்காக டிராம் திடீரென்று பிரேக் போடவே நாங்கள் எல்லோரும் முன்னே தள்ளப்பட்டோம். நான் பேப்பருடன் அந்த இளஞ் ஜோடி உட்கார்ந்திருந்த பெஞ்சின் மேல் சாய்ந்தேன். பேப்பர் இளோருனின் பக்கத்தில் விழுந்தது. அவன் அதை எடுத்து என்னிடம் கொடுத்தான். நான் அதை வாங்கிக் கொண்டு அவனுக்கு நன்றி தெரிவித்து விட்டு மறுபடியும் படிக்கத் தொடங்கினேன்.

டிராம் புறப்பட்டது. இளோருன் சொன்னான், ''ஒரு பேப்பர் கிடைத்தால்..''

பெண் கழுத்தைத் திருப்பி ஆவலுடன் கேட்டாள். ''கிடைத்தால்?..''

''கிடைத்தால் டிராம் ஒவர்டூன் ஹாலைத் தாண்டும்போது பேப்பரால் நம்மைமறைத்துக்கொண்டு விடலாம். என் சிநேகிதர்கள் டிராமுக்குள் நுழைந்து நம்மைத் தேடப் போவதில்லையே!''

''நல்ல யோசனை!'' பெண்ணின் குரலில் மகிழ்ச்சி துள்ளியது. ''பேப்பர்தான் இருக்கிறதே!''

''எங்கே?''

''பின்னால் இருப்பவரிடம்!''

''சீ! அவரிடம் எப்படிப் பேப்பரைக் கேட்பது?'' இளோருன் ஆட்சேபித்தான்.

யுவதி அவனோடு நெருங்கி உட்கார்ந்தாள். ''நான் ஓர் உபாயம் சொல்கிறேன். நீங்கள் தான் ரொம்ப சங்கோசப்படுகிறீர்கள், பெண்களைவிட! நான் சொல்கிறபடி செய்தால் உங்களுடைய நண்பர்களிடமிருந்து தப்பிவிடலாம். நான் சற்று உரக்க உங்களைக் கேட்கிறேன், 'புதிய மந்திரி சபை பதவி ஏற்றுக் கொண்டு விட்டதா? மந்திரிகள் யார் யார்?' என்று. நீங்கள், 'நான் காலையில் பேப்பர் பார்க்கவில்லையே' என்று சொல்லுங்கள்... அதைக் கேட்டால் பின்னால் இருப்பவர் மரியாதைக்காக உங்களிடம் பேப்பரைத் தருவார்.... என்ன சரிதானே! நான் ஆரம்பிக்கிறேன். (சற்று உரக்க) 'புதிய மந்திரி சபை....' ''

இளோருன் பதறிப் போய் அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டான். ''சீ,சீ! வேண்டாம், நது. வேண்டாம்!''

இளோருன் பெண்ணாகப் பிறந்திருக்க வேண்டியவன்; அந்த யுவதி ஆணாகப் பிறந்திருக்க வேண்டியவள்!

டிராம் கல்லூரிச் சதுக்கத்தின் எதிரில் நின்றது. பாவம் அந்த ஜோடி! அவர்களுடைய பரபரப்புக்கு அளவில்லை. ஒவர்டூன் ஹால் அடுத்த ஸ்டாப்!

எனக்கும் கவலைதான். சட்டென்று எனக்கு ஓர் உபாயம் தோன்றியது.

நான் சீட்டை விட்டு எழுந்து, ''இந்தாருங்கள் சார், உங்கள் பேப்பர்!'' என்று சொல்லி இளோருனின் கைகளில் பேப்பரைத் திணித்தேன். அவன் திகைப்பிலிருந்து மீளுவதற்குள் அவசரம் அவசரமாக ஓடும் டிராமிலிருந்து இறங்கி விட்டேன்.

ஒரு நல்ல காரியம் செய்த திருப்தியுடன் அன்று வீடு திரும்பினேன்.....

கார்ன் ப்ராடக்ட்ஸ்
தேர்ந்தெடுத்த
பரிசு-பெற்ற
பக்குவ
முறை



குமாரி கிரிஜா பத்மன்,

ட்வின் புட்டிங்

(அனுப்பியவர்: குமாரி கிரிஜா பத்மன், ''ப்ளாடன்'', கன்னிக்கோட்டை 11.)

தயாரிக்க உதவுவது

பிரவுன் & போல்ஸன்

ஃப்ளேவர்டு கார்ன்ஃப்ளவர்



பக்குவ முறை : வெண்ணெய் (ஒரு சிறு உருண்டை) 100 கிராம் முந்திரிப் பருப்பு. (மென்மை-யாக நறுக்கப்பட்டது) 1 பாக்கெட் பிரவுன் & போல்ஸன் ஃப்ளேவர்டு கார்ன்ஃப்ளவர் (வனில்லா) ½ லிட்டர் பால், 8 டேபிள்ஸ்பூன் சர்க்கரை. 3 டேபிள் ஸ்பூன் கறுப்புத்திராட்சை (கல்தானு) விதை அகற்றி நறுக்கப்பட்டது) 55 கிராம் பேரீச்சம் பழம் (நறுக்கப்பட்டது) 1 பாக்கெட் பிரவுன் & போல்ஸன் ஃப்ளேவர்டு கார்ன்ஃப்ளவர் (ராஸ்பெர்ரி) 3 டேபிள்ஸ்பூன் உலர் திராட்சை (சுத்தம் செய்யப்பட்டது) 1 வாழைப் பழம் (முற்றிலும் பழுக்காதது)
ஸாஸ் தயாரிக்க : 6 டேபிள்ஸ்பூன் (தலைதட்டிய அளவு) சாக்கலேட் அல்லது கோகோ பவுடர். ½ லிட்டர் தண்ணீர். சுவைக்கு ஏற்றபடி சர்க்கரை.

1. உருக்கிய வெண்ணெயை புட்டிங் தயாரிக்கும் அச்சில் தடவவும். அடித்தளத்தில் முந்திரிப் பருப்பைப் பரப்பவும். 2. பாலின் ஒரு பாதியை எடுத்து, அதில் சிறிதளவில் வனில்லா பாக்-கெட்டிலுள்ளதைக் கரைக்கவும். மிஞ்சிய பாலை சூடாக்கி அதை அடுப்பிலிருந்து இறக்கி கரைத்துள்ள வனில்லாவை சேர்க்கவும், நன்றாகக் கிளறி மீண்டும் அடுப்பில் வைத்து கிளறவும். 3. அதில் 4 டேபிள்ஸ்பூன் சர்க்கரை, கறுப்பு திராட்சை மற்றும் பேரீச்சம்பழத் துண்டுகளைப் போடவும். தொடர்ந்து கிளறி, அது கெட்டியானதும் அடுப்பிலிருந்து இறக்கி, அச்சிலுள்ள முந்திரிப் பருப்புகளின் மீது கொட்டவும். படிய விடவும். 4. மறு பாதிப் பாலை எடுத்து, சிறிதளவில் ராஸ்பெர்ரி பாக்கெட்டிலுள்ளதைக் கரைக்கவும், மிஞ்சிய பாலை சூடாக்கி, அடுப்பிலிருந்து இறக்கி, கரைத்துள்ள ராஸ்பெர்ரியை சேர்க்கவும். மீண்டும் அடுப்பில் வைத்து கிளறவும். 5. மிஞ்சியுள்ள முந்திரிப் பருப்பு, உலர் திராட்சை, 4 டேபிள்ஸ்பூன் சர்க்கரை மற்றும் வெண்ணெயைப் போடவும். கலவை கெட்டியாகும் வரை கிளறவும். அடுப்பிலிருந்து இறக்கவும். 6 வாழைப் பழத்தை வட்டவட்டமாக நறுக்கி வனில்லா புட்டிங்கின் மீது இடவும். 7. ராஸ்பெர்ரி கலவையை அதன் மீது சமமாக ஊற்றவும். படிய விடவும். 8. ஸாஸ் தயா-ரிக்க: கோகோவைத் தண்ணீரில் கலந்து, கரையும் வரை இளம் சூட்டில் வைக்கவும். கொதிக்கும் வரையில் கிளறி, அடுப்பிலிருந்து இறக்கி, இனிப்பாக்கவும் 9. புட்டிங்கைத் திருப்பிப் போடவும். அதன்மீது சாக்கலேட் ஸாஸ் ஊற்றவும். குளிர வைக்கவும்.

பொக்கிஷம்

ஆர். சூடாமணி

'என் நல்ல காலந்தான் நான் இவரிடம் வந்து சேர்ந்தேன்' என்று, நான் அவரிடம் வந்து சேர்ந்த இந்த ஆறு மாதங்களில் எத்தனையாவதோ தடவையாக எண்ணிச் சிலிர்த்தவாறு சோமு கடைத் தெருவை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

அவர் மிகவும் நல்லவர். அவனிடம் மிகுந்த நம்பிக்கை உள்ளவர். வெறும் வேலைக்காரனாக அவர் அவனை நடத்தவில்லை. பணத்தில் சகஜமாய்ப் புழங்க விடுவார். '' என் கோட் பாக்கெட்டிலேயிருந்து பர்சை எடுத்துக்கிட்டு வா'' என்பார். அவர் அலமாரி திறந்தே இருக்கும். அதன் மேல் தட்டு முழுவதும் பல ரகப் பேனாக்கள் குவிந்து கிடக்கும். ஒரு பேனாவைக் கடையில் பார்த்தவுடன் விரும்பி வாங்கி விடுவதும் சில நாட்களில் அலுப்புற்று அதை அலமாரி மேல் தட்டில் தூக்கிப் போட்டுவிட்டு மறந்து விடுவதும் அவர் பழக்கம். இன்னும் அதிலே எத்தனையோ விலை உயர்ந்த பொருள்கள் இருக்கும். ''அலமாரியைத் தொறந்தே போட்டுடறீங்களே, ஸார் ! ஒருத்தரைப் போல் ஒருத்தர் இருப்பாங்களா ?'' என்று அவன் கேட்டால், ''என் அந்தரங்கக் காரியதரிசி நீ இருக்கிற வரையில் வீட்டுக் கவலை பத்தி எனக்கென்ன கவலே?'' என்று சிரிப்பார். தன் பழைய வாழ்வை எண்ணவே அருவருப்படைந்து எங்கெங்கோ அநாதையாய் அலைந்து இன்னலுற்றபின் அவனது இருபது வயது உள்ளம் இந்த வீட்டினாலும் இந்த எஜமானராலும் ஆறுதலடைந்தது.

அங்காடி வீதிகளில் நெரிசல் தாளவில்லை. பொருந்து பேரம் பேசி அரை டஜன் ஆப்பிள் பழங்கள் வாங்கி மீண்டு வருவதற்குள் மூச்சு முட்டியது. ஆனால் சோமுவுக்குத் திருப்தி தான். நல்ல பழங்களாய்க் கிடைத்துவிட்டன. 'மிச்சமிருந்தால் ஒரு நாற்பது பவர் பல்ப் வாங்கிக்கிட்டு வா. ஒண்ணும் அவசரமில்லே. பணமில்லேன்னு விட்டுடு, பரவாயில்லே' என்று எஜமானியம்மாள் சொல்லியிருந்தாள். பணமில்லாமல் என்ன, அவன் நிர்வாகம் செய்யும் போது! பெருமையுடன் ஒரு பல்பும் வாங்கிக் கொண்டான். மிச்சக் காசு பதினேழு பைசாவைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். எஜமானரிடம் திருப்பித் தர வேண்டும். வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

'' சோமு !''

அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அந்தக் குரல் ! பழைய வாழ்வின் மூச்சா ? திரும்பினான். சென்ற காலம் சிதையிலிருந்து எழுந்து வந்தது போல் இரவியம் நின்று கொண்டிருந்தான்.

சோமுவுக்கு நொடியில் வியர்த்துக் கொட்டியது. இந்தத் திரவியமும் பிறரும் சேர்ந்த குழுவின் சகவாசத்தால்தானே அவன் முன்பு ஏதேதோ வழிகளிலெல்லாம் சென்று விட்டான்!

''என்னே நெனப்பிருக்குதாடா உனக்கு?''

அந்த ஏளனக் குரலுக்குச் சிறிது நேரம் சோமுவால் பதில் அளிக்க முடியவில்லை....

'' நெனப்பிருக்குதாடான்றேனே! பதில் பேசாம அத்தினி அடப்பா?''

சோமு ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''நெனப்பில்லாம என்ன திரவியம்?'' என்றவாறு முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

''அட! எம்பேருகூட கரெக்ட்டா ஞாபகம் வச்சுக்கிட்டிருக்கியே! எங்கே பெரிய மனிசனாய்ட்டுப் பழைய சிநேகிதங்களை மறந்துட்டியோன்னு பார்த்தேன்.''

சோமு பேசவில்லை. திரவியத்தைக் கண்டதால் எழுந்த பழைய நினைவுகள், அவற்றின் வேதனை, மறுவாழ்வு வந்தாற்போல் இப்போது தான் வாழும் முறை, அதன் அமைதியான இனிமை, திடீரென்று அதற்கு ஆபத்து வந்துவிட்டது போன்ற பிரமை — யாவும் சேர்ந்து அவன் நெஞ்சில் பூகம்பமாய் மோதின.

திரவியம் அவனைப் பார்த்தபடியே மெல்லச் சீட்டியடித்தான். ''பூசின கன்னம், வெள்ளை உடை, மார்க்கெட்டில் சாமான் வாங்கற தோரணை — பெரிய மனிசனாய்த்தான் ஆய்ட்டே, சந்தேகமில்லே !''

'' இப்ப என்ன சமாசாரம்? நான் போகணும், நேரமாகுது '' என்றான் சிறிது மிடுக்காகவே.

''என்ன அப்படி அவசரப்படறே? கொஞ்சம் நில்லு பிரதர், உன்னோடே கொஞ்சம் பேசவேண்டியிருக்குது. இங்கேயே பேசவமா இல்லே ஒதுக்குப்புறமா வரியா ?'' என்ற திரவியம் அருகில் வந்து வெகு சகஜமாய் அவன் கையிலிருந்த கூடையிலிருந்து ஓர் ஆப்பிள் பழத்தை எடுக்கப் போனான்.

சோமுவுக்கு ஆத்திரம் வெடித்தது. அவன் கையை உதறித் தட்டிவிட்டு, ''சீச்சீ, எடு கையை. உன் பாட்டன் வீட்டுச் சொத்தாட்டமில்ல கை போடுறே? இந்தத் திருட்டுத்தனமெல்லாம் இனிமே நம்ம கிட்ட வேணாம்'' என்று இரைந்தான்.

''நீயா பேசறே? சாத்தான் வேதம் சொல்ற கதையாயில்லே இருக்குது? வீட்டை உடைச்சு உள்ளே பூந்துட்டு அப்புறம் கம்பி எண்ணினதெல்லாம் மறந்து போயிடுச்சா, வெள்ளைச் சட்டை போட்டதும்?''

நொடியில் வெலவெலத்துப் போன சோமு அதே அவசரத்தோடு சுற்று முற்றும் பார்த்துக்கொண்டான். அருகில் அப்போது தான் டிச் சென்ற ஒருசிலர் தலையைத் திருப்பிப் பார்த்துவிட்டுப் போனதைக் கவனித்ததும் அவன் உடல் தீப்பற்றியதுபோல் எரிந்தது.

திரவியம் மெள்ளச் சிரித்தான். சோமுவின் தோளைத் தட்டியவாறே குனிந்து மெல்லிய குரலில் கேட்டான்: ''தெருவிலே போற யாரோ திரும்பிப் பார்க்கிறதுக்கே இப்படி அரண்டு போறியே, உன் எஜமானர் காதில் இந்த விஷயத்தைப் போட்டா எப்படி இருக்கும்?''

''டே இரவியம்!'' பதறிக் கொண்டு பொங்கிய துடிப்பின் ஆவேசத்தில் தான் நடுத்

தெருவில் உரக்கக் கூறுவதைக் கூடச் சோமு உணரவில்லை.
''என்னடா சொல்றே பாவி? என் எஜமானர்...டேடே...''

''பயந்து சாவாதேடா! நீ நம்ம ஃப்ரண்ட் இல்லையா? உன்னை அப்படி நான் காலே வாரிவிட்டுடுவேனு? கொஞ்சம் நிதானமாய்ப் பேசணும். அப்படி ஒரு பக்கமா வா.''

உரிமையோடு தோளில் கைபோட்டு ஓர் ஓரமாக நடத்திச் சென்றவனை மரத்த நிலையில் சோமு தொடர்ந்தான்.

''டே சோமு! நான் சொல்றதைக் கவனமாய்க் கேளு. நீ இப்ப எங்கே வேலையா யிருக்கேன்னு எனக்குத் தெரியும். உன் பழைய கதை ஒன்னும் உன் எஜமானருக்குத் தெரியாதுன்னும் எனக்குத் தெரியும். அப்படி அவருக்குத் தெரியாமலேயே இருக்கணும்னுதானே நீ ஆசைப்படறே?''



சோமுவுக்குப் பேச்சு எழவில்லை.

இரவியம் புன்னகையோடு அவன் மார்பில் தட்டிக் கொடுத்தான். ''இப்படி ஒரேமுட்டாப் பயப்படறியே! பழைய துணிஞ்ச கட்டை எங்கே? போவட்டும். பயப்படாதே. எனக்கு உன் அதிர்ஷ்டம் இல்லே. என்னை யாரும் நம்பி வேலைக்கு வைக்கக்கல்லே. இன்னும் சோத்துக்குத் திண்டாடிக்கிட்டும் பல வகையில் பிழைக்க வேண்டியும்தான் இருக்குது என் நிலே. சமீபத்தில் ரெண்டு மூணு சில்லறைத் திருட்டு செய்யப் பார்த்துச் செம்மையாய் வாங்கிக் கட்டிக்கிட்டேன்...அதனால் கொஞ்ச நாளைக்கு அடங்கியே இருந்திரணும். ஆனா எப்படிப் பிழைக்கறது?''

சோமு அவன் முகத்தையே வெறித்துப் பார்த்தான்.

''அன்னிக்கு ஒருநாள் உன் எஜமானரின் — ராமலிங்கம் பிள்ளைதானே அவரு பேரு?— அவரோட சின்ன மகள் அந்தப் பாவாடை கட்டை போட்ட வாண்டு இருந்தே. அது விளையாடறப்ப பாசி கிட்டயோ தான் அப்பா கண்டா ஒரு பொருளு போட்டு பறந்து போவலிக் கிட்டிருந்தது. எங்கே நல்ல பேறுவைப் பார்த்தாலும்

வாங்கியாந்துடுவாராமே? தன்னண்டை இருக்கிற அந்த உசத்திப் பேனாக்களுக்குக் கணக்குக் கூடத் தெரியாதாமே அவருக்கு?''

தீப்பந்தம் அருகில் நெருங்குவதால் உணர்வாகும் அனலின் வெம்மை போல் சோமுவுக்கு இந்தப் பேச்சின் நோக்கம் புரியத் தொடங்கியது. கண்கள் பீதியில் அகன்றன.

''உன் மேலே நான் ஒரு கண் வைச்சுக்கிட்டுத்தானேடா இருக்கேன் சோமு? உன் எஜமானர் உன்கிட்ட எத்தினி நம்பிக்கையாயிருக்கார் என்பதெல்லாம் கேள்விப்பட்டேன். ''ஒரு சின்ன உதவிதான் இப்ப எனக்குத் தேவை. அந்தப் பேனாவிலே ஒசத்தியா ரெண்டைத் தள்ளிக்கிட்டு வந்து என்னண்டை கொடுத்துவிடு, அவ்வளவுதான். உனக்கு அதில் ஒண்ணும் கஷ்டமில்லே. ஏன்னு அவர் உன்னை நம்பறார். அவருக்கோ கணக்குக்கூடத் தெரியப் போறதில்லே. பேனாக்களை வித்து வர துட்டிலே உன் பேரைச் சொல்லிக்கிட்டு நான் கொஞ்ச நாட்கள் சௌகரியமா இருப்பேன். இந்தச் சின்ன உதவி, உன் பழைய சிநேகிதனுக்கு நீ செய்யேயில்லேயா?''

''இரவியம்... இரவியம்... இது நியாயமாடா? நான் இப்ப நிம்மதியா, சந்தோஷமா இருந்துக்கிட்டிருக்கேன்!''

''அப்படியே தொடர்ந்து இருக்கலாம் சோமு. இதிலே என்ன கஷ்டம்? அந்தப் பொருள் உன் எஜமானருக்கு ஒரு பொருட்டில்லே. நீ ஒண்ணும் தவறுதலாய் அதிலேருந்து லாபம் அடையப் போறதில்லே. சும்மா அவர்கிட்டேயிருந்து எடுத்து என்கிட்ட மாத்தப் போறே, அவ்வளவுதான். அதை நீ செய்திட்டியானா நான் உன்னைப் பத்தி அவரண்டை மூச்சு விட மாட்டேன். நீ இப்ப இருக்கிற மாதிரியே அவர் வீட்டில் நிம்மதியா சந்தோஷமா இருந்துக்கிட்டே வரலாம்''- என்ற இரவியம், காவிதமாய்த் துவண்டிருந்த சோமுவின் கைப்பிடியில் சரிந்துகிடந்த கூடையிலிருந்து ஓர் ஆப்பிளைச் சுவாதீனமாய் எடுத்துக் கடித்துத் தின்ன ஆரம்பித்தான்.

''அவர்... என் எஜமானர்...'' வெளிறி உறைந்த சிலை பேசுவது போல் சொற்கள் தடுமாறி வந்தன. ''என்னை... எத்தனை நம்பறார் தெரியுமா?''

''அதனால்தான் இன்னும் சுலபம். எடுத்துக் கொடுக்கிறதும் உனக்குச் சுலபம். அவரும் உன்னைச் சந்தேகப்பட மாட்டார்.''

''ஆனா...இது... நீ செய்யச் சொல்றது... நம்பிக்கைத் துரோகமில்லேயா?''

''ரொம்ப சரி.'' இரவியம் நிதானமாய்ப் பழத்தைத் தின்று முடித்து நடுப் பகுதியைத் தூர எறிந்தான். ''நீ நம்பிக்கைத் துரோகம் பண்ணாதே. நான் அவர்கிட்ட நீ ஒரு 'ஜெயில் பறவை'ன்னு தெரிவிச்சப்புறம் எப்படியும் மிச்சம் ஏதும் அவருக்கு நம்பிக்கை இருக்காது இல்லேயா நீ துரோகம் பண்ண? சரி, அப்ப கூடிய சீக்கிரம் நீ மறுபடியும் தெருத் தெருவாய் அலையறப்ப நாம் சந்திக்கலாம். வரட்டுமா? ஆப்பிள் ரொம்ப ருசி. நல்லாப் பொறுக்கி வாங்கியிருக்கறே. கெட்டிக்காரனாச்சே நீ! டாடா!''

எழுந்து நடந்தவன் பின்னே தன் உடல் பாய்ந்து ஓடுவதை உணர்ந்தான் சோமு.

''டே, இரவியம், அவசரப்படாதேடா. அதுக்குள்ள கோவிச்சுக்கிட்டுப்போயிடாதே'' வேர்வையிலும் கருணையாக நனைந்துபோன சோமுவின் கை இரவியத்தின் தோளைப் பற்றியது. இரவியம் திரும்பிப் பார்த்தான்.

''யோசிக்க அவகாசம் வேணுங்கறியா? சரி, ரெண்டு நாள் டைம் தரேன். இன்னிக்கு வெள்ளியா? ஞாயிற்றுக்கிழமை இதேமாதிரி சாயங்காலம் அந்த மணிக்கு இந்த இடத்தில் வந்து காத்திருக்கேன். நீ இங்கே என்னைச் சந்தித்து ரெண்டில் ஒண்ணு முடிவாய்ச் சொல்லிடு. நான் சொல்றபடி கேக்கறதானால் பேனாக்களையும் அப்பவே கொண்டு வந்துடு. இல்லே, நீ திருடிட்டு ஜெயிலுக்குப் போனவன்னு தெரிஞ்சு உன் எஜமானர் உன்னை விரட்டியடிக்கணும்னு ஆசைப்பட்டியானாலும் அப்படியே செய். அதுதான் உன் இஷ்டம்னு நான் என்ன செய்ய முடியும்?''

குத்தும் புன்னகை. கொல்லும் வார்த்தைகள். அவன் போய்விட்டான்.

அந்தக் கடுஞ் சொற்கள் வீசிய சாட்டையில் சோமுவின் உடலும் நெஞ்சும் அடியுண்டு நடுங்கின. அங்கமெல்லாம் எரிந்தது. வெகு நேரம் தரையை வெறித்தபடி அசையாமல் நின்றிருந்தான்.

சோமு நடந்து கொண்டே இருந்தான். முகம் சாம்பிக் கிடந்தது. உயிர் எங்கெங்கோ ஊசலாட, உடல் மட்டும் நடந்து கொண்டிருந்தது.

...பின்னே இரவியம் சொன்னபடிதான் செய்துவிட்டால் என்ன? தான் இப்போது வாழும் இனிய வாழ்வு தடையின்றித் தொடரும். அவர் நம்பிக்கையில் பதுங்கி அவன் நிம்மதியாய்க் காலம் கழிக்கலாம்.

அவன் திருடினால் அவருடைய நம்பிக்கை நீடிக்கும்! திருட மறுத்தால் திருடன் என்பதற்காக வெறுக்கப்படுவான்! எத்தகைய வக்கிரமான நகைச்சுவை இது! விதி எப்படியெல்லாம் பரிகசிக்கிறது!

இரவியம்... பாவி, எத்தகைய நச்சுப் பாம்பாய் அவன் வாழ்வைப் பொசுக்க வந்துவிட்டான்! குற்றவாளி திருந்தி வாழ்வதைக் காணப் பொறுக்கவில்லை அவனுக்கு!

அவன் வீட்டினுள் நுழைந்ததும் எஜமானியம்மாள் அவனிடமிருந்து கூடையை வாங்கிக்கொண்டாள்.

''ஏண்டா என்னமோ பேயறைஞ்சாப்பலே இருக்கே? வெயில்லே அலைஞ்சது களைப்பாயிருக்குதா?''

''எதுக்குக் கேட்டுக்கிட்டு நிக்கறே? கொஞ்சம் காப்பி கலந்து வந்து கொடு. சின்னப் பையன்தானே பாவம்'' என்று சொல்லிக் கொண்டே அலுவலகத்திலிருந்து திரும்பிய ராமலிங்கம் உள்ளே நுழைந்தார்.

இவர்களெல்லாம் ஏன் இப்படி அன்பினால் அவனைக் கொல்கிறார்கள்? சோமுவுக்குத் துக்கத்தில் ஆத்திரம்கூட வந்தது. அவரை ஆவேசமாகப் பார்த்தான். மறு நிமிஷம் நெஞ்சு விம்மிக் கண்வரையில் வந்துவிடும் போல் இருந்தது. அவசரமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

இந்த நல்ல மனிதருக்குத் துரோகம் இழைப்பதா? இப்படியாகவா அவன் முன்

வெல்டிங் ஒரு மூன்றெழுத்து வார்த்தை

அதற்குச் சிறிது விளக்கம் தேவை

அந்த மூன்று எழுத்துக்கள் ஐஓஎல் என்பது தெளிவு. ஏனெனில் ஐஓஎல் (இந்தியன் ஆக்ஸிஜன் லிமிடெட்) வெல்டிங் தொழில் நுட்பத்தில் முன்னேற்றத்துக்கு எப்போதும் முன்னோடியாக இருந்து. இந்த நாட்டில் புதிய வெல்டிங் உத்திகளை புகுத்தியுள்ளது. அதே சமயத்தில் ஐஓஎல் நம் நாட்டிலேயே பலவகை வெல்டிங் சாதனங்களையும் அதற்குச் சம்பந்தமுள்ள வேறு பொருள்களையும் செய்துள்ளதோடு வேறு எங்கும் உள்ள சிறந்த தொழில் நுட்பவாதிகளுக்குச் சமமான வெல்டிங் தொழில் நுட்பவாதிகள் பலரையும் பயிற்றுவித்துள்ளது.

இன்று நாட்டின் ஒவ்வொரு பெரிய தொழில் பிரதேசத்திலும் 60-க்கும் அதிகமான தொழிற்கூடங்கள், அலுவலகங்கள், டிப்போக்கள், கம்பிரஸிங் நிலையங்களை நிறுவி செயல்பட்டு வருகிறது. ஒரு விரிவான வினியோகிப்புப் பணியையும் அது செய்து வருகிறது வெல்டிங் சம்பந்தமாக எழக்கூடிய எந்த ஒரு பிரச்னையையும் தீர்த்து வைக்க இந்தியா முழுதும் ஐஓஎல் தொழில் நுட்ப நிபுணர்களும், சர்வீஸ் இன்ஜினியர்களும் பணியாற்றுகின்றனர்.

வெல்டிங் துறையில் முதல்வர்கள் :

IOL



ஒரு பிரச்னை? தேர்ந்தெடுக்க மூன்றாவதாக ஏதும் இல்லையா? போலீஸ் வழிதானா?

முகத்தைத் துடைத்துக் கொண்டு வாசலுக்கு வந்து குறியின்றி வெளியே வெறித்துப் பார்த்தபடி நின்றான்.

''சோமு!''

இருவர் குரலுமே வந்தது. உள்ளே வந்தான். அம்மாள், ''உனக்குச் சாப்பாட்டு அறையில் காப்பி கலந்து வச்சிருக்கேன், போய் எடுத்துக்க'' என்றவாறு கணவனுக்குச் சிற்றுண்டியும் காப்பியும் எடுத்துக் கொண்டு போனாள். அவர் அழைத்த குரலுக்குக் கீழ்ப்படிந்து அவன் முதலில் அவரிடம்தான் சென்றான்.

''இந்தா சோமு, என் கோட்டைக் கொண்டுபோய் ஸ்டாண்டில் மாட்டிடு. பாக்கெட்டில் இன்னிக்கு நான் பாங்கிலேருந்து எடுத்து வந்த இருநூறு ரூபாய் இருக்குது. அதைப் பர்சோடு எடுத்து அலமாரியில் வச்சுப் பூட்டு. அப்புறம் இதைப் பார்த்தியா? அழகாயில்லே?''

இன்னொரு புதுப் பேனா.

சோமுவின் முகம் துடித்தது. பேனா. திரவியம் பாவி பாவி பாவி...

''பணத்தை ஜாக்கிரதையாய் எடுத்துவை. இந்தா.''

அவர் தந்த கோட்டை வாங்கிக் கொண்டு அவன் சென்றான். ஸ்டாண்டில் தலையற்ற முண்டமாக அதை மாட்டிவிட்டுப் பையிலிருந்து பர்சை வெளியே எடுத்தான்.

உள்ளே இருநூறு ரூபாயைக் கொண்ட பர்ஸ். அவருக்குத்தான் அவனிடம் எவ்வளவு நம்பிக்கை! இந்தப் பர்ஸை அவன் தன் உள்ளங்கையில் ஏந்தி வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

வெறுங்கையில் வெந்தணலை அநாயாசமாக ஏந்தும் ஜாலக்காரன் சாதனை. முன்பு—திரவியம் போன்ற சகாக்களுடன் பழகி வந்த அந்த நாட்களில் — சிறைக்குப் போவதற்கு முன்னால் — இப்படி அவனால் அதைச் சலனமின்றிப் பார்த்திருக்க முடியுமா? இதனினும் சிறிய தொகைகளே அவனுள் வஞ்சத்தைத் தூண்டியிருக்கின்றனவே! பிறர் பொருளை நெருப்பாய்க் கருதி விலக்கவில்லை அப்போது.

இப்போதும் அது நெருப்பாக இல்லை. ஆனால் இப்போது காரணம் வேறு. அவனைப் பொறுத்தவரையில் இது இல்லாப் பொருள். பிறருடையதை நெருப்பாய்க் காணும் நிலைக்கும் மேலே அவன் உயர்ந்து விட்டதால் இந்த நெருப்பு அவனைச் சுடவில்லை.

எத்தகைய சாதனை இது?

அவர் அவனை நம்புவது கிடக்கட்டும். அந்த நம்பிக்கைக்குத் தகுந்தவனாக அவன் மாறிச் செயல் புரிகிறான் என்பதல்லவோ அதை விட முக்கியம்! திருடனைத் திருந்தியவனாக மாற்றிக் கொண்டு வாழும் அவன் நேர்மையல்லவோ மற்ற யாவினும் பொருள் பொதிந்த அவனுடைய மகத்தான சாதனை! இந்த மாற்றம் அவன் உருவாக்கிக் கொண்டது. இந்த நேர்மை அவன் தனக்கென்று தேடிக் கொண்ட பொக்கிஷம். அதை இனி எதற்காகவும் அவனால் இழக்க முடியாது.



இருட்டைக் கண்டு பயப்படுகிற குழந்தையை மன்னித்து விடலாம். ஆனால் வெளிச்சத்தைக் கண்டு பயப்படும் பெரியவர்களை என்ன செய்வது?'' -பிளாட்டோ

ஹிம்மத் - முத்து

இனி திருடுவதில்லை என உறுதி பூண்ட பின் அதில் நிலைநிற்க வேண்டியதுதானே அந்தப் பொக்கிஷத்தின் மதிப்பு? இதில் பிரச்னை எங்கே? சிக்கல் எங்கே? நேர்மை என்று தேர்ந்து கொண்டதை வழுவாமல் கடைப்பிடிக்கும்போது விளைவுகளைப் பற்றி யோசனை என்ன?

பழைய விவரங்கள் தெரிந்த பின் அவர் அவன் இப்போது நாணயமானவன் என்பதை நம்ப மறுக்கலாம். வீட்டிலிருந்து வெளியேற்றிவிடலாம். அதன் பின் யாருமே அவனைத் திருடன் என்று காட்டி விலக்கலாம். அதைப் பற்றியெல்லாம் கவலைப்பட்டால் ஆகுமா? தன் பொக்கிஷத்தை அவன் காப்பாற்றுவான். அது ஒன்றைக் குறித்து மட்டும் தானே அவனுக்குப் பொறுப்பும் கடமையும் இருக்க முடியும்? நியாயம் என்று தனக்குத் தோன்றுவதைத்தான் யாராயினும் செய்ய முடியும். அதற்கு மேல் ஏதுமில்லை. அந்த உள் நியாயத்தை அவன் கைவிட்டால் அப்போதுதான் குற்றவாளியாவான். பிறருக்குக் கிடக்கட்டும், தனக்குத் தானே துரோகியாவான்.

அவனுள் புல்லரிப்பு ஓடியது. திடீரென்று ஒரு புதிய சுதந்திர உணர்ச்சி அவனைத் திக்குமுக்காடச் செய்தது. பர்சை எடுத்துக் கவனமாய் அலமாரியுள் வைத்துப் பூட்டினான். மேற்றட்டில் தெரிந்த பேனா வரிசை கதவடைப்பில் கண்ணுக்கு மறைந்தது.

வெளி அறையில் ராமலிங்கம் மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்தார்: ''பேனா எத்தினி அழகா இருக்குது பார்த்தியா? இதுவரை நான் வாங்கின எல்லாப் பேனாவை விடவும் இதுதான் ரொம்ப உசத்தி!''

சோமு சிரித்துக் கொண்டான். ஒரு வாரத்தில் — மிஞ்சிப் போனால் பத்து நாட்களில்— அந்தப் பேனாவும் இந்த அலமாரி மேற்றட்டில் கொலுவிருக்க வந்துவிடும் என்று அவனுக்குத் தெரியும். அதைப் பார்க்க அவன் அப்போது அந்த வீட்டில் இருப்பானா என்பது மட்டும் தான் தெரியவில்லை. அதைப் பற்றி அவன் கவலைப்படவும் இல்லை.



தேவை ஒரு ஜாகை கவர்னருக்கு!

'மேனு'

புது தில்லி
12-5-71

தமிழக முதல்வர் அவர்களுக்கு,

வணக்கம். நான் தமிழக கவர்னர் பதவியை ஏற்கவிருக்கும் செய்தி ஏற்கனவே தங்களுக்கு அதிகார பூர்வமாக அறிவிக்கப் பட்டிருக்குமென்று நம்புகிறேன். தங்களுக்குத் திருப்தியளிக்கும் விஷயம்தானே?

நிற்க: கவர்னர் மாளிகையை (மாளிகை என்ற சொல்லுக்கே வளர்ந்து வரும் இன்றைய சோஷலிஸ சமுதாய சூழ்நிலையில் பொருள் இல்லை! மதிப்பு இல்லை! கடைநிலையிலுள்ளவர்களின் வசதி வளரும்வரை கவர்னர் வசிக்கும் இடத்தைக் கவர்னர் குடிசை என்றே அழைக்கலாம் என்பது என் கருத்து. ஓட்டு வீடுகள் அல்லாத மற்ற எல்லாக் கட்டிடங்களையுமே தேசிய மயமாக்கி விடவேண்டுமென்று நண்பர் நிதி மந்திரி சவானிடம் பலர் யோசனை சொல்லி வருகிறார்கள்.) கிண்டியிலிருந்து நகரத்தினுள்ளே கொண்டு வரும் யோசனையைத் தாங்கள் பரிசீலனை செய்து வருகிறீர்கள் என்று கேள்விப் படுகிறேன்.



வெகு சிறந்த யோசனை. நான் முன்பு பல தடவைகளில் கிண்டி மாளிகையில் (பழக்க வாசனை! அந்தச் சொல்லின் உபயோகத்தைச் சட்டென்று கைவிட முடியவில்லை!) விருந்தினராக வந்து தங்கியுள்ள நேரங்களில் இதைப் பற்றி நினைத்துப் பார்த்திருக்கிறேன். அவ்வளவு பெரிய ஜாகை வசதி அவசியமுமில்லை. அவ்வளவு தூரம் பொதுமக்களிடமிருந்து ஒதுங்கி இருக்க வேண்டிய தேவையுமில்லை. ஆகையால் நகர எல்லைக்குள் தாங்கள் சாதாரணமான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியை நான் பாராட்டுகிறேன்.

இந்த நேரத்தில் ஒரு சிறு யோசனை சொல்வது மிகையாகாது என்று நினைக்கிறேன்.

மற்றப் பெரும்பாலான மாநிலங்களில் நிலவும் பதற்றமான சூழ்நிலை தங்கள் மாநிலத்தில் இல்லாததற்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன். அடிக்கடி அரசியல்வாதிகள் குறிப்பாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி விட்டுக் கட்சி மாறி கவர்னரிடம் உச்சி வேளையிலோ அர்த்த ராத்திரியிலோ கும்பலாக ஓடிவந்து 'நான் மந்திரி சபை அமைக்கிறேன்' 'என்பக்கம்தான் இப்போது மெஜாரிட்டி' என்று கூச்சலிடும் குழப்ப நிலையைத்தான் குறிப்பிடுகிறேன். அந்த மாதிரி சூழ்நிலையிலுள்ள மாநிலங்களில் கவர்னர் ஜாகையில் விஸ்தாரமான வரவேற்பு அறை, ஹால் எல்லாம் தேவையாக இருக்கலாம். தமிழகத்தில் அந்தத் தேவையில்லை. ஆகவே சாதாரண ஏதாவது பிரதான தெருவில் ஏற்பாடு செய்வது நலம். அக்கம் பக்கத்தினருடன் பழகிப் புழங்க வாய்ப்பாக இருக்குமே! மற்ற விஷயங்களைத் தங்கள் யோசனைக்கே விட்டு விடுகிறேன்.

தங்கள்

கே. கே. ஷா

2

புது தில்லி
15-5-71

தமிழக முதல்வர் அவர்களுக்கு,

வணக்கம். என்னுடைய முந்திய கடிதம் கிடைத்திருக்குமே? பார்த்திருப்பீர்களே? அதில் கண்ட யோசனைகளுடன் மேலும் ஒரு



யோசனையையும் சேர்க்க விரும்புகிறேன். பெரிய மாறுதல் ஒன்றும் இல்லை.

மதுவிலக்குப் பிரச்னை பற்றித் தாங்கள் எழுப்பிய கோரிக்கைக்கு நம் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கொடுத்துள்ள பதிலை ஆகாசவாணி மூலம் அறிந்தேன். தாங்கள் ஏற்கனவே எடுத்திருக்கும் முடிவு இப்போது அமுலுக்கு வந்துவிடும் என்றே எண்ணுகிறேன். அப்படித்தானே? கடந்த பல ஆண்டுகளாகவே இந்த மது விஷயத்தில் அவ்வளவு சுதந்திரமாக இல்லாதவர்கள் திடீரென்று இப்போது கிடைக்கவிருக்கும் சுதந்

புதிய கவர்னர்
நகைச்சுவைப் பிரியராம்.
ஆகவே அவர் எழுதாத
இக் கடிதங்களைத் துணிந்து
பிரசுரிக்கிறோம். ரசிப்பாராக.

திரத்தை அமோகமாக, ஆனந்தமாக, ஆசையைக் கட்டுப்படுத்தாமல் அனுபவிக்க விரும்பலாம். அவர்களுக்குச் சுதந்திரத்தை அளித்துவிட்டு அதை அனுபவிப்பதில் தடைகளை விதிப்பது தர்மம் ஆகாது. ஆகவே தெருக்களில் உற்சாகம் கரை புரண்டு ஓடலாம். கீதங்கள் ஒலிக்கலாம். மோதல்கள் இருக்கலாம். கற்கள் பறக்கலாம். கைகலப்பு நிகழலாம். இவற்றை அதிகாரபூர்வமாகத் தடுப்பதும் முறையல்ல. நாம் முன்னேற்பாடுடன் நடந்து கொள்வதுதான் விவேகமான செயல். அதனால் எனக்குத் தாங்கள் நகரில் பார்க்கவிருக்கும் ஜாகை முகப்புக்கும் ஜன்னல்களுக்கும் உறுதியான கம்பி வலைகளைப் பொருத்த ஏற்பாடு செய்யவும். கல்வீச்சுக்களிலிருந்து உடைமைகளைக் காப்பாற்றிக் கொள்ள உதவுமல்லவா?

தங்கள்

கே. கே. ஷா

3

புது தில்லி
18-5-71

தமிழக முதல்வர் அவர்களுக்கு,

வணக்கம். என்னுடைய முந்திய இரண்டு கடிதங்களையும் பார்த்திருப்பீர்கள். இப்போது உங்கள் ஜாதகத்தில் யோக தசை நடக்கிறது. (உங்களுக்கு ஜாதகங்களில் அவ்வளவு நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். இந்தப் பக்கம் நாங்கள் எல்லாருமே தீவிர ஜாதகவாதிகள்). தங்கள் மாநில சுயாட்சிக் கோரிக்கைகள், ராஜமன்னார் கமிட்டி ரிப்போர்ட்டுகள் முதலியவை பற்றிப் புது டில்லியில் பரவலான விமரிசனங்கள் செய்யப்படுகின்றன. என் காதுகளிலும் விழுகின்றன. நான் தீவிரமாகத் தமிழ் மொழிப் பயிற்சியை மேற்கொண்டது அவசியம்தானா என்று நினைக்க ஆரம்பிக்கிறேன்.

நிர்வாகியை விட அரசியல்வாதியையே கவர்னர் பதவிக்கு நீங்கள் விரும்பி வரவேற்பதாகப் பேச்சு அடிபட்டது. அதற்காகத்தான் இந்திரா அம்மையார் ஸ்ரீ எல். பி. சிங்குக்குப் பதில் என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறாராம். ஒருவேளை நீங்கள் உங்கள் கட்சி வட்டச் செயலாளர் யாரையாவது கௌரவிக்கும் எண்ணத்தில், அவரையே கவர்னராக நியமிக்கலாம் என்ற கருத்தில் அரசியல்வாதி தேவை என்று சொன்னீர்களோ என்னவோ? இருநூறு பவுன் தங்கக் கிரீடம் சூட்டிச் சேர சோழ பாண்டிய வரிசையில் அவரைச் சேர்க்க விரும்பலாம். அது நியாயமானது; முறையானது. இதனால் என்னுடைய தமிழக வாசம் குறுகிய கால வாசமாகக் கூட இருக்கலாம். இதையெல்லாம் முன்னிட்டுத் தாங்கள் எனக்காகத் தேடும் ஜாகையைத் தாற்காலிக அளவில் தேடினால் கூட நல்லது. எதற்காகப் பெரிய வீடு? நிறைய வாடகை? ஆடம்பரப் பராமரிப்பு?... பெரிய வீட்டில் ஒரு போர்ஷனாக இருந்தால் கூடப் போதுமே? ஆவன செய்யுங்கள். அத்தியாவசிய அடிப்படையில் இருக்கட்டும்.

தங்கள்

கே. கே. ஷா

4

சென்னை
23-5-71

திருவாளர் கே. கே. ஷா அவர்களுக்கு,

வணக்கம். தங்கள் மூன்று கடிதங்களையும் ஒரேயடியாக நேற்றுப் படித்தேன். ஒரே சுற்றுப் பிரயாணம். பிறந்த நாள் வைபவங்கள், பாராட்டு விழாக்கள், பட்டா அளிப்பு நிகழ்ச்சிகள், நன்றி நவிலல் கூட்டங்கள் எல்லாம் சேர்ந்து விட்டன. நேற்றுத்தான் தலைநகர் திரும்பினேன்.

நிற்க, இப்போதுள்ள பல்வேறு பிரச்னைகளிடையே என் கவனத்தைத் தங்கள் ஜாகை வசதி விஷயங்களில் திருப்ப இயலாமைக்கு வருந்துகிறேன். ஆகவே, தாங்கள் இங்கு வரும் போது பழைய மரபுப்படி கிண்டி ராஜபவனத்திலேயே தங்க வேண்டியிருக்கும். மாறுதல்களைப் பிறகு கவனிக்கலாம். பிற நேரில்.

தங்கள்

தமிழக முதல்வர்

படித்துப் பாருங்கள்

காணக் கிடைக்காத தங்கம்

நாம் தெருவில் போகும்போது அன்றாடம் சைக்கிள் கடையையும் காற்று அடைக்கும் பையனையும் பார்க்கிறோம். இந்தச் சாதாரண கதாபாத்திரத்தை வைத்துக் கொண்டு அற்புதமான உயிருள்ள நாவலைப் படைத்திருக்கிறார் ஜெகசிற்பியன். சைக்கிள் கடைப் பையன் அருணகிரி தன் முதலாளி ஏழுமலையிடம் அத்தனை அடி உதை, வசை மொழிகளையும் பெற்றுக் கொண்டே, சோற்றுக் கடைக்காரி கனகா, மாணவி நிர்மலா இவர்களது காதலுக்கும் ஈடு கொடுத்துச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. முதலாளி ஏழுமலையின் மகன் செல்லத்துரை கொடுத்த காதல் கடிதத்தை மாணவி நிர்மலாவிடம் சேர்க்க, அவள் அவனே அதை எழுதியதாய் முடிவு கட்டி விடுகிறான்! ஆனால் உண்மையில் அருணகிரியின் மனம் சோற்றுக் கடைக்காரி கனகாவிடமே ஈடுபட்டிருக்கிறது. கடையில், உழைப்பால் உயர்ந்த அருணகிரி சைக்கிள் தொழிற்சாலைக்கே அதிபராக வந்தபோதும் தன் காதலி கனகாவை ஏற்றுக்கொள்ளத் தயங்கவில்லை. அருணகிரியின் முன்னேற்றத்துக்கு வழி வகுத்த நிர்மலாதான் அதை இருந்து காணக் கொடுத்து வைக்கவில்லை!

உயிருள்ள, தெளிவான நடையில் நன்கு 'கதை' ஜோடித்து அந்தக் கதையோடு நம்மை ஒன்றிவிடச் செய்யும் சாமர்த்தியம் ஜெகசிற்பியனுக்குக் கைவந்த கலை. 'ஜீவகீத'த்தில் வரும் நச்சி எப்படி நம்மை ஆட்கொண்டாளோ, அப்படியே சைக்கிள் கடைப் பையன் அருணகிரியும் நம் உள்ளத்தில் இடம் பிடித்துக் கொள்கிறான்.

பிரசுரம்: வானதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை—17; விலை ரூ. 5



கடுங்கோடையின் சோர்வை நீக்கி புத்துணர்வு அளிக்கும் **கிஸான்** ஸ்குவாஷ்

அன்றே பறித்த பழத்தின் சாறு தரும் சத்தெல்லாம் உள்ளது **கிஸான்** ஸ்குவாஷ்



கடும்கோடையில் குழந்தைகள் சோர்வையும், கணவர் சலிப்பையும், விருந்தினர் அலுப்பையும் தவிர்க்க உடனே ஒரு கிளாஸ் சத்துமிகு கிஸான் ஸ்குவாஷ் கனிரசம் அளித்திடுங்கள். அவர்கள் முகம் எப்படி மலருகிறது எனக் கண்டுகளியுங்கள். (ஒரு பாட்டிலில் 16 கிளாஸ் தயாரிக்கலாம்).

உங்களுக்கும் சிறந்தது அது. நோய் எதிர்ப்பு சக்திக்கு தேவையான வைட்டமின் C சத்து இயல்பாகவே இருப்பது கிஸான் ஸ்குவாஷ். நல்ல கனிகளும் தூய கரும்புச்சர்க்கரையும் சேர்ந்து தயாராகும் கிஸான் ஸ்குவாஷ் கிடைப்பவற்றில் மிகச்சிறந்தவை. இந்தியாவில் அவைகள் ஏராளமாக விற்பனையாவதில் வியப்பில்லை.

தேர்ந்தெடுக்க அருமையான சுவையில் 5 வகைகள்: ஆரஞ்சு, லெமன், மாங்கோ, லெமன்பார்லி, லைம்ஜூஸ் கார்டியல்.

கிஸான் பிராடக்ட்ஸ் லிமிடெட், பெங்களூர்-16



கிஸான் *தோட்டக்கனியின் தீஞ்சுவையெல்லாம் வீட்டினுள்ளே அளித்திடுமே!*

KP-3763



தேவை ஒரு காதலி

உமாநாதன்

காலையில் துயிலெழுந்த ரங்கநாதன் கட்டிலருகில் இருந்த முக்காலி மேல் பிளாஸ்கில் காவல்காரர் வாங்கி வைத்திருந்த காப்பியின்மேல் நாட்டமில்லாமல் செய்தித் தாளைப் புரட்டினான். செய்திகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. பெரும்பாலான பக்கங்களைப் பெருமளவுக்கு விளம்பரங்கள் நிறைத்திருந்தன. எல்லாவற்றிலும் அழகிகளின் உருவங்கள்.

முந்தைய இரவு முழுதும் பெண்களைப் பற்றிய சிந்தனைகள் அவன் தூக்கத்தைப் பாதித்திருந்தன. மாலையில் அவன் கடற்கரைக்குச் சென்றிருந்தான். வண்ண வண்ண உடையணிந்த அழகிகள் ஆண்களுடன் இணை இணையாக நெருங்கி நடந்ததும் அமர்ந்திருந்ததும் ரங்கநாதனை ஏக்கப் பெருமூச்செறியச் செய்தன. கடற் காற்று அவன் நெஞ்சின் வெப்பத்தைத் தணிக்கத் தவறவே அவன் மவுண்ட் ரோட்டிலிருந்த திரைப்பட அரங்கு ஒன்றில் இரவுக் காட்சி காணச் சென்றான்.

கூட்டமே இல்லாத இரவுக் காட்சியில் அவனுக்குப் பின் வரிசையில் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தங்கள் சூழ்நிலையையே மறந்து நெருக்க நிலையில் அளித்த காட்சியை அவன் கண்டான்.

ரங்கநாதனால் திரைப்படத்தைத் தொடர்ந்து கவனிக்க முடியவில்லை. கல்லூரி நாட்களிலேயே காதல் நிகழ்ச்சிகள் பல நடப்பதை அவன் அறிவான். அவனது அலுவலகத்தில்கூட எத்தனையோ காதல் மலர்ச்சிகள் உலவின. ஆனால் முப்பது வயதான அவனுக்கு மட்டும் காதல் அனுபவம் ஏற்படவே இல்லை!

தேசிய கீதம் முடிந்து வெளியே வந்த ரங்கநாதனின் உள்ளத்தை விரக்தி வியாபித்தது. அறைக்குத் திரும்பிய அவன் தூக்கம் வராமல் நிம்மதி இழந்து தவித்தான். எதற்கும் திட்டமிடும் இந்நாளில் அவன் காதலிக்க ஒரு திட்டம் தீட்ட முனைந்தான்.

பத்திரிகையின் வரி விளம்பரங்கள் பகுதியில் 'பேனா நண்பர்கள்' என்ற தலைப்பின் கீழ் 'பெண்களுடன் பேனா நட்பை நாடுகிறீர்களா? தபால் தலையுடன் எழுதவும்' என்று காணப்பட்ட விளம்பரம் அவன் கவனத்தைக் கவர்ந்தது. தகுந்த காதலியை அவதூறுக்கு இடமில்லாமல் அடையச் சரியான வழியைக் கண்டுபிடித்துவிட்ட உவகையில் உடனே பத்து ரூபாயைச் சந்தாவாகக் கட்டினான். ஆனால் ரங்கநாதன் உள்ளம் கசந்தது. காரணம் அங்கத்தினரான பின் அவனுக்கு வந்த பட்டியலில் நூற்றுக் கணக்கான ஆண்களைப் பற்றிய விவரங்கள்தான் இருந்தன. பெண்கள் பெயர்கள் சிலவே தோன்றின. அவற்றிலும் தமிழ்ப் பெண் பெயர் எதுவுமே இல்லை. பத்து ரூபாய்ச் செலவுக்குப் பலனேதுவும் இல்லை என்பதை மனம் ஒப்புக் கொள்ள மறுத்தது. மொழியும் இனமுமா பேனா நட்பின் குறுக்கே நிற்க வேண்டும்? பட்டியலில் கண்ட பத்துப் பெண்களுக்கும் தனது இலக்கிய ஆர்வத்தை விவரித்துக் கடிதங்கள் எழுதினான். ஒரு மாதமாகியும் பதில் எதுவும் வரவில்லை.

இறுதியில் தகாத சபலத்துக்குப் பத்து ரூபாய் நஷ்டப்பட்டது தண்டனை என்று அவன் தனது முயற்சியைக் கைவிட முடிவு செய்தான்.

ஆனால் அன்று மாலை விடுதித் தபால் பெட்டியில் அவன் பெயரில் மூன்று கடிதங்கள் இருந்தன. நன்மைகள் வரத் தொடங்கிவிட்டால் தவிர்த்து வருவது இல்லை போலும்! துடிக்கும் நெஞ்சுடன் படியேறி அறையை அடைந்து கடிதங்களைப் பிரித்தான்.

முதற் கடிதம் திருச்சியில் பெண்கள் கல்லூரி ஒன்றில் எம். எஸ்ஸி. படிக்கும் சாந்தியிடமிருந்து வந்திருந்தது. அவள் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட முறையே அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது— ''எங்கு நோக்கினும் பெண் மயமாக இருக்கும் சூழலில் ஆண்மையைக் கூடிய உருவிலாவது காண ஏங்குகிறேன்.''

இரண்டாவது கடிதம் சூரியகுமாரி என்ற கன்னடப் பெண் எழுதியது. அவள் கோலாரிலுள்ள பெண்கள் பள்ளி ஒன்றில் ஆங்கில ஆசிரியையாகப் பணி புரிபவள். தனிமையின் கொடுமையைப் பொறுக்காமல் பேனா நட்பை நாடுவதாக அவள் எழுதியிருந்தாள்.

மூன்றாவது கடிதம் கோழிக்கோடு சித்திராவுடையது. அவள் அரசியலிலும் பொருளாதாரத்திலும் ஈடுபாடுடைய முற்போக்கான பெண் என்று தன்னைப் பற்றி விவரித்திருந்தாள்.

இரவு நெடு நேரம் வரை தனது அறைத் தோழர்களின் முணுமுணுப்பைப் பொருட்படுத்தாது விளக்கைப் போட்டுக் கொண்டு மூன்று பெண்களுக்கும் சுவையான பதில்கள் எழுதினான். கடிதங்களை முடித்தவுடன் உள்ள நிறைவுடன் இனிய கற்பனைகளில் திளைத்தவாறு ரங்கநாதன் உறக்கத்தில் ஆழ்ந்தான்.

அடுத்த மூன்று மாதங்களுக்கு அவன் நண்பர்களையும் திரைப்படங்களையும் அலுவலகத் தேர்வுகளையும் அறவே மறந்து, தனது பேனாக் காதலிகளுக்குக் கடிதங்கள் எழுதுவதில் தனது பெரும்பகுதி நேரத்தைக் கழித்தான்.

அவனது அறைத் தோழர்கள் அவனுடைய பேனாக் காதலிகள் குறித்து அவனைக் கேலி செய்த வண்ணம் இருந்தனர்.

சாந்தியின் கடிதங்களில் காதற் சுவை தோன்றிவிட்டதைக் கண்ட அவன் தனது உள்ளத்திலே இத்தனை ஆண்டுகளாக அமுங்கிக் கிடந்த காதல் உணர்வுகளுக்கு முதன் முறையாக எழுத்து வடிவம் கொடுத்தான். ஆனால் அவனுடன் எதிர்பார்த்த பதில் கடிதத்தில் அவள் தனது அறையில் வைத்திருந்த பணமும் விலையுயர்ந்த துணிகளும் எதிர்பாராத வகையில் திருட்டுப் போய் விட்டதாகவும், தனது தந்தைக்கு இது பற்றி எழுதினால் அவர் கோபித்துக் கொள்ளுவார் என்று அஞ்சுவதால், தனது இடுக்கண் களைய அவனது உதவியைத் தயக்கத்துடன் நாடுவதாகவும் விவரித்து நூறு ரூபாய் உடனே அனுப்ப முடியுமா என்று கேட்டு எழுதியிருந்தாள். நூறு ரூபாய் அவனுக்குப் பெரிய தொகை. என்ன செய்வதென்று சிந்தனையில் ஆழ்ந்தான். அவதிக்குள்ளான அந்த அபலைக்கு — அவனது பேனாக் காதலிக்கு — எப்படியும் உதவ வேண்டும் என்ற முடிவுக்கு வந்த அவன் நண்பன் ஒருவனிடம் தனது தந்தைக்கு அவசரமாகப் பணம் அனுப்ப வேண்டியிருக்கிறது என்று கூறிக் கடன் வாங்கிப் பணத்தை அனுப்பி வைத்தான்.

அதன் பின் எத்தனையோ கடிதங்கள் எழுதியும் சாந்தியிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை. தனது நளினமான காதற் கடிதங்களின் விலையை மிகவும் நளினமான முறையில் சாந்தி பெற்றுக் கொண்டதை அவன் உணர்ந்தான். காதற் கன்னிகளைப் பற்றியே கனவு கண்ட ரங்கநாதனுக்கு ஏமாற்றுப் பெண்களும் உலகில் உண்டு என்ற உண்மை நூறு ரூபாய் இழப்பில் புரிந்தது.

இதற்கிடையில் சூரியகுமாரி கோலாரிலிருந்து ஆங்கிலம் கற்றுக் கொடுப்பதில் பயிற்சிக்காகப் பெங்களூர் சென்றிருந்தாள். அவளிடமிருந்து எழில்மிகு பெங்களூருக்கு வருமாறு அவனுக்கு அழைப்பு வந்தது. சூரியகுமாரியின் இனிய கடிதங்கள் சாந்தியின் துரோகத்தால் விளைந்த கசப்பை முறித்தன.

பொய்க் காரணம் ஒன்று காட்டி பிராவிடெண்ட் பண்டில் முந்நூறு ரூபாய் கடன் வாங்கி நண்பனிடம் நூறு ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, ஒரு வார லீவு எடுத்துக் கொண்டு இருநூறு ரூபாயுடன் ரங்கநாதன் பெங்களூருக்குப் புறப்பட்டான்.

ரயிலில் 'பர்த்' ரிசர்வ் செய்திருந்தும் கூட அவனுக்குத் தூக்கமில்லை. காதலுடன் இணைந்த செயல்களில்தான் பெண்களுக்கு எவ்வளவு திறமை! மறு நாள் காலை எட்டு மணிக்குப் பாலஸ் ரோட்டில் மவுண்ட்கார்மல் கல்லூரிக்கு எதிரிலிருக்கும் பஸ் ஸ்டாப்பில் முழுதும் வெள்ளை உடை அணிந்து காத்திருப்பதாகச் சூரியகுமாரி எழுதியிருந்தாள்.

ரங்கநாதன் மவுண்ட் கார்மெல் பஸ் ஸ்டாப்பை அடைந்த பொழுது எட்டு அடிக்கப் பத்து நிமிடங்கள் இருந்தன. ஏற்கனவே அங்கே வெண்ணிற உடை மாது ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். தடித்த உருவும், உப்பிய முகமும், கொழுக்கட்டை மூக்கும் கொண்ட அவள் ஒரு பொழுதும் சூரியகுமாரியாக இருக்க முடியாது.

அவன் இருபது நிமிடங்கள் நின்று பார்த்தும் வேறு வெள்ளைக் கலை உடுத்த பெண் யாரும் வராது போகவே தயக்கத்துடன் அந்த மாதை நெருங்கி, ''மிஸ் சூரியகுமாரி?'' என்று வினவினான். அவள் மகிழ்ச்சி பொங்க, ''ஹலோ, நாதன்! வெரி க்ளாட் டு மீட் யூ....'' என்று அவனது கையைப் பற்றிக் குலுக்கினாள். ''என்ன அடையாளம் தெரியவில்லையா? ஏன் பேசாமல் நின்று கொண்டிருந்தீர்கள்?'' என்று ஆங்கிலத்தில் கேட்டாள். சூரியகுமாரியின் தோற்றம் தோற்றுவித்த அதிர்ச்சியிலிருந்து ரங்கநாதன் இன்னும் மீளவில்லை. அவன் பேச்சிழந்து போய் நின்றான்.

சூரியகுமாரி அவன் பதிலுக்காகக் காத்திராமல், ''ஓர் ஆட்டோ பிடிக்கலாம். நான் ஊரைச் சுற்றிக் காட்டுகிறேன்'' என்று ஆர்வம் மிக்க குரலில் கூறினாள். ரோட்டில் சென்ற ஆட்டோ ஒன்றை அவளே அழைத்தாள். கப்பன் பார்க்கில் சிறிது நேரம் சுற்றி விட்டு லால்பாக்குக்குச் சென்றனர். கலகலவென்று பேசி அவனையும் பேச்சில் ஆர்வம் கொள்ளச் செய்தாள் அவள். ஆனால் ரங்கநாதனின் மனம் சூரியகுமாரியின் பேச்சில் ஈடுபடாமல் சிந்தனையில் ஆழ்ந்தது. கடைசியில் அவனுக்குக் கிடைத்த காதலி இந்த நாற்பது வயதுக் கிழவியா? அவன் அவள் வயதைப் பற்றியும் தோற்றத்தைப் பற்றியும் கேட்டு எழுதியிருக்க வேண்டும். புகைப்படம்கூடக் கேட்டிருக்கலாம். அவனுடைய கவனம் அவள் பேச்சில் செல்லவில்லை. இருந்தாலும் சூரியகுமாரிக்குப் பிடித்த ஹோட்டலில் ரங்கநாதன் செலவில் விருந்து சாப்பாடு, '' 'சங்க'த்தில் சினிமா; படம் முடிந்தபின் அவள் காட்டிய ஹோட்டலில் டிபன். அதைத் தொடர்ந்து மீண்டும் ஆட்டோ ரிக்ஷா ஊர்வலம். அவள் கண் பேசும் காதல் அவனுக்குப் புரிந்தாலும் அவன்தான் அதை உணர்ந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. அவள் இரவிலே விடுதிக்குத் திரும்பி விட வேண்டும் என்றாள். அவன் அதுதான் தக்க வாய்ப்பு என்று ஆட்டோவை வசந்த நகருக்குத் திருப்பச் சொன்னான்.

சூரியகுமாரி வழிகாட்ட ஆட்டோ அவளது விடுதியை அடைந்தது. ''நாளைக் காலையில் மீண்டும் அதே நேரத்தில் அதே இடம். வணக்கம் வருகிறேன்'' என்று கூறிக் கொண்டே இறங்கிய அவள் ஒயிலாக வலது கரத்தை ஆட்டினாள். ரங்கநாதன் மனத்துக்குள், ''இத்துடன் உனக்கு ஒரு முழுக்கு'' என்று கூறிக் கொண்டான்.

சூரியகுமாரியிடம் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்புவதுதான் அவள் அளித்த ஏமாற்றத்துக்கு அவனால் கொடுக்கக்கூடிய தண்டனை. அவன் அன்றிரவே மெயிலில் சென்னை திரும்பினான். இந்தப் பயணத்தின் பொழுதும் தூக்கமில்லை. அறுபது ரூபாய் செலவில் விளைந்தது வெறும் ஏமாற்றமே என்ற ஏக்கம் அவனைத் தூங்கவிடவில்லை.

ரங்கநாதன் தன் அறைக்கு மீண்டவுடன் அங்கே சித்ராவின் கடிதம் அவனுக்காகக் காத்திருந்தது. உறையைப் பிரித்துக் கடிதத்தை



இப்போது புத்தம் புதிய பாக்கெட்டில் உங்களுக்கு கிடைக்கிறது!



ஓஓபி நீலம்

"மனதிற்குகந்த தூய வெண்மை தருகிறது"

ஓ ஓ பி நீலம் முழுவதும் உடனடியாக கரைந்துவிடுகிறது.

வெள்ளைத்துணிகள் மேலும் பால்போன்று வெண்மையாகின்றன.

நீலப்புள்ளிகளோ மஞ்சள்நிற திட்டுகளோ விழுவதில்லை.



ஓ ஓ பி நீலம் மேற்கு ஜெர்மன் கூட்டுறவோடு இந்தியாவில் மிகவும் நவீனமான அல்டிராமரைன் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது.

தயாரிப்பாளர்கள்:
அல்ட்ராமரைன் அண்டு
பிக்மென்ட்ஸ் லிமிடெட்
அம்பத்தூர், சென்னை-53

UFL-6365

பணியின் பயன்

'எம். வி. இராமநாதன் என்றோர் இளைஞர். வயது இருபத்தொன்பதுதான் ஆகிறது. ஆவடி டாங்கி தொழிற்சாலையில் மெக்கானிக்காகப் பணியாற்றுகிறார். சமீபத்தில்தான் திருமணம் நடந்தது. வாழ்க்கையின் இனிமையில் அடியெடுத்து வைக்க வேண்டிய தருணம். பெரும் துன்பத்துக்கு இரையாகிவிட்டார். செல்வத்தால் நீக்கா விட்டாலும் நோயற்ற செல்வத்தால் நீக்கலாம் அல்லவா? அதற்கு இடம் கொடாமல் அவரது இரு சிறுநீரகங்களும் பழுதுபட்டு விட்டன. மாற்றுச் சிறுநீரகம் பொருத்தாமல் பிழைக்க மாட்டார் என்ற நிலை. இதற்கு ஏறக்குறைய பதினையாயிரம் ரூபாய் செலவாகும். வேலூர் மிஷன் ஆஸ்பத்திரியில்தான் அறுவைச் சிகிச்சை செய்ய முடியும். மாற்றுச் சிறுநீரகத்துக்கு எங்கே போவது?- இதுகூடப் பிரச்னை இல்லை. பெற்ற தாயார் தர முன்வந்து விட்டார், சொந்தத் தனயனுக்காக. ஆனால் ரூபாய்தான் தேவைப்படுகிறது! அதற்குத் தருமமிகு சென்னையில் உள்ள ஒவ்வொரு லயன்ஸ் கிளப்பும் தலைக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தால் பெரும் புண்ணியத்தைக் கட்டிக் கொள்ளலாம்.'

நங்கநல்லூர் கிளை லயன்ஸ் சங்கம் தொடங்கிய அன்று, தொடக்க விழாவின்போதே இந்தச் சோதனை. ஜெயின் கல்லூரி முதல்வர் ஸ்ரீ ராமசந்த் தலைவராகவும் மீனம்பாக்கம் இந்தியன் ஓவர்சீஸ் பாங்கின் கிளை ஏஜெண்ட் ஸ்ரீ எம். என். கோபுலவ் செயலாளராகவும் கொண்டு தொடங்கப்பட்டுள்ள இச் சங்கம் இதனைச் சோதனையாகக் கருதவில்லை; சாதனை புரிய விரைந்தது.

பணத்தால் பணி செய்து, அப்பணியினால் சிறப்புறு கென்றே தொடங்கப்படும் இச்சங்கத்துக்கு எடுத்த எடுப்பிலேயே பணியினால் சிறக்கும் வாய்ப்புக் கிட்டியது என்றால் அது பெருமைதானே? - ரா. வி.

எடுத்தவுடன் அதில் கூடவே ஒரு நடிகையை ஒத்த அழகுடைய பெண்ணொருத்தியின் புகைப்படத்தைக் கண்டான். பரபரப்பாகக் கடிதத்தைப் படித்தான். சித்ரா தனக்குக் கல்கத்தாவில் ஒரு வேலை கிடைத்திருப்பதாகவும் அதை ஒப்புக் கொள்ளச் செல்லும் வழியில் சென்னையில் அவனுடன் பழகும் பொருட்டுச் சில தினங்கள் தங்கப் போவதாகவும் எழுதியிருந்தாள். பெங்களூர் மெயிலில் அடுத்த நாள் காலை வந்து சேருவதாகக் குறிப்பிட்டிருந்தாள். ஸ்டேஷனில் அவன் தன்னை அடையாளம் தெரிந்து கொள்ளுவதற்காகத் தன் புகைப்படத்தையும் இணைத்திருந்தாள்.

ரங்கநாதன் உள்ளத்தில் கவலை போய்விட்டது. நல்ல வேளை, பெண்களூரையும், அவலட்சணமான சூரிய குமாரியையும் விட்டு ஓடி வந்தானே! இல்லாவிடில் சித்ராவைக் காணும் வாய்ப்பையே இழந்திருப்பான்.

தன்னுடன் பொழுதைக் கழிக்க விரும்பும் சித்திராவுடன் எங்கெங்கே சுற்றலாம் என்று ரங்கநாதன் திட்டமிடத் தொடங்கினான். அவளைத் தனது வெளியூர் நண்பனின் தங்கை என்று விவரித்து அவளுக்காகப் பெரிய ஹோட்டல் ஒன்றில் நாளொன்றுக்கு இருபது ரூபாய் வாடகையில் ஓர் அறையை ரிசர்வ் செய்தான்.

மறு நாள் சென்டிரல் ஸ்டேஷனில் சித்ராவைக் கண்டான். படம் எந்தவிதத்திலும் அவள் அழகை மிகைப்படுத்திக் காட்டவில்லை என்பது தெரிந்தது. அவளிடமிருந்த தோல் பெட்டியை அவன் வாங்கிக் கொண்டான். அவளுடன் நடப்பதே அவனுக்குப் பெருமையாக இருந்தது. அத்தகைய அழகியின் காதலைப் பெறுவதற்காகவே அவன் இத்தனை ஆண்டுகளாகத் தன் வாழ்வில் பெண்களையே ஒதுக்கித் தவம் இருந்ததாகத் தோன்றியது.

டாக்ஸியில் ஹோட்டலை அடைந்தனர். வரவேற்பாளர் ஒரு ரிஜிஸ்தரை நீட்டினார். அவன் சித்ராவைப் பற்றிய விவரங்களை அதில் எழுதினான். வரவேற்பாளர் சித்ராவைக் கையெழுத்திடச் சொன்னார். அவள் ஒரு கணம் தயங்கிப் பின் கையொப்பமிட்டாள்.

பணியாள் பெட்டியுடன் வந்து அறையைத் திறந்துவிட அவர்கள் உள்ளே சென்றனர். சித்ரா, ''உங்களுக்குச் சற்றும் முன் யோசனையே இல்லை. என்னுடைய உண்மைப் பெயரையா கண்ட கண்ட ஹோட்டலிலெல்லாம் கொடுப்பீர்கள்?'' என்று சினந்தாள். ''மன்னிக்கணும், சித்ரா! உண்மையில் எனக்கு இதில் அநுபவமே இல்லை'' என்று கூறிய ரங்கநாதன் சிரிக்க முயன்றான்.

சுவரில் பொருத்தியிருந்த கண்ணாடியில் பார்த்துத் தனது தலையை ஒதுக்கிக் கொண்ட சித்ராவின் மோகன உருவம் அவனுக்கு மோகமூட்டியது. அவள், ''உங்கள் கடிதம் ஒவ்வொன்றையும் நான் பன்முறை படித்திருக்கிறேன். இவ்வளவு நன்றாக எழுதும் நீங்கள் ஓர் எழுத்தாளனாகாதது விந்தையே! உங்கள் பேச்சும் உங்கள் எழுத்தைப் போலவே சிறப்பாக இருக்குமானால், நீங்கள் பெரிய அரசியல்வாதியாக ஆகலாம்'' என்றாள்.

''உங்களைப் பார்த்தபின் பேசவும் முடியுமா? உங்களை இப்படியே பார்த்துக் கொண்டிருப்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வேன்.'' — ரங்கநாதனுக்குத் திரையில் கண்ட காதல் காட்சிகள் நினைவுக்கு வந்தன.

''எனக்காக என்ன வேண்டுமானாலும் செய்வீர்களா?''

''உன்னை ஒத்த பெண்களின் கண் விழி ஏவலை யாரால் தட்ட முடியும்?''

''அப்படியா?'' சித்ரா அருகில் நெருங்கி வந்தாள்.

அறைக் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. ரங்கநாதன் கதவைத் திறந்தான். பணியாள் ஒருவன் வெளுத்த படுக்கை விரிப்புகளுடனும் தலையணை உறைகளுடனும் உள்ளே நுழைந்தான். அவன் படுக்கையைச் சீர்செய்து சென்றபின், ரங்கநாதன், ''குளித்துவிட்டு வருகிறீர்களா? காலை உணவுக்கு நேரமாகி விட்டதே!'' என்றான்.

சித்ரா, ''சற்று ஓய்வு எடுத்தபின் குளிக்கிறேன். பசியே இல்லை. காப்பி மட்டும் கொண்டு வரச் சொல்லுங்கள்'' என்றாள். ரங்கநாதன் டெலிபோனில் காப்பி கொண்டு

வருமாறு பணித்த பின் அவர்கள் தங்கள் உரையாடலைத் தொடர்ந்தனர்.

ரங்கநாதனுக்குச் சித்ராவை மிகவும் பிடித்து விட்டது. அழகும் அறிவும் ஒருங்கே இணைந்த அவள் — தமிழ் தெரியாத கேரளப் பெண்ணாயிருந்தாலும் — அவனுக்கு இசைந்த மனைவியாக இருக்க மாட்டாளா? இப்போது நடப்பது போல் அவர்கள் ஆங்கிலத்திலேயே பேசிக் கொள்ளலாம். பேறு நட்பு காதலாகப் பரிணமித்து மணவறையில் அவர்களை ஒன்று சேர்க்கப் போகிறது. சித்ராவுடன் பேசும் பொழுதே அவன் மனம் கற்பனையில் ஈடுபட்டது.

கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. காப்பியை எதிர்நோக்கிக் கதவைத் திறந்த ரங்கநாதன் திடுக்கிட்டான். அறைக்குள் ஐந்தாறு போலீஸ் அதிகாரிகள் நுழைந்தனர். 'இது கண்ணியமான ஹோட்டல்தானே!... அவர்கள் எந்தச் சட்டத்தின் கீழாவது ஒரு பெண்ணுடன் தனியாக இருப்பது பற்றி ஏதாவது குற்றம் சாட்டி வழக்குத் தொடர்ந்தால், அதிலிருந்து தன்னுடைய நல்ல பெயர் கெடாமல் எப்படித் தப்புவது?' ரங்கநாதன் செயலிழந்து நின்றான். அதிகாரிகளுள் ஒருவர் அவனிடம் சொன்னார்: ''கேரள போலீஸாரால் பல சதித் திட்டங்களுக்காகத் தேடப்படும் நக்ஸலைட் சித்ராவையும், அவள் தலைமறைவதற்கு உடந்தையாக இருந்த குற்றத்துக்காக உங்களையும் கைது செய்கிறோம்.''

பிரமையடைந்த நிலையிலும் ரங்கநாதனால் விதியின் சதியை நொந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை. சிலர் காதலில் வெற்றி அடைந்து குடும்பச் சிறையில் சிக்கிக் கொள்வதும், சிலர் காதலில் தோல்வியுற்றுக் குடும்பத் தளைகளிலிருந்து தப்பிவிடுவதும் அவனுக்குத் தெரியும். ஆனால் காதலை நாடுவது சிறையில் வாடுவதில் முடியலாம் என்று அவனுக்குத் தோன்றவேயில்லையே!

வட்டமேஜை

□ இக்குறிப்பிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது.

நமது மாண்புமிகு முதலமைச்சர் சென்ற 23 வருடங்களாகத் தடை செய்யப்பட்டுள்ள ''இராவண காவியம்'' என்ற நூலின் மீதான தடை உத்தரவு நீக்கப்படும் என்று அறிவித்துள்ளார். அதுமட்டுமின்றி, இம்மாதிரி அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டுள்ள பல்வேறு புத்தகங்கள் விரைவில் தடை உத்தரவின்று நீக்கப்பட்டு விடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இப்புத்தகங்கள் யாவும் ஆஸ்திக அன்பர்களின் மனத்தைப் பெரிதும் புண்படுத்தும் வகையிலும், இந்து தெய்வங்களை இழிவு படுத்தும் முறையிலும் எழுதப்பட்டவை.

விரைந்து செயல்படுத்த வேண்டிய ஆக்க வேலைக்கான திட்டங்கள் பல இருக்க அவற்றில் கவனம் செலுத்தாமல், ஒரு குறிப்பிட்ட மதக் கோட்பாடுகளை அவமதிக்கும் வகையில் அரசாங்கம் நிதானம் இழந்து செயல்படலாமா? அரசாங்கத்தின் இப்போக்கை யாவரும் வன்மையாகக் கண்டனம் செய்ய வேண்டும்.

சென்னை,
19–5–71 ரா. ஜெயராமன்

காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் ஆலயத்தில் உள்ள பிராகாரத்தில் ''பிரசித்தமான மாமரம் (மாவடி சேவை) உள்ளதை அறிவீர்கள்.

அந்த மரத்தைச் சுற்றிலும் சுவர் சிற்ப வேலைப்பாடு கொண்டு அமைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து இந்தியாவின் மூலை முடுக்குகளிலிருந்து வந்து தரிசனம் செய்பவர்கள் பரவசமடைவார்கள்.

மேற்படி இடத்தைச் சுற்றிலும் ஏழு அடி உயரத்துக்கு ''ஸிங்க் ஷீட்'' கொண்டு அடைத்துக் கதவு அமைத்து, பத்து அல்லது ஐந்து பைசா டிக்கட் போட்டு வசூலிக்க ஏற்பாடுகள் அனுமதிக்கப்பட்டு வேலை தொடங்கி நடைபெறுகிறது.

காஞ்சியில் பிரசித்தமான ராஜசிம்மன் காலத்தில் கட்டப்பட்ட கைலாசநாதர் ஆலயம், கதவு இல்லாக் கோயிலாக அமைந்தால் எந்த நேரத்திலும் இறைவனைத் தரிசிக்கலாம் என்று ஆழ்ந்த கருத்துடன் உருவாக்கப்பட்டதாக இன்று காலை ரேடியோவில் கேட்டேன். அதே காஞ்சியின் ஏகாம்பரேசுவரரைத் தகட்டினால் மறைத்து டிக்கட் வாங்கிய பிறகு தான் உள்ளே போய்த் தரிசிக்க வேண்டும் என்ற முடிவு தி.மு.க. ஆட்சியில் நடக்கிறது.

காஞ்சி–2
15–5–71 அ. குமரகுரு

□ ஓமலூரிலுள்ள அரசினர் மாணவர் விடுதி ஒன்றுக்கு நான் என் நண்பனைக் காணச் சென்றிருந்தேன். வழியில் 'மல்லிகைப் பூப்போல மலிவான அரிசி வீடு தேடி வரும் காலம் இது' என்ற தேர்தல் சுவரொட்டியைப் பார்த்து விட்டு விடுதிக்குள் சென்றேன். மாணவர்கள் பலர் உணவைக் கழிவுநீர்த் தொட்டியில் கொட்டிக் கொண்டிருந்தனர். மக்களுடைய வரிப் பணம் இப்படி வீணாகிறதே என்று எண்ணிக் கொண்டேன். எனது நண்பனை அழைத்து 'ஏன் இப்படி உணவை வீணடிக்கிறீர்கள்?' என்றேன். எனது நண்பன் உணவுத் தட்டத்தை முகர்ந்து பார்க்கச் சொன்னான். முகர்ந்தேன். துர்நாற்றம் வயிற்றைக் குமட்டியது. மல்லிகைப் பூப் போன்ற அரிசியாம்! ஐந்தாறு புழுக்கள் வெந்து கிடந்தன தட்டத்தில்! கல்லைப் பொறுக்கித் தந்தான் என் நண்பன். சுமார் ஐம்பத்தைந்து கற்கள். வீடு தேடி வரும் மல்லிகைப் பூப் போன்ற அரிசி அரசினர் விடுதியைத் தேடிச் செல்லவில்லையோ? மாணவர்கள் ஹாஸ்டலிலிருந்து பள்ளிக்குச் சென்று படிப்பதா, இல்லை பட்டினி கிடந்து சாவதா?

ஓமலூர்,
28–4–71 ஓ. பரசுராமன்

மரத்துக்கு ஆபரேஷன்

மாற்று மரக் கன்றுகள் நடப்படுகின்றனவா என்பதில் கவனம் காட்டாமல் மரங்களை வெட்டித் தள்ளுவதில் மன்னர்களாய் விளங்குகிறோம் நாம். ஆனால் ஜெர்மனியில் மரத்தைப் பாதுகாக்க எத்தனை சிரமம் எடுத்துக் கொள்ளுகிறார்கள்!

ரூர் பகுதியில் பிரக்கர் பிலீட் என்னுமிடத்தில் ஒரு அபூர்வமான மரம் இருக்கிறது. 1000 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பதால் மிகுதி பட்டுவிட்டது. செத்துவிடுமோ என்று அஞ்சிய நகரசபையினர் மரங்களுக்குச் சிகிச்சை செய்வதில் பெயர்பெற்ற மிச்சல் மாரர் என்பவருக்கு அவசர அழைப்பு விடுத்தனர். அவரும் தமது மூன்று உதவியாளர்களுடன் வந்து சேர்ந்தார். 'கிழட்டு' மரத்திலிருந்து பட்டுப்போன பகுதிகளை ஆபரேஷன் செய்து அகற்றினார். பின்னர் ரணமான பகுதிகளில் பூச்சி பிடிக்காமல் இருக்க மருந்து தெளித்தார். மரம் மீண்டும் தழைத்துத் துளிர் விட விசேஷ ரசாயன உரங்களைச் சுற்றிலும் செலுத்தினார். தன் பலத்தில் நிற்பதற்கான வலு ஏற்படும்வரை இம் மரத்துக்குச் சுற்றிலும் சில முட்டுகள் கொடுத்து நிறுத்தினார். "கவலைப்படாதீர்கள்! மரம் பிழைத்து விடும்" என்று மக்களுக்கு ஆறுதல் கூறி மர நோயாளியைத் தட்டிக் கொடுத்துவிட்டு நிபுணர் மாரர் புறப்பட்டார். இந்த மரத்துக்கான சிகிச்சைக்கு அவர் எவ்வளவு 'பில்' அனுப்பினார் என்று தெரியவில்லை. ஆனால் ராக்லிங்ஹாசன் என்னுமிடத்தில் 15வது நூற்றாண்டைச்சேர்ந்த மரத்துக்குச் சிகிச்சை செய்ய அவர் ரூ. 30,000க்கு 'பில்' அனுப்பினார் - யூ.பி.எஸ்.



பிறப்பவர் எல்லாம் இறப்பது உறுதி! இறப்பவருக்கெல்லாம் 'மஸாஜ்' உறுதி!



அமெரிக்காவில் பல ஆஸ்பத்திரிகளில், நோயாளி இறந்து போனால் உடனே அவர் இருதயத்தைப் பிசைந்துவிட்டு அதை இயங்கச் செய்ய முடியுமா என்று பார்ப்பார்கள்!

சில சந்தர்ப்பங்களில் நோயாளியை இப்படி உயிர்ப்பிக்க முடியும் என்பதால் இந்த முயற்சியை மேற்கொள்ளுமுன்னர் எந்த ஒரு நோயாளியையும் இறந்துவிட்டதாக அதிகார பூர்வமாகக் கருதவே மாட்டார்கள்!

குறிப்பிட்ட ஒரு நோயாளியின் டாக்டர், 'ஒருவேளை இந்நோயாளி இறக்க நேரிட்டால் இவருக்கு இருதய மஸாஜ் வேண்டாம்' என்று மெனக்கெட்டுக் கேட்டுக் கொண்டால் ஒழிய இறந்தவரெல்லாம் புனர்வாழ்வுக்கான இந்த இறுதி முயற்சியைப் பெறுவது உறுதி! (டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன் கூறியது)

"என்ன உனக்குமா?"

கோ கந்தசாமி



சரக்கு ஒன்று கப்பலிலே இறங்குமதி ஆச்சோ?
ஜனங்களுடைய கண்களெல்லாம் கோவைப்பழமா போச்சோ?
அரக்கிக்கொண்டு கைகளினால் அவசரமாய் ஓடி
ஆஸ்பத்திரியில் நிற்கிறார்கள் கும்பலாகக் கூடி.
வாத்து முட்டை அளவில் கண்கள் வீக்கமாகிப் போக]
விழியைமூடி வாயைத்திறக்கும் நிலையில் மக்கள் ஆக
பத்தி இறக்கிப் பார்க்கிறார்கள் எதிரில் வரும்பிறரை
"என்னஉனக்கும் வந்திடுதா?" என்கிறார்கள் பலரை!

'டை'யின் கதை

இங்கிலாந்து மன்னர் ஒருவர் வேட்டைக்குச் சென்றார். ஒரு மிருகத்தைச் சுடத் துப்பாக்கியை எடுத்துக் குறி பார்த்தார். அப்பொழுது துப்பாக்கியைச் சரியாகப் பிடித்துக் கொள்ளாததால், துப்பாக்கியின் கைப் பிடி தவறி இவரைத் தாக்கியதில் கழுத்தெலும்பு முறிந்தது. அதோடு அவர் வீடுதிரும்பிவிட்டார். அடுத்தநாள் ஒரு முக்கியமான மசோதாவின் மீது மந்திரிசபையில் பேசவேண்டியிருந்தது.


வேட்டையாடும் போது கழுத்தெலும்பு முறிந்து ஏற்பட்ட காயத்துக்குக் கட்டுப் போட்டுக் கொண்டு மந்திரி சபையில் பிரசன்னமாயிருக்க மன்னர் விரும்பவில்லை. மன்னரின் தோற்றத்தை அது சற்று விகாரமாகக் காட்டுமல்லவா? அதற்காக மன்னர் ஒரு யுக்தி செய்தார். கழுத்தைச் சுற்றி ஒரு நீண்ட பட்டுத் துணியால் கட்டுப் போட்டுத் தொங்க விட்டுக் கொண்டு சபைக்குச் சென்றார். அது மன்னருக்கு ஒரு கவர்ச்சியைத் தந்தது. சபையில் உள்ள பிரமுகர்களின் கவனத்தை ஈர்த்தது. அதுவே நாளடைவில் 'டை'யாக மாறியது.



ஆதாரம்: டிட்பிட்ஸ். தகவல்: விஜயம்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: R. Sadasivam

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



Sunsilk cares– with 3 special shampoos

Pick the one that's perfect for you

Sunsilk Lemon Shampoo
For Greasy Hair: Gently washes out excess grease... gives you days of clean, bouncing, silken hair.

Sunsilk Tonic Shampoo
For Dry Hair: Contains Allantoin to nourish your hair... revives that silken lustre, leaves hair softly glowing.

Sunsilk Beauty Shampoo
For Normal Hair: Perfectly balanced to keep your hair in beautiful condition, weaving silk into every strand.



Sunsilk – more than a shampoo, a cosmetic for your hair

Quality Products by HINDUSTAN LEVER

LINTAS-SS. 11-140